மாலை 46 மணி 11 நவம்பர் 2004 விலை ரூ.10

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை வெளியீடு



கந்தசஷ்டி

17-11-2004

## அண்ணாமலையா? அண்ணும் மலையா?

- சுகிசிவம்

அருச்சனைக் குங்குமத்துடன்
தீபாவளி மலர்
120 பக்கங்கள்
ரூ.10/-

உள்ளே...

ஸ்ரீ காஞ்சி மகாப்பெரியவர் அருளுரை

ஸ்ரீ சிருங்கேரி சங்கராச்சாரியார் அருளுரை

ஏ.எம்.ஆர்.

பாலகுமாரன்

ஸ்ரீகவி

சுதாசேஷய்யன்

ஆட்சிலிங்கம்

குடவாயல் பாலசுப்பிரமணியன்

மற்றும்

பிரபலங்களின் எழுத்தோவியங்கள்



## கார்த்திகை தீபம் 26-11-2004


நல்வாழ்த்துக்களுடன்....
கோபுர கலசங்கள், விமானங்கள், கவசங்க
கொடி மரம் போன்றவற்றிற்கு சுற்றுப்புற சூழல் மாசுபடாம
மிகக்குறைந்த செலவில்
நீண்ட நாட்களுக்கான உத்திரவாதத்துடன் கூடி
Gold Platingகிற்
Thejus
(Near Jeeva Park) 'Park View', 3rd Floor, #85, G.N. Chetty Road, T. Nagar, Chennai - 600
Tel: 28 15 6370 Mobile: 98400 21384, www.thejus.com Timings: 9.30 am to 7.00 pm SUNDAY HOL



திருக்கோயில்

திருவள்ளுவர் ஆண்டு 2035 தாரண - கார்த்திகை
மாலை-46 மணி -11 நவம்பர் 2004

# அன்பார்ந்த வாசகப் பெருமக்களே!

நவம்பர் மாதத் திருக்கோயில் இதழை தீபாவளிச் சிறப்பிதழாக அதிகப் பக்கங்களோடு அதே விலையில் வெளியிடுவதற்கு ஊக்குவித்தது உங்களைப் போன்ற வாசகர்களின் பேரார்வமும், பேராதரவும் ஆகும்.

இந்து சமய அறநிலையத்துறை வெளியீடாகிய 'திருக்கோயில்' திங்கள் இதழ் 1958 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் தொடங்கப்பட்டது. கடந்த 46 ஆண்டுகளாக வெளிவரும் திருக்கோயில் இதழுக்கு இதுகாறும் சிறப்புமலர் வெளியிடப்பட்டதில்லை. அறநிலையத்துறையில் பொற்காலச் சரித்திரம் உருவாக்கி வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் நல் ஆசியோடு 'திருக்கோயில்' தீபாவளி சிறப்புமலர் வெளிவர வேண்டும் என்று நான் பெரிதும் விரும்பி முயற்சிகள் மேற்கொண்டேன்.

நாளுக்குநாள் பெருகிவரும் வாசகப் பெருமக்களாகிய நீங்கள் அளித்த ஊக்கத்தாலும், விளம்பரங்கள் தந்து உதவும் வணிக நிறுவனங்கள் அளித்த ஆதரவாலும் நாங்கள் மேற்கொண்ட முயற்சி முழு வெற்றியாகி உள்ளது. திருக்கோயில் இதழ் வரலாற்றில் முதன்முதலாகத் தீபாவளி சிறப்பு மலர் சிறப்புற உருவாகி உங்களை மகிழ்விக்க வருகை தந்துள்ளது.

அஞ்ஞான இருள் ஒழிந்து, அறச்சுடர் ஒளிர்ந்த இந்நன்னாளில் தீபங்களை வரிசையாக வைத்துப் பரம்பொருளை வழிபடுவதால் இந்நாள் தீபாவளி எனப் பெயர் பெற்றுள்ளது.

நவம்பர் மாதம் என்பது பண்டிகைப் பருவத்தின் உச்சமாகும்! கண்ணனும், குமரனும் அசுரர்களை வீழ்த்தியருளிய தீபாவளியும், கந்தர் சஷ்டியும் இம்மாதப் பெருவிழாக்கள். இல்லங்கள் தோறும் பொங்கும் மகிழ்ச்சி வெள்ளம் புனித கங்கையும், காவிரியும் போன்று பிரவாகமெடுக்கும் இப்பருவத்தில் அவை பற்றிய கட்டுரைகளும், இப்புண்ணிய நதிகளில் நீராடல் குறித்த காஞ்சி மகாப் பெரியவரின் சிறப்பு அருளாசியும், சிருங்கேரி ஜகத்குரு சங்கராச்சாரியார் அருளிய இறைவனின் அருள் தேவை குறித்த கட்டுரையும் இவ்விதழின் பண்டிகை வாழ்த்துக்கள்.

தீபாவளி கேதார விரதம், கந்தர் சஷ்டி விரதம் போன்றவற்றின் மகிமை விளக்கப்பட்டிருக்கிறது. திருஅண்ணாமலை குறித்த திரு சுகி.சிவம் அவர்களின் சிறப்புக் கட்டுரையும், திரு பாலகுமாரனின் தியான ஒழுக்கம் பற்றிய ஆக்கமும் தீபாவளி பண்டிகை ஆரவாரத்தை ஒருபுறமும், சுடர்விடும் கார்த்திகை தீபத்தின் ஆழ்ந்த அமைதியை மற்றொரு புறமும் ஒருங்கே விவரிக்கின்ற வாழ்வியல் பற்றிய ஆய்வாகும்.

இம்மாதக் காலச்சுவடு முன்னாள் பாரதப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி அவர்கள், கபாலீச்சரம் வந்து சென்றதை படம் பிடித்துக் காட்டுகிறது.

தீபாவளிப் பண்டிகைக்கே உரிய வண்ணமிகு வாணவெடிகளாகவும், சிதறும் மகிழ்ச்சி மத்தாப்புக்களுமாக திரு ஏ.எம்.ஆர்., திரு ஸ்ரீகவி, திருமதி சுதா சேஷய்யன் மற்றும் பலரின் சிறப்புக் கட்டுரைகள் திகட்டாத வகையில் தரப்பட்டுள்ளன.

மானிடரோடு மற்ற உயிரையும் சமமெனக் கருதும் மாண்புமிகு தமிழக முதல் அமைச்சர் அவர்களின் உள்ளத்தில் தோன்றிய கருத்தின் செயலாக்கமே முதுமலையில் நிகழும் யானைகள் சிறப்பு முகாம். திருக்கோயில்களில் இறைத் தொண்டாற்றியும், மனிதனுக்குப் பணியாற்றியும் களைத்த யானைகளுக்கு ஓய்வு அவசியம் தேவை என்ற உன்னத உணர்வினை, அறிவியல் உண்மையினை முதன்முதலாக உணர்த்தி, யானைகள் சிறப்பு நல முகாமை இந்த ஆண்டும் எதிர்வரும் நவம்பர் 18 ஆம் தேதி முதல் துவங்கி 48 நாட்கள் நிகழ்த்துவது மாபெரும் ஜீவகாரண்ய அறப்பணியாகும்.

இத்திருக்கோயில் இதழுடன் அம்பாளின் நவராத்திரி அருச்சனைப் பிரசாதம் இணைக்கப்பட்டுள்ளது. பெற்று மகிழ்க! அருள் பெறுக!!. வாசகர்களின் குடும்பத்தினர் எல்லா வளமும், நலமும் பெற இறையருளை வேண்டித் தீபாவளி நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்புடன்,

(ஜி.இராமகிருஷ்ணன், இ.ஆ.ப.)
ஆணையர்,
இந்து சமயஅறநிலைய ஆட்சித்துறை

119, உத்தமர் காந்தி சாலை,
சென்னை-600 034.

# தீபாவளிக்கு காவேரி ஸ்நானம்

ஸ்ரீ காஞ்சி மகாப் பெரியவர்

ராமாவதாரத்தில் ராவணனைக் கொன்றதால் ப்ரமம ஹத்தி, சாயாஉறத்தி தோஷங்கள் உண்டாயின. கிருஷ்ணாவதாரத்தில் மகா வீரனான நரகாசுரனை கொன்றதால் வீர உறத்தி தோஷத்துக்கு ஆளானார். அந்த தோஷங்கள் போக சிவனைப் பிராயச்சித்தம் கேட்டார். ஐப்பசி மாதத்தில் (துலா மாதம்) தினமும் அருணோதயத்திலிருந்து உதயாதி 6 நாழிகை (2 மணி 24 நிமிடம்) 66 கோடி புண்ணிய தீர்த்தங்களும் காவேரியில் வாசம் செய்கின்றன. அதிலே அந்நேரத்தில் ஸ்நானம் செய்தால் அனைத்து தோஷங்களும் போய் விடும் என்றார். அவ்வாறே திருமால் காவேரியில் ஸ்நானம் செய்து தோஷம் நீங்கினார் எனக் காவேரி புராணத்தில் தெரிவிக்கப்படுகிறது. இந்தப் பெருமை மிகு 'காவேரி ஸ்நானத்திற்கு' ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிச்வர ஸ்ரீ சந்திசேகரேந்திர ஸரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகளின் அருள் வாக்கு பின்வருமாறு.

"தீபாவளிக்குக் கங்கையோடு காவிரி சம்பந்தம் இருக்கிறது. அன்றைக்கு ஒரு நாள் மட்டும் எல்லா வெந்நீரிலும் அருணோதயத்திலிருந்து சூரியோதயம் வரை ஒரு முகூர்த்தம்- அதாவது இரண்டு நாழிகை- கங்கை இருக்கிறாள் என்றால், துலா மாதம் முழுக்கவே அருணோதயத்தில் ஆரம்பித்து ப்ராதக்காலம் முடிகிற வரையில் அதாவது சூரியன் உதித்து ஆறு நாழிகை வரை காவேரியில் கங்கை உட்பட சகல தீர்த்தங்களும் இருக்கின்றன.

அதனால் தீபாவளியன்று முதலில் நாம் அருணோதயத்தில் எண்ணெய் தேய்த்துக் கொண்டு கங்கா ஸ்மரணத்தோடு வெந்நீர் ஸ்நானம் பண்ண வேண்டும். அப்புறம் சூரியோதயம் ஆன பின், ஆறு நாழிகைக்குள், பச்சை ஜலத்தில் இன்னொரு ஸ்நானம் செய்ய வேண்டும். இந்த ஸ்நானத்தின் போது துலா காவேரியை ஸ்மரித்துக் கொண்டு பண்ண வேண்டும். முதல் ஸ்நானத்தில் நரகாசுரன், பூமாதேவி, சத்யபாமா, கிருஷ்ணர் எல்லோர் நினைவும் வரும். இரண்டாம்



ஸ்நானத்தில் பரமேச்வரன் நினைவும் வந்துவிடும்.

இந்த புண்ணிய ஸ்மரணம் தான் பெரிய ஸ்நானம். உள் அழுக்கையெல்லாம் அகற்றி ஜீவனை குளிப்பாட்டிப் பரிசுத்தி பண்ணுவது அதுதான். "கோவிந்தேதி சதா ஸ்நானம்", என்பதுண்டு. இப்படி சொன்னதால் வெளியே இருக்கிற கங்கா, காவேரியெல்லாம் அவசியமில்லை. பிரயோஜனமில்லை என்று அர்த்தம் பண்ணிக் கொண்டு விடக் கூடாது. அந்த கோவிந்தனேதான் நம்மிடம் கருணையோடு நமக்கு கங்கா ஸ்நானத்தைக் கொடுத்துத் தானே காவிரி ஸ்நானம் பண்ணிக் காட்டியிருக்கிறான்".

❖

யார் நமக்கு வாழ்க்கையில் நல்லதைச் செய்து கொடுத்து வழிகாட்டியாக இருக்கின்றாரோ அவரே ஜெகத்குரு. அப்படி வாழ்ந்தவர் ஸ்ரீ கிருஷ்ண பகவான்.

# யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம்

## ஓர் மகத்தான வெற்றி!



ஜி. இராமகிருஷ்ணன், இ.ஆ.ப.,
ஆணையர்
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை

இயற்கையின் ஓர் அங்கமாக மனிதர்கள் மட்டுமல்லாமல், விலங்குகளும், மரம் செடி கொடிகளும் உள்ளன என்பதை நாம் அறிவோம்.

'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று பயிர்களுக்காக கூட பரிதாபப்பட்ட வள்ளலார் போன்ற பெருமக்கள் வாழ்ந்த பூமி இது.

மனிதர்கள் மட்டுமல்லாமல், ஏனைய உயிரினங்களும் நம்முடைய அன்புக்கு உரியவைதான் என்ற அடிப்படையில் விலங்குகளிடத்தில் நாம் கொண்டிருக்கும் அன்பும் கருணையும் அனைவரும் அறிந்ததுதான்.

- மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

திருமயிலையில் ஒரு யானை, யானைப்பாகனால் கடுமையாக நடத்தப்படுவது குறித்தும், பிச்சை எடுப்பது குறித்தும், அதனை முறைகேடாக பயன்படுத்துவது குறித்தும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வந்தது.

அந்த யானைக்கு சிகிச்சையும் அடைக்கலமும் அளிப்பதற்காக வண்டலூர் உயிரியல் பூங்காவிற்கு அனுப்பி வைத்ததோடு அந்த யானைப்பாகன் மீது நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிட்டதுடன் நில்லாமல் அதன் தொடர்ச்சியாக யானைகள் முறையாகப் பராமரிப்பது குறித்து நல்ல பல அறிவுரைகளை வழங்கியுள்ளார் மாண்புமிகு தமிழக முதலமைச்சர்.

**யானைகளின் உடல் நலம்**

யானைகள் உடல் நலத்தைத் தொடர்ச்சியாக கண்காணிக்கவும், தேவையான மருத்துவ ஆலோசனையும் சிகிச்சையும் அளிக்கவும், திறமை வாய்ந்த கால்நடை மருத்துவர்களைக் கலந்து ஆலோசிக்க இந்து சமய அறநிலையத்துறைக்கு ஆலோசனை வழங்கினார் மாண்புமிகு தமிழக முதலமைச்சர்.

யானைகள் சீரற்ற, கடினமான தரையில் நிற்க வைக்கப்படுவதாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டபோது அவற்றின் கால்களில் சிராய்ப்போ, புண்ணோ ஏற்படாதவாறு மண் தரையில் அல்லது புல் வெளியில்தான் அவை நிறுத்தப்படவேண்டும் என்று அறிவுரை வழங்கினார்கள்.

குடிப்பதற்கும் குளிப்பதற்கும் போதுமான



அளவு தண்ணீர் வழங்கப்படுவதன் மூலம் யானைகளின் உடலும் உள்ளமும் எப்பொழுதும் குளிர்ச்சியாக இருக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்கள்.

திருக்கோயில்களில் யானைகளைத் தொடர்ந்து பணியில் ஈடுபடுத்தாமல், ஒரு நாளில் குறிப்பிட்ட கால அளவுக்கு மட்டுமே அவை பணியில் ஈடுபடுத்தப்பட வேண்டும் எனவும், அவற்றிற்குப் போதுமான ஓய்வு தரப்பட வேண்டும் எனவும் உத்தரவிட்டுள்ளார்கள்.

### யானைகளின் மன நலம்

தமிழ்நாட்டுத் திருக்கோயில்கள், திருமடங்கள் மற்றும் தனியார்களிடம் உள்ள அனைத்து யானைகளும் கொண்டு வரப்பட்டு



ஒரு மாதகாலம் அவற்றின் உடல் நிலை பேணப்பட்டு புத்துணர்ச்சி அளிக்கும் பணி மேற்கொள்ளப்படும் எனவும்,

அந்த ஒரு மாத காலத்தில் யானைகளுக்கு புத்திளமை அளிக்கும் சிறப்பு உணவும் மருத்துவ வசதியும் வழங்கப்படும் எனவும்,

யானைகளின் உடல் நலமும் மன நலமும் காக்கப்படவேண்டும் எனவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார்கள்.

### யானைகளின் புத்துணர்ச்சி

யானைகள் வழக்கமாக ஆற்றிவரும் வேலைப்பளுவிலிருந்து ஒரு மாத காலத்திற்கு அவைகளுக்கு முழு ஓய்வு அளிக்கப்படும் எனவும்,

அந்த ஒரு மாத காலம் அளிக்கப்படும் ஊட்டச்சத்து உணவின் மூலமும், ஓய்வின் மூலமும் அந்த யானைகள் தத்தம் இருப்பிடங்களுக்குத் திரும்பிச் செல்லும்போது புத்துணர்ச்சியோடு தங்கள் பணிகளை மேற்கொள்ள இயலும் எனவும் தெரிவித்தார்கள்.

### யானைகளும் சூழலும்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் மேற்கண்ட ஆணைகள் மற்றும் அறிவுரைகளின்படி இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, வனத்துறை மற்றும் கால்நடைத்துறை ஒத்துழைப்போடு தமிழகத்திலுள்ள திருக்கோயில்களின் யானைகள் மற்றும் தமிழகத்திலுள்ள விரும்பும் தனியார் யானைகளுக்கு நீர்வசதி கொண்ட, ஏற்ற சுற்றுச்சூழல் அமைந்த முதுமலை வனவிலங்கு சரணாலயத்தில் (தெப்பக்காடு) யானைகள் நல்வாழ்வு முகாம் சுமார் பனிரெண்டு ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டது.

### யானைகள் முகாம்

இந்த யானைகள் சிறப்பு நல வாழ்வு முகாம் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்களால் இந்து சமய அறநிலையத்துறை அலுவலர்கள், வனத்துறை அலுவலர்கள், கால்நடைத்துறை அலுவலர்கள் மற்றும் வன ஆர்வலர்கள் முன்னிலையில் 16.11.2003 முற்பகல் எளிய நிகழ்ச்சியுடன் துவக்கி வைக்கப்பட்டது.

இந்த யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாமில் திருக்கோயிலுக்குச் சொந்தமான 37

பரமாத்மா மட்டுமே மெய்ப்பொருளாகும். அதைத் தவிர அனைத்து உலகமும் பொய்ப் பொருள்தான். அழியக் கூடியவை தான்.

யானைகளும், தனியாருக்குச் சொந்தமான 18 யானைகளும், வனத்துறைக்குச் சொந்தமான 45 யானைகளுமாக மொத்தம் 100 யானைகள் பங்கேற்றன.

இம்முகாமில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்திரவிட்டவாறு யானைகளின் உடல்நலம் பேணப்பட்டு புத்துணர்ச்சி அளிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. இவ்வொரு மாதக் காலத்தில் யானைகளுக்கு புத்திளமை அளிக்கும் சிறப்பு உணவும், மருத்துவ வசதியும் வழங்கப்பட்டது. இதன் மூலம் யானைகள் உடல்நலமும், மன நலமும் ஆரோக்கியமான சூழ்நிலைக்கு கொண்டு வரப்பட்டது. இம்முகாம் வழக்கமான வேலை பளுவிலிருந்து யானைகளுக்கு முழு ஓய்வு அளிக்கப்படும் சூழ்நிலையை ஏற்படுத்தியது. இம்முகாம் காலத்தில் அளிக்கப்பட்ட ஊட்டச்சத்து உணவு மற்றும் ஓய்வின் மூலம் யானைகள் திரும்ப இருப்பிடத்திற்குச் சென்று புத்துணர்ச்சியோடு உள்ளன.



**உணவு**

இம் முகாமில் பங்கேற்ற யானைகள் ஒவ்வொன்றிற்கும் அரிசி, பச்சைப்பயிறு, கொள்ளு, அஸ்தசூரணம், சயவனபிராசம், பயோபூஸ்ட்டி போலஸ், லிவ்.எஸ். 2 போலஸ், புரோட்டின், வைட்டமின், மினரல் மிக்சர், உப்பு, மஞ்சள்பொடி, மற்றும் பசுந்தழைகள் ஆகியவை கலந்த சரிவிகித உணவு அளிக்கப்பட்டது.

நம்முடைய அன்புக்கும் ஆதரவுக்கும் உரிய விலங்குகளைச்சிறந்த முறையில் பராமரிப்பது நமது கடமையாகும். குறிப்பாக, நிலத்தில் வாழும் உயிர்களில் மிகப் பெரியனவாகவும், மனிதர்களுக்கு உதவிகரமாகவும் உள்ள யானைகளைப் பாதுகாப்பதும், பராமரிப்பதும் நமது இன்றியமையாத கடமையாகும் என்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி இந்த யானைகள் சிறப்பு நல வாழ்வு முகாம் சீரிய முறையில் வனத்துறை மற்றும் கால்நடைத்துறையின் ஒத்துழைப்போடு இந்து சமய அறநிலையத்துறையின் மூலம் நடத்தப்பட்டது.

**மருத்துவ சிகிச்சையும் பாராட்டும்**

யானைகளின் பல்வேறு உபாதைகளைக் களைய நவீன சிகிச்சைகள், கற்றறிந்த மருத்துவர்களைக் கொண்டு வழங்கப்பட்டு குணப்படுத்தப்பட்டன.

வெளிநாட்டு மற்றும் நம் நாட்டு சுற்றுலாப் பயணிகளும், மாணவ மாணவிகளும், வன ஆர்வலர்களும் மற்றும் பல துறை அலுவலர்களும் இம்முகாமை கண்டுகளித்ததோடு பாராட்டவும் தவற வில்லை.

### மகத்தான வெற்றி

யானைகளுக்குப் புத்துணர்ச்சி அளித்த சிறப்பு நல வாழ்வு முகாமின் வெற்றியைத் தொடர்ந்து தமிழக முதலமைச்சர் அவர்களின் யானைகள் நலவாழ்வு முகாம் மகத்தான வெற்றி பெற்றுள்ளது. இனி ஆண்டு தோறும் யானைகள் முகாம் நடத்தப்படும் என்று அறிவுறுத்தி உள்ளார்கள்.



யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம் கடந்த ஆண்டு இனிதே நிறைவேறியது.

அமைச்சர் பெருமக்கள் பங்கேற்று யானைகளுக்கு வெல்லம், கரும்பு, பழவகைகள் அளித்தும் யானைப் பாகன்களுக்கு வேஷ்டி, துண்டுகள் வழங்கியும் முகாமை இனிதே நிறைவேற்றிச் சிறப்பித்தார்கள்.

மேற்கண்டவாறு 30 நாட்கள் நடைபெற்ற யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க இவ்வாண்டு ஒரு மண்டலமாக (48 நாட்கள்) நடைபெற உள்ளது. தமிழகத்திலுள்ள திருக்கோயில்கள் திருமடங்கள் மற்றும் தனியார்களுக்குச் சொந்தமான அனைத்து யானைகளையும் இந் நலவாழ்வு முகாமில் பங்குபெறச் செய்ய அன்புடன் அழைக்கிறோம்.

கடந்த ஆண்டு போல இவ்வாண்டும் யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம் மகத்தான வெற்றி பெற அனைத்து ஒத்துழைப்பும் நல்கிட வேண்டுகிறோம்.

❖

# கல் கருடன்



கும்பகோணம் நாச்சியார் கோயில் திருநரையூர் நம்பித் திருக்கோயிலில் உள்ளது கல் கருடன். இவருக்கு பக்ஷிராஜன், பெரியதிருவடி, வைநதேயன், புள்ளரசன் என்றெல்லாம் பெயர்கள் உண்டு. அனைத்துத் திருக்கோயில்களிலும் இல்லாத வகையில் இத்திருக்கோயிலின் கருட வாகனம் சாலக்கிராம கல்லால் வடிக்கப்பட்டுள்ளது எனக் கூறப்படுகிறது. இவர் வருடம் இருமுறை பெருமாளைச் சுமந்து செல்லும் பேறு பெற்றவராக இருக்கிறார். மார்கழிப் பெருந்திருவிழாவிலும், பங்குனிப் பெருந்திருவிழாவிலும் இவர்மீது இறைவன் உலா வருகிறான். வாகன மண்டபத்திற்குப் புறப்பாடாகும்போது நான்குபேரும் பின்னர் 16 பேரும் பின்னர் கணக்கில்லாதவர்களும் சுமக்கும் வகையில் உள்ளார். இவர் மிகவும் வரப்பிரசாதி. தினமும் பெருமாள் திருவாராதனம் முடிந்த பிறகு இவருக்கு ஆராதனம் நடைபெறும். இவருக்கு ஆடிமாதம் சுக்கில பஞ்சமியில் அமுதகலசம் என்னும் கொழுக்கட்டை சமர்ப்பிக்கப்படுகிறது. இதைச் சமர்ப்பித்தால் நினைத்த காரியம் உடனே கைகூடும் எனப்படுகிறது.



ஈஸ்வரனின் திருவடி தியானத்தில் லயித்து பரமானந்தத்தை பெறுவது தான் மனித வாழ்க்கையின் இலட்சியம்.

# அண்ணாமலையா? அண்ணும் மலையா?

கடவுள் நமக்கு மிகவும் பக்கத்தில் இருக்கிறாரா? மிகவும் தொலைவில் இருக்கிறாரா? பக்கத்தில் இருப்பதாகத் தான் ஞானிகள் சொல்கிறார்கள். "நினைப்பவர் மனமே கோயிலாகக் கொண்டான்" என்கிறது தமிழ்வேதம். இவ்வளவு பக்கத்தில் இருக்கிறவர் என்றால் நெருங்குவது சுலபம் தானே. அதுதான் இல்லை! நெருங்க முடியாதவர் என்கிறார்கள் பலர். அண்ண முடியாதவர் - நெருங்கமுடியாதவர் என்கிற பொருளில் அண்ணாமலை என்ற பெயரைக் காரணம் காட்டுகிறார்கள். இது சரியா?



புத்தர் ஒரு முறை முக்தி பெறுவது மிகவும் சுலபம் என்றார். எவ்வளவு சுலபம்? என்று சீடர்கள் கேட்ட போது நிமிர்ந்து நிலவைப் பார்த்து விட்டு "இதோ இந்த நிலவை நான் பார்க்கிறேன் அல்லவா? அந்த அளவு சுலபம்" என்றார். "இவ்வளவு சுலபம் என்றால் பலகோடி மக்கள் ஏன் முக்தி பெறவில்லை" என்று கேட்டதும் "பிறகு பதில் சொல்கிறேன்" என்றார். கூட்டம் கலைந்து முடிந்து போகும் போது ஒருவரை அழைத்து "இந்தக் கிராமம் முழுவதும் சென்று எல்லோரையும் சந்தித்து அவர்களது நிறைவேறாத ஆசை என்ன என்று குறித்து கொண்டு வந்து நாளை என்னிடம் தெரிவிக்க வேண்டும்" என்றார். அவரும் ஒப்புக் கொண்டார்.

மறுநாள் கூட்டம் தொடங்கியதும் கிராம மக்களின் நிறைவேறாத ஆசைகளைப் படிக்கச் சொன்னார். குறித்து வந்தவரும் படித்தார். பலர் பலவிதமான விருப்பங்களை வெளியிட்டிருந்தனர். பிறகு கூட்டத்தைப் பார்த்து ஒருவராவது முக்தி அடைய வேண்டும் என்று கூறியிருக்கிறார்களா? என்று கேட்டார். இல்லை. பின்னர் மக்களைப் பார்த்து. "நேற்றைய உங்கள் கேள்விக்கு விடைகிடைத்ததா?... முக்தியடைவது சுலபம் என்றுதான் சொன்னேனே ஒழிய எல்லோருக்கும் அதில் ஆர்வம் இருக்கிறது என்று சொன்னேனா? இல்லை. முக்தி அடைவது மிகவும் சுலபம். ஆனால் அதில் எவருக்கும் ஆர்வம் இருப்பதில்லை. அதனால் முக்தி அடைவது இல்லை" என்று விளக்கினார்.

கடவுள் அண்ண முடியாத அண்ணாமலை என்பதும் இதே கதைதான். நெருங்குவதில் யாருக்கும் ஆர்வம் இல்லாததால் அவர் நெருங்க முடியாதவராக இருக்கிறாரே ஒழிய விலகிநிற்பது ஒன்றும் இறைவனுடைய எண்ணம் இல்லை. அப்படியானால் திருவண்ணாமலைக்கு இலட்சம் இலட்சமாக மக்கள் வருகிறார்களே! விருப்பம் இல்லாமலா வருகிறார்கள்? என்ற கேள்வி எழும். விருப்பம் எதில் இருக்கிறது.

அண்ணாமலை அண்ணலைத் தரிசனம் செய்து உலக போகங்களை அடையும் ஆர்வத்துடன் பல லட்சம் மக்கள் வருகிறார்கள். அண்ணாமலையாரை அடையவேண்டும் என்று எத்தனை பேர்கள்


சுகிசிவம்



ஒன்று சூடு. மற்றொன்று ஒளி. உயிர் உயிரோடு இருக்கும் எந்த உடம்பையும் நீங்கள் அளந்துபார்த்தால் 98.4° வெப்பம், சூடு இருக்கும். அந்த அக்கினிக்கு ஆஹுதி உணவு அன்னம். அதனை இட்டால் அந்த அக்கினி காமாக்னியாக மாறும். அதாவது மூலாதாரத்தில் இருந்த நெருப்பு சுவாதிஷ்டானத்திற்கு மாறும். அந்த நெருப்பு சுலபத்தில் அணையாது. அதனைப் புருவமத்திக்கு எடுத்து வந்தால் அதுவே ஞானாக்னியாகக் கொழுந்து விட்டு எரியும். ஆனால் அதற்கு இடையே கடக்கவேண்டிய படிநிலைகள் மூன்று. மணிபூரகம், அநாகதம், விசுக்தி. இவை காற்றும் நீரும் சேர்ந்த சக்கரங்கள். அதன்வழி காமாக்னி பயணம் செய்யும்போது பக்குவம் ஏற்பட்டு புருவ மத்தியை எய்தும்போது அது ஞானாக்னியாக மாறுகிறது. ஆனால் அந்த நெருப்பு நெற்றிக் கண்நெருப்பாக மாறுவது அவ்வளவு சுலபமல்ல.

மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், விசுக்கி, ஆக்ஞை என்னும் ஆறு ஆதாரங்களிலும் நெருப்பு பயணித்து ஆறு நெருப்பும் நெற்றி நடுவே புருவ மத்தியில் எரிகிறபோது அந்தயோகி மனிதவடிவில் கடவுள். இதுவே சுப்ரமண்யர் தத்துவம். ஆறு நெருப்புப் பொறிகளின் இணைப்பே ஆறுமுகன் என்கிற கந்த புராணம் நமது சொந்த புராணம். அதாவது நம்முள் நிகழும் ஆன்மிக அனுபவம். ஆனால் அதற்கும் மேலாக அந்த நெருப்பு துரியம் என்கிற தலை உச்சியை அடைய வேண்டும். அப்போது உயிர் நெருப்பு சூடு என்கிற வெப்பத்தை மட்டும் வெளிப்படுத்தாது ஜோதியாக ஒளியையும் வெளிப்படுத்தும்.

தலை உச்சியை உயிர்நெருப்பு எய்தும் ஞான நிகழ்வை வெளிப்படையாகப் புலப்படுத்த மலை உச்சியில் நெருப்பை வைத்து ஜோதி தரிசனம் காட்டுகிற கார்த்திகை தீபப் பெருவிழாவாகப் பெரியோர் வகுத்தனர். திருஅண்ணாமலை மலை முழுவதும் துரியத்தில் உயிர் நெருப்பை ஏற்றி வைத்த பலப்பல மகான்கள் அன்றும் இருந்தனர். இன்றும் இருக்கின்றனர். என்றும் இருப்பார்கள். உயிர்ச்சூடாக மட்டுமே உணரப் பெறும் நெருப்பை உயிரொளியாகச் சிரத்தில் ஏற்றும் ஜோதி தரிசனமே உண்மையான தீபதரிசனம். அதனைக் காண்பதே் பாபவிமோசனம். இதைப் புரிந்து கொண்டவர்க்கு அவர் அண்ணும் மலை, மற்றவர்க்கு அவர் அண்ணாமலை. ❖

வருகிறார்கள்? இரமண மகரிஷிமாதிரி ஒரு கோடியில் ஒருவர்தான் அண்ணாமலையாரை அடையும் எண்ணத்துடன் வருகிறார். அவர்களுக்கு அண்ணும் மலை, நமக்குத் தான் அவர் அண்ணாமலை.

ஏமாந்த சோணகிரி என்று ஒரு பேச்சுவழக்கு சென்னைப் பகுதியில் உண்டு. உண்மையில் சோணகிரி ஏமாந்ததாக வரலாறு இல்லை. சோணகிரியிடம் இருவர் ஏமாந்ததுதான் சுவையான வரலாறு.

திருமாலும், பரமனும் சிவபெருமானுடைய அடிமுடிகாண புறப்பட்டபோது சோணகிரிதான் அவர்களை ஏமாற்றியது. சோணகிரி என்பது அண்ணாமலையின் இன்னொருபெயர். அடிமுடி காணமுடியாதபடி பரமனும் திருமாலும் ஏமாந்த இடம் சோணகிரி. ஆனால் பக்தருக்கு மட்டும் இது ஏமாற்றாத சோணகிரி! திருமால் என்பது மனம், பிரமன் என்பது வாக்கு! மனத்திற்கும் வாக்கிற்கும் எட்டாதவன் இறைவன் என்பதால் அவர்கட்கு எட்டவில்லை! எனவே அண்ணாமலை .

ஆனால்

"ஆடிப்பாடி அண்ணாமலை கைதொழ
ஓடிப்போகும் நம் மேலைவினைகளே!"
என்றும்,
"ஆணிப் பொன்னின் அண்ணாமலை கை தொழ
பேணி நின்ற பெருவினை போகுமே"

என்றும் தேவாரம் பாடுவோர்க்கு அவன் எட்டுவதால் பக்தர்க்கு அவர் அண்ணும்மலை.

இந்தத் திருமலையில் கார்த்திகை தீபதரிசனம் காண இலட்சக்கணக்கானமக்கள் திரளுகிறார்கள். ஆனால் அண்ணாமலை எது? தீபம் எது என்று உணர்ந்து தரிசித்தால் ஆனந்தம் மிகும்.

நெருப்புக்கு இரண்டு தன்மைகள் உண்டு.

இறை வழிபாடு முதலியவைகளால் தீச்செயல்களின் விளைவு குறையும்.
ஆகவே, இறை வழிபாடு மிக அவசியம்.

# செந்திலாண்டவனின் சேவலும், மயிலும்!

முனைவர் ந. காந்திமதிலட்சுமி,
ஏ.பி.சி., மகாலட்சுமி கல்லூரி, தூத்துக்குடி

இறைவழிபாடு ஒன்றே இடும்பை இலாத இன்பத்தை வழங்கி நல்வாழ்வை பெறச் செய்வது. மக்கள் வாழ்வு முதல் தொடங்கப்பட்ட இடம் மலை. மலையில் வாழ்ந்த மக்கள் தங்கள் கடவுளைக் "குறிஞ்சிக்கிழான்" என்றே குறிப்பிட்டனர்.

அழகு, இளமை, மணம், கடவுட்டன்மை ஆகிய இயல்புகளைக் கொண்ட ஒன்றைப் பண்டைத் தமிழ் மக்கள் 'முருகு' என்னும் சொல்லால் அழைத்துப் போற்றியுள்ளார்கள். முருகு என்பது பொருள் பொதிந்த ஒரு சொல். அம்முருகையுடையவன் முருகன் என்கிறார் திரு.வி. கல்யாணசுந்தரனார்.



### முருகனின் தோற்றம்

அசுரர்களையும், தீயவர்களையும் அழிக்கவே ஒரு நிகரற்ற சக்தியாக முருகன் தோன்றினான். தீமைகள் எந்த உருவில் எப்படி வந்தாலும், அதனை ஒழித்து பக்தர்களைக் காப்பதுவே முருக வழிபாட்டின் தொன்மை மிகுந்த தத்துவம். ரதியின் கணவன் மன்மதனை எரித்து காமதகனம் நடத்தி அதன் பின்னரே சிவன் தேவியை மணந்து முருகனை அவதரிக்கச் செய்கிறார். மன்மதனை மனித எண்ணம், ஆசை, காமம், இச்சை இப்படிப் பல வடிவங்களில் வெறிகொண்ட மனதுக்கு அடையாளம் ஆகக் கொள்ளலாம். முதலில் இந்த ஆசாபாசங்கள் எரிக்கப்பட்ட பின்னரே குமரனின் தோற்றம் ஏற்படுகிறது.

### செந்திற்பதியின் சிறப்பு

நக்கீரர் திருச்சீரலைவாயை (செந்திற்பதி) இரண்டாவதாகப் பாடியுள்ளார். அரசன் படைகளோடு தங்குமிடமே "படைவீடு" எனப்படும். முருகன் சூரனை வெல்வதற்காகத் தன் படைகளோடு தங்கிய இடம் இவ்வூரேயாகும். தெய்வயானை திருமணம் சூரனை வெற்றி கொண்ட பிறகே திருப்பரங்குன்றத்தில் நடைபெற்றது. எனவே திருச்செந்தூரே முதற்படைவீடு என்பாருமுளர். முருகனின் தோற்றம் அல்லது பிறப்பு, அவதாரம் இதனைப் பல புராணங்கள் கூறினாலும் திருச்செந்தூர் மட்டுமே அதன் நோக்கத்தை, நிறைவு செய்வதாகவுள்ளது. இந்த அகன்ற நிலவுலகின் மையமான பகுதியில் திருச்செந்தூர் தலம் அமைந்துள்ளது. சங்கப்பாடல்களால் பாடல் பெற்ற திருத்தலமாகும். சூதமுனிவரும், அகத்தியரும், ஆதிசங்கரரும் வழிபட்ட இடமாகும்.

ஓம் என்ற அமைப்பில் பிரகாரங்கள் உள்ளன. பிரணவத்தின் உட்பொருளான 'ஓம்' என்ற ரகசிய தத்துவத்தை உள்ளடக்கியதாகவே இருக்கின்றது. அசுரனை வென்ற இடம் என்று சூரசம்ஹாரத்துக்குப் பொருளாகக் கொள்ளப்படுகிறது. கோபம் என்ற அசுரன், ஆத்திரம் என்ற சூரன், பகை என்ற சிங்கமுகன், மாயை, வெறி, பொறாமை போன்ற எண்ணற்ற அசுரர்களை வென்ற இடமே திருச்செந்தூர்.

இவைகளை வெல்லவும், அடக்கவும் கந்தன் என்ற தோற்றமே தேவைப்படுகிறது. எனவே சூரசம்ஹாரம் என்பது தனி மனிதனுக்குக் கிடைக்கும் ஒரு வரப்பிரசாதமாகும். இதனை அருணகிரியார் தமது பாடல்களில் குறிப்பிட்டுள்ளார். கந்தர் கலிவெண்பா பாடிய குமரகுருபரர் பிறவியில் ஊமை. இவர் ஐந்தாண்டு வரை ஊமையாயிருந்தார். அதுகண்டு வருந்திய இவரது பெற்றோர்கள், இவரைத் திருச்செந்தூருக்கு அழைத்துச் சென்று செந்திலாண்டவன் திருமுன் கிடத்தி, குழந்தை பேச வேண்டும் என்னும் நோக்குடன் தவம் கிடந்தனர். அவ்வாறு தவம் கிடந்ததன் பயனாகத் திருச்செந்திலாண்டவன் இவருக்குத் திருவருள் சுரந்தார். அதன் பயனாக முதன் முதல் அவரால் அருளிச் செய்யப் பெற்றதே கந்தர் கலி வெண்பா என்னும் நூலாகும். இது சாத்திர மணம், தோத்திரமணம், வரலாற்று மணம் ஆகிய மும்மணங்களும் ஒருங்கு கமழ நிற்பது. இந்நூலின் இறுதிக்கண் வேண்டப்படும் வேண்டுகோள் இம்மைக்கும் மறுமைக்கும் உதவுவதோடு முக்திப்

பேற்றிற்கும் ஆளாக்குமாறு அமைந்துள்ளது. எனவே இந்நூலை நாளும் வழிபாட்டு நூலாகக் கொள்வார், மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வர்.

திருமுகங்கள் ஆறினுக்கும் ஏற்ப அவனது கைகள் பன்னிரண்டும் பணிபுரிகின்றன. வெற்றியாலும், கொடையாலும், வீறுமிக்கப் புகழாலும் அவனுடைய தோள்கள் உயர்ந்திருக்கின்றன. புறவிருளை நீக்குகின்ற திருமுகத்திற்கேற்ப ஒருகை ஞாயிற்றொளியின் மிகுதியைத் தாங்கி விண்ணிடத்தே ஞாயிறோடு திரியும் முனிவர்களைத் தாங்கிச் செல்ல ஒருகை இடையிலே ஊன்றியிருக்கும், யானைமேல் தோன்றி வரம் அருள வரும் திருமுகத்திற்கேற்ப ஒருகை அங்குசம் ஏந்த, ஒரு கை துடையின் மேல் கிடக்கும். அந்தணர் வேள்வி காத்தற் பொருட்டு ஒரு கை கேடயத்தையேந்த, ஒருகை வேலைச் சுழற்றிக் கொண்டிருக்கும். உண்மையான ஞானமுணர்த்தும் திருமுகத்திற்கியைய, ஒருகைமார்பின் கண் ஞானக் குறிப்பொடு விளங்க, ஒரு கை அம்மார்பின் மாலையோடே தவழ்ந்து கிடக்கும், களவேள்வி காணும் திருமுகத்திற்கேற்ப ஒருகை தான் அணிந்த கொடியுடனே மேலே சுழன்று கொண்டிருக்க, ஒரு கை மணிகள் மாறி மாறியொலிக்கச் செய்யும், வள்ளியொடு மகிழும் திருமுகத்திற்கேற்ப ஒரு கை நீல மேகத்தை மழை பெய்விக்கும், ஒரு கை வானர மகளிர்க்கு மணமாலை சூட்டி மகிழ்வுறுத்தும், பன்னிரண்டு கைகளும் இவ்வாறு முறையே பணி செய்ய, வானத்தே துந்துபி முழங்க, கொம்பு என்னும் இசைக்கருவி இசைக்க, ஒரு பால் சங்கு ஒலிக்க, இடிபோல் முழங்கும் முரசமும், கொடிமிசையெழுதிய மயிலும் ஒலிக்க வானமே வழியா உலகத்து மக்கள் புகழும் சிறப்பமைந்த செந்திற்பதியாம் திருச்சீரலைவாய்க்கு முருகப் பெருமான் விரைந்து செல்வன் என்று திருமுருகாற்றுப்படையில் கூறப்படுகின்றது.

### கந்தர் சஷ்டி விழா

திருச்செந்தூரில் கந்தர்சஷ்டி விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. ஐப்பசித் திங்கள் வளர்பிறையில் முதல் ஆறு நாட்களும் முருகனைப் பூசை செய்து உண்ணா நோன்பிருந்தனர் தேவர்கள் என்கிறார் கச்சியப்பர். ஐப்பசித் திங்களில் அமாவாசையையடுத்து ஆறாம் நாள் முருகன் சூரனை வென்ற திருநாளாகக் கொண்டாடப்படுகிறது. முருகனின் செயல்கள் திரும்பச் செய்து காட்டப்படுதலே இத்திருவிழாக்களின் நோக்கம் என்கின்றனர் அறிஞர் பெருமக்கள். முருகன், யானைமுகன், சிங்கமுகன், சூரபன்மன் ஆகிய மூன்று அரக்கர்களை ஒழித்தான். இவ்வரக்கர்கள் முறையே மாயை, கன்மம், ஆணவம் ஆகிய மும்மலங்களின் குறியீடுகளே ஆகும். 'ஷஷ்டி' ஆறாவது திதியைக் குறிக்கும். தீபாவளி அமாவாசை கழிந்த மறுநாள் முதல் தொடர்ந்து ஆறுநாள் விரதமிருந்து முருகனை வழிபடுவதே கந்தசஷ்டி திருவிழா. எதனையும் எண்ணாமல் இருப்பது மனதுக்கு விரதம், எதையும் உண்ணாமல் இருப்பது உடலுக்கு விரதம். இது ஒரு தொன்மையான அறவியல் ஆகமம் நிறைந்த விழாவாகும். வெகுளி, பகை, வெறி, பொறாமை போன்ற எண்ணிலா அரக்கர்கள் மனித மனதுக்குள் இருப்பதையும் அவற்றை அழிக்கவும் கந்தசஷ்டி விரதம் உதவுகிறது.

முருகப்பெருமான் வழிபாடு எல்லாருக்கும் எல்லாக்காலத்துக்கும் உகந்தது. இவரைக் கலியுகக் கடவுள் என்றே குறிப்பிடுவர். பாம்பன் சுவாமிகளும் இதைக் குறிப்பிட்டுள்ளார். கந்தர்சஷ்டி கவசம் காலத்துக்கு அப்பால் இயங்கும் நன்னூல். ஆறுநாட்கள் விரதமிருந்து ஆறாம்நாள் முருகப்பெருமான் சூரனை வெல்கின்றார். சூரபன்மனை வென்ற இடமாகத் திருச்செந்தூர் விளங்குவதால் இங்கு வந்து நோன்பு நோற்பதையே மக்கள் சிறப்பாகக் கருதுகின்றனர்.

நோய் நீக்கம் கருதிப் பலரும், பிள்ளைப்பேறு கருதிச் சிலரும், ஆன்மாவின் தூய்மை கருதிச் சிலரும் உண்ணாநோன்பு கொள்கின்றனர். சட்டியில்(சஷ்டி) இருந்தால் (நோன்பிருந்தால்) அகப்பையில் (கருப்பையில் பிள்ளை) வரும் என்பது பழமொழி. திருமணமாகிப் பல ஆண்டுகள் கழித்தும் பிள்ளைப்பேறில்லாத பலர் இந்நோன்பிருந்து குழந்தைப்பேறு பெற்றுள்ளனர்.

சூரனை வெற்றி கொண்ட முருகனுக்கு இந்திரன் தன் மகள் தெய்வயானையை மணம் முடித்துக் கொடுக்கிறான். சஷ்டி விழா, சூரனை முருகன் வெற்றி கொண்ட பின் திருமணத்தோடு முடிகின்றது.

கந்தன் என்றழைக்கப்படும் முருகப் பெருமானின் தோற்றம், வளர்ச்சி, நடத்திய வீரச் செயல்கள், திருமணம் இவற்றையெல்லாம் ஆன்மீகக் கண்கொண்டு பார்ப்பதுபோல் அறிவியல் கண்கொண்டும் பார்க்கலாம்.

***சூரனைக் கொன்றதாகப் புராணத்தில் இல்லை. அவனை வென்றதாகவே இருக்கிறது. சூரனே சேவல் கொடியாகவும், மயிலாகவும் ஆனதாகச் சொல்லப்படுகிறது. இதன் மூலம் முருகனின் கருணை தெரிகிறது.*** அறியாமை இருளை வென்ற ஒளியாகவும் முருகனைச் சொல்லலாம்.

இயற்கை மணமும், மாறா இளமையும், அழியா அழகுடைய 'செந்தில் பதிபுரக்கும் செவ்வேளாம்' முருகனை இடையீடின்றிப் போற்றிப் பாடி நினைந்துவரின், அவன் அருளை எளிதிற் பெறலாம். ❖

ஒழுங்கு பட்ட மனமும், சன்மார்க்க வாழ்க்கையும், ஆன்ம சக்திக்கு வேர்கள் போன்றவை.

ஸ்ரீமத் ராமானுஜர் என்ற அந்த மகானுபாவர் - மகாபுருஷர் - வைணவத்திற்காக பட்ட பாட்டினை முழுமையாக அறிந்து கொள்வதற்கு, அவர் இருந்த காலத்தின் சூழ்நிலைகளை அறிந்து கொள்வது அவசியம்.

இன்று போல், அன்று டில்லி செல்வதற்கு போக்குவரத்து வசதி கிடையாது. நல்ல சாலைகள் கிடையாது. வழி நெடுக, காடுகள், மலைகள், பாலங்கள் என்று எதுவும் இல்லாத பல மிகப் பெரியநதிகள், கள்வர் கூட்டங்கள் அன்னியர்களின் கடுமையான ஆட்சியை அமுல்படுத்தும் படைவீரர்களின் கண்டிப்பு ஆகியவற்றைத் தாண்டியே, பல நாட்கள் பிரயாணம் செய்தே டில்லியைச் சென்றடைய வேண்டும்.

தமிழக மக்களில் டில்லியை நேரில் பார்த்தவர்கள் மிக, மிகக் குறைவு.

மேலும், அன்னியர்களின் படையெடுப்புகளினால், வழியில் பல ஊர்களும், நகரங்களும் பாழடைந்துகிடந்தன. மக்கள் தங்கள் வீடுகளை விட்டுவிட்டு, பாதுகாப்பான இடங்களுக்கு ஓடிவிட்டனர்.



ஜோதிடச் சக்கரவர்த்தி
ஏ.எம்.ஆர்

**அரங்கனையே துணையாகக் கொண்டு...**

இத்தகைய, ஏராளமான இன்னல்களையும்

# எம்பெருமான் எனும் பெருஞ்செல்வத்தை மீட்டு அளித்த எம்பெருமானார்!

.... முன் தொடர்ச்சி



## வாரியார் அருளமுது



ஒருவனுக்கு கழுகைப் போல் நீண்ட கூரிய பார்வையும், கொக்கைப் போல் அசைவற்ற தன்மையும், நாயைப் போல் எச்சரிக்கையும், காகத்தைப் போல் இங்கிதம் அறியும் தன்மையும், பாம்பைப் போல் தான் சென்ற வழியை பிறர் அறியா வண்ணம் செல்லும் திறமும் இருக்க வேண்டும்.

தாண்டி, டில்லியை அடைந்து விட்டாலும் கூட, பாதுஷாவை எப்படிப் பார்ப்பது? பார்த்தாலும் அவரது அளவற்ற பாசத்திற்கு உரிய அந்த இளவரசியிடமிருந்து, அந்த விக்கிரகத்தை எவ்விதம் பெறுவது?, தன் உள்ளத்தையும், உயிரையும் அந்த அழகிய விக்கிரகத்தின் மீது வைத்திருப்பதால் அதனை விட்டுக் கொடுப்பாளா அந்த இளம் பெண்?



எல்லா சந்தேகங்களுக்கும், அனைத்துக் கேள்விக்குறிகளுக்கும், உடையவரின் (ஸ்ரீமத் ராமாநுஜர்) உள்ளத்தில் கிடைத்த ஒரே பதில் "எதற்கும் அரங்கன் இருக்கிறான்" என்பதே!

புறப்பட்டு விட்டார் அம்மகாபுருஷர்-தம் உயிரையே பணயம் வைத்து!

காலம் என்ற மாபெரும் சக்தி இருக்கிறதே, அது என்ன செய்யும்? எப்போது செய்யும்? எப்படி செய்ய முடியும்? என்பது எவராலும் புரிந்து கொள்ள முடியாத மாயா சக்தி ஆகும்.

ஒரு சாதாரண உலோக பொம்மை அல்ல. அந்த இளவரசியின் சிறு அறையினுள் அடைப்பட்டுக் கிடக்கும் அந்த சிறு விக்கிரகம். பாரத தர்மத்தின் ஆணிவேர் அது. பல கோடி மக்களின் இதயத்தை இயக்கும் மாபெரும் சக்தி அது என்பதை அறிவார் வைணவ ரத்தினமான ஸ்ரீமத் ராமாநுஜர்

எவ்வித வசதியும் இல்லாத அக்காலத்தில், இம்மகான் எவ்விதம் டில்லி மாநகரை அடைந்தார் என்பதைக் கற்பனை செய்து பார்க்கக் கூட நம்மால் இன்று முடியாது. நமக்காக நம் வைணவத்திற்காக, நம் பாரத தர்மத்திற்காக, ஸ்ரீமத் ராமாநுஜர் அன்று டில்லி செல்வதற்காக தம் திருவடிகள் நோக நடந்து சென்றாரே!- அவர் எடுத்த வைத்த ஒரு காலடிக்குக் கூட இன்று வைணவர்கள் எவராலும் பிரதி செய்ய முடியாது. "வைத்த கால் நொந்தனவோ" என்று, அன்று, உடையவர் நடந்து சென்றதைக் கண்டு, கதறியவர் பலர்.

**பாதுஷாவிடம் மன்றாடிய போது...**

எப்படியோ, அந்த அழகிய மணவாளனின் துணை கொண்டு, டில்லியை அடைந்து, பாதுஷாவின் தர்பாரிலும் எழுந்தருளிவிட்டார். அன்னிய மதத்தினன் ஆனாலும் பாதுஷா ஸ்ரீமத் ராமாநுஜரின் திருமுகமண்டலத்தில் ஒளிவீசிய, அளவற்ற பொலிவை- தெய்வீக தேஜஸைக் கண்டு, தன்னையும் அறியாமல்-எழுந்து, முகமன் கூறி, மரியாதையுடன் வரவேற்று ஆசனம் அளித்து உபசரித்தான்.

ஆனால், உடையவரோ எந்த உபசாரத்திலும் மயங்கி விடவில்லை. அவரது தீர்க்கமான கண்கள் எதையோ தேடின!

எங்கோ பிறந்து, எங்கோ வளர்ந்து, ஏதோ ஒரு நெறி முறையைப் பின் பற்றிய அந்த மன்னனுக்குத்தான் எத்தகைய பேறு கிடைத்து விட்டது! வீடு தேடியல்லவா வந்துள்ளது தெய்வம்!!

வணங்கி, ஆசி பெற்றான். கட்டுண்டான் எதிராசரின் வடிவழகில்- அவரது புன்னகையில் - அவரது ஆன்மீக சக்தியில்.

தொடரும்...

மனிதன் முழுமையாக துக்கம் நீக்கவும், நிலைத்த சுகம் பெறவும், ஆன்மீக வாழ்க்கை முறையையும், ஈஸ்வர வழிபாட்டையும் நாட வேண்டும்.

# இராகு-கேது தோஷங்களுக்கு திருப்பாம்புரம்



இராகு - கேது

ஈசனின் அடியார்களால் பாடப்பெற்ற பெருமை வாய்ந்த திருத்தலங்களுள் பாம்புரமும் ஒன்று. திருஞான சம்பந்தரால் ஒரு பதிகமும், நாவுக்கரசர் மற்றும் சுந்தரர் ஆகியோர்களால் ஒரு பாடலும் பெற்ற இத்தலம் காவிரித் தென்கரை தலங்களுள் 59 ஆவது தலம் ஆகும். சோழ மன்னர்கள் காலத்தில் கற்கோயிலாக விரிவடைந்த இத்தலம், மூர்த்தி தலம் தீர்த்தம் என மூன்றாலும் சிறப்புற்று விளங்குகிறது.

கும்பகோணம் - கொல்லுமாங்குடி - காரைக்கால் சாலையில் கற்கத்தி என்ற பேருந்து நிறுத்தத்தில் இருந்து வடக்கே 3.கி.மீ. துாரத்தில் அமைந்துள்ளது இத்தலம். மயிலாடுதுறை -திருவாரூர் மார்க்கத்தில் கொல்லுமாங்குடிக்கு மேற்கே 5 கி.மீ. துாரத்தில் கற்கத்தி உள்ளது. இவ்வாலயம் வருவோர் கற்கத்தி பேருந்து நிறுத்தத்தில் இறங்கியோ அல்லது கொல்லுமாங்குடியில் இருந்து புறப்படும் மினி பஸ்ஸில் பேரளம், திருமீயச்சூர் வழியாகவோ வரலாம். திருநாகேஸ்வரத்துக்கும் திருநள்ளாற்றுக்கும் மத்தியில் அமைந்துள்ளது இத்தலம். புகை வண்டி நிறுத்தம் - பேரளம்.

**தல அமைப்பும் வரலாறும்**

கிழக்கு நோக்கிய ஆலயத்தின் மையப்பகுதியில் பாம்புரநாதரும், அவருக்கு இடப்புறம் வண்டார்குழலி அம்மையும் உள்ளனர். அவர்களை நோக்கி தவமிருக்கிறார் ராகு - கேது பகவான். ஈசனின் ஐந்து முகங்களை குறிக்கும் வகையில் 5 லிங்கங்கள் உள்ள இத்தலத்தில் பிரம்மாவும் விஷ்ணுவும் கூட தவக்கோலத்தில் உள்ளதால் இங்கு லிங்கோத்பவர் இல்லை. சுவாமி சன்னதியைச் சுற்றி அகழி உள்ளது. இங்கு 15 பழங்காலக் கல்வெட்டுகள் உள்ளன. இவ்வாலய தலபுராணத்தின் படி ஆதிசேஷன், பிரம்மன், இந்திரன், அகத்தியர், அக்கினி, கங்கை, சந்திரன், சூரியன், தட்சன், பார்வதி, சுனிதன் எனும் வடநாட்டு மன்னன் மற்றும் கோச்செங்கட்சோழன் ஆகியோர் பூஜை செய்துள்ளனர். (விரிவான விபரம் வேண்டுவோர் ஆலய தல வரலாறு புத்தகத்தை பார்க்கவும்.)

வாயு பகவானுக்கும் - ஆதிசேடனுக்கும்



பாம்புரநாதர் - வண்டுசேர்குழலி

இடையே தம்மில் யார் பெரியவர் என்ற போட்டியில் மலைகளை வாயுபகவான் புரட்டி வீச முற்பட, ஆதிசேடன் அதனைத் தடுக்க இருவருக்கும் பெரும்போர் மூண்டது. கோபமுற்ற வாயுபகவான் உயிரினங்களுக்கு வழங்கும் மூச்சுக்காற்றை நிறுத்த உயிரினங்கள் அல்லலுற்றன. சினமுற்ற ஈசன் இருவரையும் சபித்தார். தம்முடைய தவறை உணர்ந்த ஆதிசேடனைப் பாம்புரத்தில் தம்மை 12 ஆண்டுகள் பூசித்து நலம் பெற அருளினார்.

விநாயகர் ஒருமுறை சிவனை வழிபட்டபோது ஈசன் கழுத்தில் இருந்த பாம்பு விநாயகர் தம்மை வழிபடுவதாக எண்ணி கர்வம் கொண்டது. அதனால் சினமுற்ற இறைவன் நாக இனங்கள் தங்கள் சக்தியனைத்தும் இழக்கச் சாபமிட்டார். ஆதிசேடன் உள்ளிட்ட அஷ்டமகா

நாகங்களும், இராகுவும், கேதுவும் தமது சக்தியை இழந்து அல்லலுற்றனர். சாப விமோசனம் வேண்டி அவை இறைவனைத் தொழுது நிற்க ஈசன் இத்தலத்தில் தம்மைப் பூசித்தால் அவர்கள் இழந்த சக்தியனைத்தும் பெறுவார்கள் என அருளினார். அவ்வாறே ஆதிசேடனும், பத்மன், மகாபத்மன், தட்சன், சங்கபாலன், வாசுகி, கார்கோடகன் மற்றும் குளிகன் ஆகிய அஷ்டமகா நாகங்களும், இராகுவும் - கேதுவும் இங்கு வந்து சுவாமியை தமது நெஞ்சில் வைத்து பூசித்து தவமிருக்க மாசி மாத மகாசிவராத்திரி அன்று இரவு மூன்றாம் சாமத்தில் ஈசன் அவர்களுக்கு சக்தியை மீண்டும் அளித்தார் என்பது புராணம். இத்தலத்தில் நாகங்கள் சிவனடியார்களாக விளங்குவதால் யாரையும் தீண்டுவதில்லை. ஆலயத்தில் அடிக்கடி பாம்பு தென்படுவது உண்டு. இரண்டாண்டுகளுக்கு முன் நூற்றுக்கணக்கானோர் முன்னிலையில் சுவாமி மீது 8 அடி நீளமுள்ள நாகம் ஒன்று தனது சட்டையை திருமாலையாக அணிவித்துச் சென்றது. இதே போன்ற நிகழ்ச்சி அம்மன் சன்னிதியிலும் நிகழ்ந்துள்ளது. அந்தப் பாம்பு சட்டை புகைப்படங்கள் சன்னிதியில் பக்தர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.



உலகைத் தாங்கும் ஆதிசேடன் அதன் சுமையால் உடல் நலிவுற்று வருந்தியபோது ஈசனின் ஆனணப்படி மகா சிவராத்திரி இரவு முதல் காலம் குடந்தை நாகேசுவரனையும், இரண்டாம் காலம் திருநாகேஸ்வரம் நாகநாதரையும், மூன்றாம் காலம் திருப்பாம்புர நாதரையும், நான்காம் காலம் நாகூர் நாகநாதரையும் வழிபட்டு சாப விமோசனம் பெற்றதாகவும் மூன்றாம் காலத்தில் பாம்புரம் வந்தபோது ஆதிசேஷ தீர்த்தம் ஏற்படுத்தி, அதில் நீராடி பூஜைக்குப் பூக்களின்றி அகத்திப் பூவை ஆலம் விழுதில் தொடுத்து ஈசனுக்கு இட்டு வணங்கியதாகவும் தலபுராணம் கூறுகிறது. அதனால் இவ்வாலயத்தில் அகத்தி பூக்காது; ஆலமர விழுது தரை தொடாது என்று கூறப்படுகிறது.

**தோஷங்களும் பரிகாரங்களும்**

ஏக சரீரமாக ஈசனைத் தொழுது நிற்கும் இராகு - கேது பகவானை கீழ்கண்ட குறைபாடுகள் உள்ளோர் வேண்டி பூஜை செய்ய வேண்டும்.

1. ஜாதகத்தில் கால சர்ப்பதோஷம் இருந்தால்,
2. 18 வருட இராகு தசா நடந்தால்,
3. 7 வருட கேது தசா நடந்தால்,
4. லக்னத்திற்கு 2-ல் இராகுவோ கேதுவோ இருந்து லக்னத்திற்கு 8-ல் கேதுவோ இராகுவோ இருந்தால்
5. இராகு புத்தி, கேது புத்தி நடந்தால்,
6. களத்திர தோஷம் இருந்தால்,
7. புத்திர தோஷம் இருந்தால்,
8. ஆண் - பெண் இருபாலருக்கும் திருமணம் தடைப்பட்டால்,
9. கனவில் அடிக்கடி பாம்பு வந்தால்,
10. தெரிந்தோ தெரியாமலோ பாம்பை அடித்திருந்தால்,
11. கடன் தொல்லைகள் இருந்தால்,

- இத்தலத்திற்கு வந்து பரிகாரம் செய்வது அவசியம்.

பரிகாரம் செய்ய செவ்வாய், வெள்ளி மற்றும் ஞாயிற்றுக் கிழமை காலை வேளைகள் உகந்தவை. ❖

## அபிஷேகப் பொருள்களும் அவற்றின் பயனும்

எண்ணெய் - சுகம், மாப்பொடி-கடன் தீரல்,
நெல்லி முள்ளி-நோய்நீக்கம்,
மஞ்சட்பொடி-வசீகரம்,
பஞ்சகவ்யம்-தூய்மை, இளநீர்-போகம்,
பால்-ஆயுள், தயிர்-மக்கட்பேறு,
நெய்-முத்தி, தேன்-சுகம்,
கரும்பின்சாறு-பிணி நீக்கம்,
வாழைப்பழம்-பயிர்விளைவு,
எலுமிச்சை-எமபயம்போக்கல்,
பஞ்சாமிர்தம்-ஐயம் தீரல்,
சந்தனம்-லட்சுமிகரம்,



முதலில் தெய்வத்தின் அருளால் நல் குருவைப் பெற்று பிறகு குருவின் அருளால், தெய்வத் தன்மையை, ஞானத் தன்மையை அடைய வேண்டும்.

# தீபத் திருவிழா

சமயக்குரவர்கள் நால்வரால் பாடல்பெற்றதும் அருணகிரிநாதரால் பாடிப் பரவசப்பட்டதுமான திருத்தலம் திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேசுவரர் திருக்கோயில். நினைத்தாலே முக்தி தரும் திருத்தலம் இது!.

பஞ்சபூதத் திருத்தலங்களில் அக்னித்தலமாக விளங்குவது திருவண்ணாமலை. ரமணமகரிஷி வாழ்ந்த இடம். சித்தர்கள் இன்றும் நடமாடும் திருத்தலம். திருவண்ணாமலையில் ஒவ்வொரு பௌர்ணமியும் பல லட்சம் பக்தர்கள் கிரிவலம் வந்து பக்திப் பரவசத்துடன் தங்களுடைய வேண்டுதலை நிறைவேற்றிச் செல்கின்றனர்.

இத்திருத்தலத்தில் நடைபெறும் திருக்கார்த்திகை பிரம்மோத்சவ திருவிழா சிறப்பு வாய்ந்ததாகும். திருக்கார்த்திகை தீபத் திருவிழா, ஸ்ரீ துர்க்கை அம்மன் திருவிழாவில் துவங்கி ஸ்ரீ சண்டிகேஸ்வரர் திருவிழாவுடன் நிறைவுபெறுகிறது. இத்திருவிழா பதினேழு நாட்கள் நடைபெறும் பெருவிழாவாகும். இப்பெருவிழாவின் முக்கியத் திருவிழா பத்தாம் நாள் திருவிழாவாகும்.

எதிர்வரும் கார்த்திகைத் திங்கள் 11ஆம் நாள் 26.11.2004 வெள்ளிக்கிழமை ஸ்ரீ ஸ்வாமிக்கு பரணி அபிஷேகம். அதிகாலை 2.30 மணியளவில் துவங்கி 4.00 மணி வரை நடைபெறும். பரணி அபிஷேகம் முடிந்து சரியாக 4.00 மணிக்கு மூலஸ்தான மூர்த்தி அருள்மிகு அண்ணாமலையாருக்குத் தீபாராதனை செய்யப்படும். அத்தீபத்தினைக் கொண்டு பஞ்ச மடக்குகளுக்கு தீபாராதனை செய்யப்படும். பின்னர் எல்லா சன்னதிகளிலும் மடக்கு தீபம் ஏற்றிவிட்டு, ஸ்ரீ சொர்ண பைரவர் சன்னதியில் வைப்பதுடன் நிறைவடைகிறது. இத்துடன் பரணிதீப நிகழ்ச்சிகள் நிறைவு பெறுகின்றன.

மாலை 5.30 மணிக்குள்ளாக பஞ்சமூர்த்திகள், ஸ்ரீ சுவாமி சன்னதியில் இருந்து ஒன்றன் பின் ஒன்றாக தீப தரிசன மண்டபத்தில் தீபதரிசன விமானங்களில் எழுந்தருளுவார்கள். மாலை 5.50 மணிக்கு மேல் 5.59 மணிக்குள் ஸ்ரீ சுவாமி சன்னதி பின்புறம் (2ம் பிரகாரம்) இருந்து ஸ்ரீ அர்த்தநாரீஸ்வரர் சுவாமி புறப்பாடாகி சரியாக மாலை 6.00 மணிக்கு தீப தரிசன மண்டபத்தில் உள்ள பஞ்சமூர்த்திகளின் எதிரில் காட்சி அளிப்பார். அதே நேரத்தில், காலையில் சுவாமி சன்னதியில் ஏற்றப்பட்ட பரணி தீப மடக்குகள் ஐந்தையும் மூங்கில் தட்டில் வைத்து தீபமுறை நாட்டார்கள் தலையில் சுமந்து கொண்டு 2ம் பிரகாரம் வலம் வந்து சுவாமி சன்னதியின் கொடிமரம் முன்புறம் உள்ள தீப அகண்டத்தில் சேர்ப்பிப்பார்கள். அதே சமயத்தில், வைகுந்தவாயில் வழியாக மலை உச்சிக்கு (தீபம் ஏற்றுவதற்காக) எலால் தீபம் மூலம் காட்டப்படும் சமிக்ஞையினை தொடர்ந்து, ஸ்ரீ அருணாசலமலையின் உச்சியில் **மகா தீபம்** ஏற்றப்படுகிறது. அகண்ட தீபம், ஸ்ரீ பஞ்சமூர்த்திகள் தீபாராதனை, ஸ்ரீ அருணாசல மலையின் மீது ஏற்றப்படும் தீபம் ஆகிய மூன்றும் சரியாக மாலை 6.00 மணிக்கு ஏற்றப்படுவது விசேடம்.

திருக்கோயில் வளாகத்திற்குள்ளும், நகர் முழுமையும் கூடியிருக்கும் இலட்சோப இலட்சம் பக்தர்கள் **அண்ணாமலைக்கு அரோகரா!** என்ற கோஷத்தை விண்ணதிர ஒலிப்பர். அந்நன்நாளில் அனைவரும் வருகை தந்து அண்ணாமலையாரின் பேரருள் பெறுக.


வெள்ளி இந்திர விமானத்தில்


சிம்ம வாகனத்தில்


வெள்ளி கற்பகவிருக்ஷ வாகனத்தில்


வெள்ளி ரிஷப வாகனத்தில்


தங்க ரிஷப வாகனத்தில்


குதிரை வாகனத்தில்


தேர்த் திருவிழா


வெள்ளித் தேரில்

# இறைவனின் அருள்தேவை

சிருங்கேரி ஜகத்குரு சங்கராச்சாரியார்
ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்



எல்லோருக்கும் ஒழுங்காகக் காரியம் செய்ய வேண்டும் என்ற அபிப்ராயம் இருக்கின்றது. மனதில் அப்படி ஸங்கல்பம் செய்து நாம் முயற்சியும் செய்கின்றோம். ஆனால் எல்லோருக்கும் பலன் ஒரே மாதிரி இருப்பதில்லை. ஒரு பெரியவர்.

துல்யம் கர்ஷந்தி ப்ருதிவீம் துல்யம்
சாஸ்த்ராண்யதீயதே।
உன்மஜ்ஜந்தி நிமஜ்ஜந்தி தைவஸ்யைகஸ்ய
லீலயா।।

என்று சொன்னார்.

பூமி வைத்துக் கொண்டு இருந்தனர் இருவர். இருவரும் சமமாகவே வேலை செய்தனர். ஒருவனுக்கு ஒரு பலனும் கிடைக்கவில்லை. ஒருவனுக்கு நிறையக் கிடைத்து விட்டது. இரண்டு பேர் ஒரு பெரியவரிடம் சாஸ்திரம் படிக்க வந்தனர். அந்தப் பெரியவர் இருவருக்கும் ஒரே மாதிரியே சாஸ்திரம் சொல்லிக் கொடுத்துக் கொண்டு வந்தார். யார் மேலேயும் பக்ஷபாதம் இல்லாமல் தனக்குத் தெரிந்ததை இரண்டு பேருக்கும் சொன்னார். இருவரும் ஒரே மாதிரி படித்தார்கள். - ஒருவன் பெரிய பண்டிதன் ஆகிவிட்டான். இன்னொருவனுக்கு சாஸ்திர அறிவே வரவில்லை. அதற்கு வேறு என்ன காரணத்தைச் சொல்ல முடியும்? குருவின் மேல் தோஷத்தைச் சொல்ல முடியாது. வித்யார்த்தியின் மேலும் தோஷத்தைச் சொல்ல முடியாது. ஏனென்றால் அவன் ரொம்ப சிரத்தையாகத்தான் கவனித்துக் கொண்டிருந்தான். அப்படியிருந்தும் அவனுக்கு சாஸ்திர அறிவு வரவில்லை என்றால் - கேவலம் 'அதிருஷ்டமான' ஒரு காரணம் அவனுக்கு அப்பேற்பட்ட பலனையும் இவனுக்கு இப்பேற்பட்ட பலனையும் கொடுத்துவிட்டது. அந்த விஷயத்தில் திருஷ்டமான (காணப்படும்) காரணத்தை எதையும் சொல்ல முடியாது. சில பேர்களுக்கு நம்முடைய இந்திரியங்களுக்குக் கோசரமாகக் கூடிய (புலன்களால் அடையப்படக்

அன்பு, மனிதன் மற்ற மனிதர்களிடம் காட்ட வேண்டியது. அருள் இறைவனால் அளிக்கப்படுவது.

கூடிய) விஷயங்களை நம்பமுடியுமே தவிர இந்திரியங்களுக்குத் தெரியாத விஷயங்களை நம்பமுடியாது என்ற அபிப்ராயம் இருக்கிறது. இம்மாதிரி நம்புபவனால் மேற்சொல்லப்பட்ட விஷயத்திற்கு ஒரு காரணமும் சொல்ல முடியாது. திருஷ்டமான காரணத்தைச் சொல்லவே முடியாது.

அந்த இடத்தில் அதிருஷ்டம் ஒன்றுதான் காரணம். அதனால்தான் நாம் எவ்வளவு புத்திசாலிகள் ஆனாலும் ஈச்வரனின் அனுக்ரஹம் இல்லாவிட்டால் நம்முடைய கார்யம் பலிக்காது என்று சொல்கிறோம். நம்முடைய முன்னோர்கள் ரொம்பவும் ஆலேசனை செய்து ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

மனிதனுடைய வாழ்க்கை ஒரு ரதம்போல் இருக்கிறது. ரதத்திற்கு இரண்டு பக்கத்திலும் இரண்டு சக்கரங்கள் வேண்டும். அந்தச் சக்கரங்களில் எந்த ஒரு சக்கரம் இல்லாவிட்டாலும் ரதம் செல்லாது. மனுஷனுடைய வாழ்க்கை என்ற ரதத்திற்கு இருக்கக்கூடிய இரண்டு சக்கரங்கள் என்னவென்று கேட்டால், ஒன்று நம்முடைய ப்ரயத்தனம்; இன்னொன்று ஈச்வரனுடைய அனுக்ரஹம். இந்த இரண்டு சக்கரங்களினால் நம்முடைய வாழ்க்கை என்கிற ரதம் போய் கொண்டு இருக்கின்றது. நாம் ஒரே சக்கரத்தினால் அந்த ரதத்தை ஒட்டவேண்டும் என்று பார்க்கிறோம். முடிவதில்லை.

அதனால்தான் சிலருக்கு அதிருஷ்டத்தில் நம்பிக்கை இல்லாமல் 'நான் நினைத்தால் என்ன வேண்டுமானாலும் சாதிப்பேன்' என்கிற அஹங்காரம் ஏற்படுகிறது. இது தவறு. சிலருக்கு 'ஈச்வர ஸங்கல்பம் இருந்தால் எல்லாம் நடக்கும். அதற்கு நான் ஏன் சிரமப்பட வேண்டும்?' என்கிற ஒரு ஜாட்யம் (ஜடத்தன்மை), இதுவும் தவறு. நீ ப்ரயத்தனத்தைச் செய்தால் அதற்கு ஈச்வர அனுக்ரஹம் சககாரியாய் (உதவியாக) இருக்குமே தவிர, உன்னுடைய ப்ரயத்தனம் இல்லாமல் ஈச்வர அனுக்ரஹம் ஒன்று இருந்தால் போதும் என்று பேசாமல் உட்கார்ந்தால் அந்தக் காரியம் நடக்காது. அதனால் நாம் எவ்வளவு புத்திசாலிகளாய் இருந்தாலும் கூட ஈச்வரனை மறக்கவே கூடாது.

ஒரு சந்தர்ப்பத்தில் சாணக்யனுக்கும் சந்திரகுப்தனுக்கும் ஒரு க்ருத்திரமான (ஏற்படுத்தப்பட்ட) சண்டை வந்திருக்கும் சமயத்தில் சாணக்யன், "அப்பேறப்பட்ட நவநந்தர்களை யார் விநாசம் செய்தார்கள்?" என்று கேட்டான். அதற்குச் சந்திரகுப்தன், 'நந்தகுல வித்வேஷணா தைவேன' என்று சொன்னான், நந்தகுலத்தின் எதிரியான தெய்வம்தான் அந்தக் கார்யத்தையெல்லாம் செய்தது என்று சொன்னான். "விஷயம் தெரியாத பயந்த ஸ்வபாவம் உடையவர்கள் தெய்வத்தைச் சொல்வார்கள். நான் அப்படிச் சொல்லமாட்டேன். நான்தான் செய்தேன்" என்று சாணக்யன் சொல்லும்போழுது சந்திரகுப்தன் வாயிலிருந்து ஒரு வார்த்தை வந்தது. 'வித்வாம்ஸோபி அவிகத்தனா பவந்தி'. 'உண்மையாகவே நீங்கள் வித்வானாயிருந்தால் இப்படி உம்மையே புகழ்ந்துகொள்ள மாட்டீர். 'நான்தான் செய்தேன்' என்று சொல்லமாட்டீர் என்றான். அதனால், தெய்வத்தை ஒப்புக்கொள்ளாமல் வெறும் 'நான் தான் செய்தேன்' என்ற வார்த்தை விவேகிகளுக்குத் தகுந்ததில்லை. மனுஷ்யனுக்கு இருக்கக்கூடிய ப்ரத்யேகமான (தனிப்பட்ட) குணம் விவேகம்.

எத்தனையோ லட்சம் ஜீவராசிகள் இருந்தாலும் மனுஷ்யனுக்கு ப்ராதான்யத்தை சாஸ்திரத்தில் ஏன் கொடுத்தார்கள்? தன்னுடைய ஆகாரத்தைச் சம்பாதித்துக் கொள்ளும் விஷயத்தில் மனுஷ்யனும் மீதி பிராணிகளும் சமம்தான். பிராணிகளும் நாமும் ஒன்றுதான், எப்படி ஒன்று? அதுவும் தனக்கு யாராவது தீனி கொடுப்பார்கள்

## வாரியார் அருளமுது

மூன்று பொருட்களை மிச்சமாக வைக்கக் கூடாது.

**1. அக்கினி சேஷம்**

வீட்டில் இரவில் நெருப்பை மிச்சமின்றி அணைக்க வேண்டும். இல்லையேல் எலி முதலிய பிராணிகள் துணிகளை இழுத்து அடுப்பில் போட்டுவிடலாம்.

**2. கடன் சேஷம்**

கடன் முழுவதும் தீர்த்து விடவேண்டும். ஒரு சிறிது மிச்சமாக விட்டு வைத்தாலும் வட்டி குட்டி போட்டுப் பெருகி விடும்.

**3. சத்ரு சேஷம்**

பகைவனை அடியோடு அழிக்க வேண்டும். இல்லையேல் அவன் பலரை உடன் சேர்த்துக் கொண்டு பெருகிவிடுவான்.

என்ற தெரிந்தால் அவனிடம் போகும். யாராவது கையில் கம்பு வைத்துக்கொண்டு அடிக்க வருகிறான் என்றால் ஓடிப்போகும். நாமும் அப்படித்தான் இருக்கின்றோம். யாராவது நமக்கு நல்லது செய்வான் என்றால் அவனிடம் போவோம். அவனால் தொந்தரவு என்றால் அவனிடமிருந்துதூரத்தில் இருப்போம். இந்த விஷயத்தில் மீதி பிராணிகளுக்கும் நமக்கும் வித்தியாசம் இல்லை. பின் எந்த விஷயத்தில் வித்தியாசம்? ஒரு வித்தியாசமும் இல்லை என்று சொல்ல முடியுமா என்றால் அதுவும் முடியாது. கண்டிப்பாக வித்தியாசம் இருக்கின்றது. எந்த விஷயத்தில் வித்தியாசம் இருக்கின்றது என்று கேட்டால் நமக்குப் பெரிய விவேகத்தை பகவான் கொடுத்தான். நம்முடைய விவேகத்தினால் எது ஹிதம் (நன்மை) எது அஹிதம் (தீமை) எது உபாதேயம் (ஏற்றுக்கொள்ள வேண்டியது) எது பரித்யாஜ்யம் (விட்டுவிட வேண்டியது) இத்தனையையும் நாம் தெரிந்து கொள்ளலாம். நம்முடைய புத்தி சக்திக்கு அளவு இல்லை.

இந்தக் காலத்தில் விஞ்ஞானிகள் போய்க்கொண்டிருக்கும் ரீதியைப் பார்த்தால் அவர்களின் ஆராய்ச்சி எவ்வளவிற்கு இருக்கிறது என்று தெரியும். ஒரு விஷயத்தை எவ்வளவு ஸூக்ஷ்மமாகப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள்? அது கேவலம் பகவான் நமக்குக் கொடுத்த புத்தியின் ப்ரபாவம்தானே! இப்படிப்பட்ட விசித்ரமான புத்தியை பகவான் மீதி பிராணிகளுக்குத் தரவில்லை. அதனால் மனுஷ்யன் ரொம்ப விவேகி. எது நல்லது, எது தவறு என்பதைத் தீர்மானம் செய்வதற்குச் சக்தி உள்ளவன். அப்படிப்பட்ட விவேகிகள் கோஷ்டியைச் சேர்ந்த நமக்கு ஈச்வர விஷயத்தில், அதிருஷ்ட விஷயத்தில் விசுவாசம் இல்லாமல் இருப்பது ரொம்ப அனுசிதம் . (பொருத்தமில்லை).

அதே போல் ஆசரணத்தைச் செய்ய வேண்டும். அதனால், எந்த விஷயத்திலும் நாம் செய்யக் கூடிய கார்யத்திற்கு ஈஸ்வரனுடைய அனுக்ரஹம் ஒன்று இருக்க வேண்டும் என்கிற திடமான விசுவாசம் வர வேண்டும். அந்த விசுவாசம் இருந்தால் நாம் செய்யக்கூடிய காரியமெல்லாம் ரொம்ப நன்றாக நடக்கும். ஈஸ்வரனை மட்டும் மறந்துவிட்டு நாம் செய்யக்கூடிய காரியம் ஒழுங்கான ரீதியில் நடக்காது. ஆகையால் பிரதியொருத்தனும் தன்னுடைய வாழ்க்கையில் தெய்வானுக்ரஹம் அவசியம் வேண்டும் என்கிற த்ருடமான நிச்சயத்துடன் இருந்து தன்னுடைய வாழ்க்கையை நடத்தி ச்ரேயஸ்ஸை அடைய வேண்டியது. ❖

# திருமுறைகளில் திருமகள்

தமிழ் மறையான தேவாரத்துள் திருஞான சம்பந்தப் பெருமான் ஏறத்தாழ ஐம்பது இடங்களில் மகாலட்சுமியைப் பல்வேறு பெயர்களால் அழைக்கின்றார். இவற்றில் திருமகள் பூமகள், அலராள், பங்கய மங்கை. பொன் மலராள், செய்யாள், தூமலராள், வானோர்சீர் என்பன குறிப்பிடத்தக்க பெயர்களாகும். சிவாலயங்களையும், தேவாரத்தை ஓதுபவர்களையும் லட்சுமிதேவி உடனிருந்து காக்கின்றாள் என்பது அவர்கருத்தாகும். சில தலங்களை லட்சுமிதேவியின் இருப்பிடமாகவே சொல்லியிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.(எது) வேதாரண்யத்தை மலர்மகள் நிலவிய மறைவனம் என்று குறிக்கின்றார். திருமாலின் மார்பில் நீங்காது உறைவதைப் போலவே தேவாரத்தைப் பாடுபவர்களின் மார்பிலும், சிவனைத்தியானிப்பவர் மார்பிலும் உறைகின்றாள் என்கிறார்.

அப்பரடிகள் திருமகளைச் சிவபெருமான் தோற்றுவித்துத் திருமாலுக்கு அளித்தார் என்பதைச் 'செய்யவளை மாலுக்கீந்த சிவனவன் காண்' என்று குறிக்கின்றார். திருமகள் சிவபூஜைசெய்து கொண்டேயிருக்கிறாள் என்பதைத் திருவாலங்காட்டுப்பதிகத்தில் 'செய்யாள் வழிபட நின்றாள் தாமே' என்கிறார்

மேலும் சிவபெருமானின் திருவடிகளாகிய தாமரைமலரில் இலக்குமி நீங்காது உறைகிறாள் இதனைத் திருமகளுக்குச் செந்தாமரையாம் அடி என்றும் குறிக்கின்றார்.

சுந்தரர் திருமகளை, திருமாமகள், செம்பொன். அலராள் என்று பல பெயர்களால் குறிப்பதுடன் (திருச்சுழியற்) பெருமானை வழிபடுபவரை அவள் நீங்காது பிரியாதிருக்கின்றாள் என்றும் குறித்து மகிழ்கின்றார்.

❖

பரமாத்மா மட்டுமே மெய்ப்பொருளாகும். அதைத் தவிர அனைத்து உலகமும் பொய்ப் பொருள்தான். அழியக் கூடியவை தான்.

# காலச்சுவடுகள்



இராஜகோபுர நுழைவு வாயிலில்...

**முன்னாள் பாரதப் பிரதமர் மாண்புமிகு லால்பகதூர் சாஸ்திரி அவர்களும் பெருந்தலைவர் காமராஜர் அவர்களும் சென்னை மயிலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்சுவரர் திருக்கோயிலுக்கு 1966 ஆண்டு வருகை புரிந்த காட்சி**



நவராத்திரி மண்டபத்தில்...

# தவம் சிறந்ததா? தொண்டு சிறந்ததா?



காட்டில் ஒரு முனிவர் நீண்டகாலம் தவம் செய்து கொண்டு இருந்தார்.

ஒரு நாள் மரத்தடியில் அமர்ந்திருந்த இவர்மேல் எச்சம் விழ, மேலே பார்த்தார். இவர் பார்த்த பார்வையின் சீற்றத்தில் எச்சமிட்ட கொக்கு சாம்பல் ஆனது.

அம்முனிவர் ஒருநாள் காட்டிற்கு அருகிலிருந்த ஒரு கிராமத்திற்குப் போனார்.



பசியோடு தவமுனிவர் வருவதைப் பார்த்த அம்மையார் ஒருவர், அவரைப் பரிவோடு வரவேற்றுத் திண்ணையில் அமரவைத்தார்.

"அமருங்கள் சுவாமி! தாங்கள் அருந்த காய், கனிகள் கொண்டு வருகிறேன்" என்று கூறினார் அம்மையார்.

அதற்குள் வீட்டினுள் இருந்த அவ்வம்மையாரின் கணவர் அழைக்க, உடன் விரைந்து சென்ற அவர், தம் கணவர் பணி முடித்துச் சற்றே தாமதமாக வந்தார்.

தாமதமாக வந்த அம்மையாரைச் சீற்றத்துடன் பார்த்தார் தவமுனிவர்.

அவ்வம்மையார் தவமுனிவரைப் பார்த்து "கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா!" என்று கேட்க தவமுனிவர் அதிக வியப்புற்றார்.

"அம்மையே! நான் மனதில் நினைத்தது எப்படி தங்களுக்குத் தெரிந்தது" என்று வினவினார் தவமுனிவர்.



"பக்கத்து ஊரில் ஒரு கசாப்பு கடைக்காரர் உள்ளார். அவரிடம் போய் இந்த வினாவைக் கேளுங்கள். அவர் தெளிவுபடுத்துவார்" என்றார் அம்மையார்.

தவமுனிவரும் பக்கத்து ஊருக்குப் போய் அந்த கசாப்புக் கடைக்காரரைப் பார்த்தார்.

முனிவரைப் பார்த்ததுமே அக்கசாப்பு கடைக்காரர் "என்ன அந்த அம்மையார் கூறி வருகிறீர்களா" என்று கேட்டார்.

தவமுனிவர் மேலும் வியப்புற்று நின்ற வேளையில் அக்கசாப்பு கடைக்காரர், வீட்டிற்குள் சென்று தம் வயதான தாய் தந்தையருக்குப் பணிவிடை செய்து வெளியே வந்தார்.



"வயதான தாய் தந்தையருக்குச் செய்யும் பணிவிடையால்தான் நீங்கள் எதற்காக வந்தீர்கள் என்பதை குறிப்பால் உணரும் ஞானம் எனக்கு உண்டானது. அவ்வம்மையார் தம் கணவருக்குச் செய்யும் பணிவிடையால் காட்டில் கொக்கிற்கு நேர்ந்ததை உணர்ந்து கொண்டார்".

"ஆகவே தவத்தை விடவும் பெற்றோர்க்குச் செய்யும் தொண்டும், கணவருக்குப் பெண்டிர் செய்யும் பணிவிடையும் மேலானது, ஒப்பற்றது".

என்று அவர் எடுத்துரைக்க, தவமுனிவர் வாய்அடைத்து நின்றார்.

கோபுரம் என்பது ஆகம முறைப்படி இறைவனின் திருவடி. அதனால், திருவடி தரிசனம் மிகவும் நல்லது. கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்று கூறியிருக்கிறார்கள்.

# மழைநீர் சேகரிப்பில் மன்னர்களின் பங்களிப்பு

மு. மதியழகன், தஞ்சாவூர்

இயற்கையின் கொடையான மழைநீரை வீணே கடலில் கலக்காமல், அவற்றை ஏரி குளங்களில் தேக்கிப் பயன்படுத்துதல் என்பது தொன்று தொட்டு தமிழகத்தில் மேற்கொள்ளப்பெற்று வரும் மழைநீர் சேகரிப்பு முறையாக இருந்துள்ளது. கடந்த 50 ஆண்டுகளில் ஏரிகள் குளங்கள் ஆகியவை முறையாகத் தூர்வாரப்பெறாததாலும் பாய்கால், வடிகால் பராமரிப்பு இன்மையாலும் நீர்நிலைகள் பெரும்பாலும் பாழ்பட்டன. நிலத்தடி நீர் குறைவு ஏற்பட்டமையால் இன்று மழைநீரை ஒவ்வொரு கட்டடங்கள் வாயிலாகவும் சேமிக்க அரசு முனைந்துள்ளது. ஒரு கட்டடத்தில் பெய்யும் மழைநீர் முழுவதையும் வீணாக்காமல் அப்படியே சேகரித்துப் பயன்படுத்தும் முறையை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே செயல்முறையில் செய்து காட்டியவன் மாமன்னன் இராஜராஜ சோழனாவான். அப்பேரரசன் செய்த மழைநீர் சேகரிப்பு முறை பற்றியும், பிற அரசர்கள் மழைநீர் சேகரிப்புக்கு ஆற்றிய பங்களிப்பு பற்றியும் காண்போம்.

**தஞ்சையில் சிவகங்கை**

இராஜராஜேச்சரம், பெருவுடையார் கோயில் என்ற பெயர்களால் அழைக்கப்பெறும் தஞ்சைப் பெரிய கோயில் 500 மீ x 250 மீ. பரப்பளவில் நான்கு புறமும் திருமதில்களோடு திருச்சுற்று மாளிகையையும் கொண்டு திகழ்கின்றது. உள்ளே 216 அடி உயரமுடைய ஸ்ரீவிமானம், அதனோடு இணைந்த மிகப்பெரிய மகாமண்டபம் ஆகியவற்றோடு இக்கோயிலை இராஜராஜசோழன் எடுப்பித்தான். மிக உயர்ந்த அந்த விமானத்தினைத் தட்சிணமேரு எனப்பெயரிட்டும் அழைத்தான். தென்னாட்டு மலை என அழைக்கப்பெற்ற அந்த விமானத்தை சிவபெருமான் உறையும் கயிலாயமலையாகப் பாவித்தான்.



சிவபெருமான் உறைகின்ற மகாமேருவை எப்போதும் ஆகாச கங்கை தன் நீரால் நனைத்துக் கொண்டே இருப்பாளாம். அந்நீர் முழுவதும் திரண்டு ஆங்காங்கே துரோணி எனும் நீர் நிலைகளை நிரப்பி வழிந்து ஒருங்கே ஒரு நதியாக ஓடுமாம். அதற்குச் சிவகங்கை எனப்பெயர் என்று தொன்மை நூல்கள் கூறுகின்றன. இக்கோட்பாட்டின் அடிப்படையிலேயே தஞ்சை கோயிலாம் தட்சிணமேரு மீதும் ஆகாச கங்கை வர்ஷிக்க, அந்நீர் ஒருங்கு திரண்டு ஒரு கால்வாய் வழியாக ஓடிக் கோயிலின் வட மேற்கு மூலையில் அமைக்கப்பெற்றுள்ள குளத்தில் போய்ச் சேருமாறு செய்துள்ளான். அக்குளத்திற்குச் சிவகங்கை எனப் பெயரிட்டுப் போற்றினான்.

அந்த உயர்ந்த விமானம் முழுவதும் பெய்யும் மழைநீர் ஒவ்வொரு தளத்திலும் சேர்ந்து ஆங்காங்கே உள்ள வடிகால் வழியாக வழிந்து கீழ்த்தளத்தில் வந்து வீழும். நீர் வழிந்து வருகிற பகுதியெல்லாம் துரோணிகள் உள்ளன என்பதைக் காட்ட கும்ப பஞ்சரம் எனும் சிற்ப அமைப்புகளை இடம்பெறுமாறு செய்துள்ளான். துரோணிகளாக விளங்கும் கும்பகுடங்கள் நீரால் நிரம்பி இருபுறமும் வழிய அதில் நீரோடு மலர்களும், செடிகளும், கொடிகளும் செல்வது போன்ற சிற்ப அமைப்பைக் காணலாம். கோயில்

# சிவபூஜைக்குரிய மலர்கள்

| அதிகாலை | காலை | நண்பகல் | மாலை |
|---|---|---|---|
| புன்னை | அலரி | பொன் ஊமத்தை | மல்லிகை |
| வெள்ளெருக்கு | நாயுருவி | புலிநகக்கொன்றை | காட்டுமல்லிகை. |
| செண்பகம் | மல்லிகை | பாதிரி | மரமல்லிகை |
| நந்தியாவர்த்தம் | எருக்கு | வன்னி | மகிழம்பூ |
| நீலோற்பவம் | வில்வம் | கத்திரி | கொன்றை |
| பாதிரி | நந்தியாவர்த்தம் | மந்தாரை | செண்பகம் |
| அலரி | தாமரை | சரக்கொன்றை | சிறுசெண்பகம். |
| செந்தாமரை | பவழமல்லி | தும்பை | மருக்கொழுந்து |

இவற்றை கொண்டு அஷ்ட புஷ்ப மந்திரம் சொல்லி உரிய வேளையில் வணங்கினால், வாழ்வில் இன்பம் பெறுகும்.

வளாகம் முழுவதும் இவ்வாறு சேகரமாகும் நீர் ஒருங்கு திரண்டு வடமேற்கு மூலையில் உள்ள ஒரு கால்வாய் வழியாக வெளியேறி சிவகங்கை எனும் குளத்தில் போய்ச் சேரும். கடுமையான மழைபெய்யும் காலங்களில் போய்ப் பார்த்தால் மழைவிட்ட 15 நிமிடங்களில் அவ்வளாகம் முழுவதும் சேர்ந்த நீர் ஒரேகால்வாய் வழியாக சிவகங்கைக் குளத்தில் போய் வீழ்ந்துவிடும். அந்த வகையில் தள அமைப்பும் கால்வாய் அமைப்பும் உள்ளன. ஒரு கட்டடம் முழுவதும் பெய்யும் மழைநீர் ஒரு சொட்டு கூட வீணாகாமல், தூய்மையாகவும், பாதுகாப்பாகவும் உள்ள செங்கற்கட்டுமான கால்வாய் மூலம் ஒரு குளத்தில் சேகரமாகுமாறு அமைத்துப் பின் அந்நீரை மக்கள் பயன்படுத்துமாறு வகைசெய்த இராஜராஜனின் பணி தமிழக வரலாற்றில் கட்டட மழைநீர் சேகரிப்பில் செயல்படுத்தப் பெற்ற ஒரு முன்னோடி திட்டம் என்பதில் ஐயமில்லை.

**கங்கை காவிரி இணைப்பிலும் ஒரு முன்னோடி**

மாமன்னன் இராஜராஜனின் மைந்தன் இராஜேந்திரசோழன் வடபுலத்து நாடுகள் பலவற்றை வென்றான். வங்க நாட்டை ஆட்சிசெய்த பாலர்களை வென்று வாகைசூட்டினான். அவ்வெற்றியைக் குறித்து அவன் வங்கம் வென்றான் என்ற பட்டம் சூடி கொண்டாடியிருக்கலாம். ஆனால் அவனோ "கங்கை கொண்டான்" எனப்பட்டம் சூடிக்கொண்டான். அது மட்டுமல்ல அந்நாட்டுக் கங்கையாற்றிலிருந்து குடங்களில் நீரை எடுத்து வந்து திரைலோக்கி சிவாலயத்தில் வைத்துப் பாதுகாத்தான். அப்போது கங்கைகொண்ட சோழபுரம் எனும் பெருநகரம் உருவாகி கொண்டிருந்தது. அதே நேரத்தில் அந்நகருக்காகப் பெரிய ஏரி ஒன்றினையும் வெட்டுவித்தான். சிவாலயம் ஒன்றும் உருவானது. புதுநகரின் புகுவிழா நிகழ்ந்த போது தன் கங்கை வெற்றியைக் கொண்டாட ஜெயஸ்தம்பம் ஒன்றினை நாட்டுவதற்குப் பதிலாக தன் வீரர்கள் கொணர்ந்த கங்கை நீரைத் தான் வெட்டுவித்த பெரிய ஏரியில் கொட்டி ஜலஸ்தம்பமாக அதனைமாற்றி விழா கொண்டாடினான். அந்த ஏரிக்குச் "சோழகங்கம்" எனப் பெயர் சூட்டினான். இதனை அவனது திருவாலங்காட்டுச் செப்பேடு

**சோழகங்கம் இதி க்யாத்யா**
**ப்ரதிதஞ் நிஜமண்டலே**
**கங்கா ஜலமயந் தேவஹ**
**ஜயஸ்தம்பம் வியதத்த ஸஹ**

என்று கூறுகின்றது.

மிகச் சிறந்த மழைநீர் சேகரிப்பு ஏரியாக சோழகங்கம் எனும் பொன்னேரி இன்றும் விளங்குகின்றது.

**திருக்கோகர்ணம் சுனையும் கங்கையும்**

புதுக்கோட்டை நகரத்தின் ஒரு பகுதியாக விளங்கும் திருக்கோகர்ணம் சிவாலயம் இயற்கையாக அமைந்த குன்றினைக் குடைந்து உருவாக்கப் பெற்ற ஒரு குடைவரைக் கோயிலாகும். குடைவரையினுள் கோகர்ணேஸ்வரர் இலிங்கமாக அருள்பாலிக்கின்றார். பக்கச் சுவர்களில் ஒருபுறம் கணபதியார் திருமேனியும், எதிர்புறம் கங்காதரர் திருவுருவும் உள்ளன. விண்ணிலிருந்து இறங்கும் கங்கை எனும் பெண்ணைத் தன் ஒற்றைச் சடையால் ஏந்துகிறார் அப்பரமன். மிக எழில் வாய்ந்த குடைவரைச் சிற்பமது.

கடமையைச் செய்வதுடன் ஆண்டவனிடம் பக்தி செலுத்தினால்,
இறைவனுக்கு நம்மிடம் கருணை உண்டாகும்.

அக்குடைவரைக்கு வெளியே அமைந்துள்ள படிக்கட்டுகள் வழியாக அக்குன்றின் மேலேறிச் சென்று காண்போமாயின் அங்கு இரண்டு மலைமுகடுகளுக்கு இடையே ஒருபள்ளம் இருப்பதும், அதற்கெனப் படிக்கட்டுகள் அமைக்கப்பெற்றிருப்பதையும் காணலாம். இயற்கையாக அமைந்துள்ள அப்பள்ளத்தில் அக்குன்று முழுவதும் பெய்யும் மழைநீர் நிரம்பிச் சுனையாக விளங்குகின்றது. நீர் மிகுதியாக சேமிக்கப்பெற வேண்டும் என்பதற்காக மன்னர்கள் காலத்தில் கருங்கற்கள் கொண்டு ஒரு சுவர் எழுப்பியிருக்கிறார்கள்., இதனால் குடை வரை கோயிலுக்கு மேலாக ஒரு குளமாக (மேல்நிலை நீர்தேக்கமாக) அச்சுனை திகழ்கின்றது. ஆண்டு முழுவதும் பெய்யும் மழைநீர் ஒரு சொட்டு கூட வீணாகாமல் அங்கு சேமிக்கப்பெறுகின்றது. அந்தநீர்தான் கோகர்ணேஸ்வரருக்குத் திருமஞ்சன நீராகப் பயன்படுகின்றது.

மழைநீரால் அமைந்துள்ள அந்தச் சுனை கீழே குடைவரையில் அமைந்துள்ள கங்காதரர் சிற்பத்திற்கு நேர்மேலாகவுள்ளது என்பதைக் காணும்போது அச்சிற்பத்தினை வடித்த சிற்பி எத்தனை அர்த்தத்தோடு அந்த சிற்பத்தினைப் படைத்திருக்க வேண்டும் என்பது புரியும். பகீரதனின் தவத்திற்காக விண்ணிலிருந்து கங்கை ஆர்ப்பரித்து இறங்கியபோது தன் ஒற்றைச் சடையில் அவளைத் தாங்கி இப்புவியைக் காத்தவனல்லவா அப்பரமன்! இங்கும் மேலே ஆகாச கங்கை மழையாகப் பொழிய திருக்கோகர்ண மலை தன்முடி மீது அதனைத் தாங்கி அந்த அண்ணலின் திருமஞ்சனத்திற்கு நீரையல்லவா தருகின்றது!

திருக்கோகர்ணேஸ்வரரின் திருமஞ்சனத்துக்கு மட்டுமல்ல காலங்காலமாக திருக்கோயிலுக்கு வருவோர் அத்தனை பேருக்கும் அந்தச் சுனையல்லவா அருந்த நீர்தந்து வருகிறது.

**செவ்வப்பன் வாரியும்-ஏரியும்**

தஞ்சைப் பெரிய கோயில், சிவகங்கைக் குளம் ஆகியவற்றை உள்ளடக்கிய சிறிய கோட்டைப் பகுதியை கி.பி.1535 இல் அமைத்த செவ்வப்ப நாயக்கர் பின்பு கி.பி. 1550 இல் பெரிய கோட்டையையும் அரண்மனையையும் உருவாக்கித் தஞ்சையின் முதல் நாயக்க அரசை அமைத்தார். சிவகங்கைக் குளத்து நீர்மட்டும் தான் அமைத்த பெரிய கோட்டைப் பகுதிக்கு போதாது எனக் கருதியவர், சிவகங்கைக்குளத்திற்கு மேற்காகக் கோட்டைக்கு வெளிப்புறம் ஒரு ஏரியை உருவாக்கினார். சுற்று வட்டாரத்தில் 10 மைல் சுற்றளவில் பெய்யும் மழைநீரை ஒரு வாரி மூலம் அந்த ஏரியில் சேமிக்க வழிசெய்தார். அவை முறையே செவ்வப்பன் வாரி என்றும் செவ்வப்பன் ஏரி என்றும் பெயர் பெற்றன.

சுற்றுவட்டாரத்தில் பெய்யும் மழைநீரை ஏரியில் சேமித்த அவ்வரசன் அங்கிருந்து பிரத்தியேகக் கால்வாய் மூலம் அகழியில் கலவாதவாறு சிவகங்கைக் குளத்தில் அந்நீர் வந்து சேருமாறு செய்தான்.

தற்போது தஞ்சை பெரிய கோயில் வளாகத்து மழைநீர் மட்டுமே சிவகங்கையில் சேகரமாகிறது. இன்றும் சிவகங்கை நீர் பூமிக்கடியில் உள்ள குழாய்கள் மூலம் தஞ்சை நகரில் உள்ள கிணறுகளில் வந்துவிழுவதை மழைக் காலங்களில் காணலாம்.

முற்காலத்தில் மன்னர்களால் மேற்கொள்ளப்பெற்ற அதே நெறியை மீண்டும் தமிழ் மண்ணில் நடைமுறைப்படுத்தும் மகத்தான சேவையில் **மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா** அவர்கள் ஈடுபட்டு வெற்றிகண்டு வருகிறார்கள்.

வீடுகள், கட்டிடங்கள் ஆகியவற்றின் மீது பெய்து கீழே வழிந்து வீணாகும் மழைநீர் கண்டபடி வழிந்து வீணாவதைத் தடுத்து நிறுத்திப் பூமிக்குள் செலுத்தி நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்த **மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா** அவர்கள் பலவகைகளிலும் முயற்சி மேற்கொண்டுள்ளார்கள். பலநூறாண்டுகளாக கவனிப்பாரற்று கைவிட்டுப் போன அத்திட்டம் மீண்டும் நிறைவேற மழைநீரை பூமிக்குள்ளும் வெளியிலும் சேகரிக்கும் பணியை அம்மா அவர்கள் ஏற்று செவ்வனே செய்து வருகிறார்கள். திருக்கோயில் வளாகங்களுக்குள் சேரும் நீரும் ஒருங்கு திரட்டப்பட்டுத் திருக்கோயில் குளங்கள் நிரம்பவும் வழிவகை செய்துள்ளார்கள்.

அவர்களால் சாதிக்கப்பெறும் மழைநீர் சேகரிப்பு வெற்றி எதிர் காலவரலாற்றில் நிச்சயம் இடம்பெறும் என்பது திண்ணம். ❖

## தூங்கானை மாடக்கோயில்

தூங்குகின்ற யானையின் பின்புறம் போன்ற அமைப்பில் கட்டப் பெற்ற கோயில்கள். இதனைக் கஜப் பிருஷ்டம் என்பர். திருப்பெண்ணாகடம் கோயில் தூங்கானை மாடக் கோயில் என்று தேவாரம் குறிப்பிடுகின்றது. மற்றும் திருவாரூர் கோயில் பூங்கோயில் (கமலாலயம்) என்றும் திருவீழிமிழலைக் கோயில் விண்ணிழி கோயில் என்றும் குறிப்பிடப் பெறுகின்றன.

# மகாபாரதம்

முனைவர் த.அமிர்தலிங்கம்

7

கண்ண பெருமானை வணங்கியவர்களாக நின்ற கர்ணன் உள்ளிட்ட அவ்வவையில் இருந்த அனைவருமே, கண்ணனை வழியனுப்ப ஒதுங்கி வழிவிட்டு வாசல்வரை உடன் வருகிறார்கள். உடன் வந்த கர்ணனை மட்டும் தம்மருகே வரவழைத்துப் பேசும் கண்ணன், ஒரு சில வார்த்தைகளிலே அவனுடைய பிறப்பின் இரகசியத்தை அவனுக்குத் தெளிவுபடுத்துகிறார்.

"அந்தணன் முன்தரு மந்திரம் ஐந்தினில்
அறுவரையும்
கடவுள்
குந்தி பயந்தனள் யானினி யென்பல கூறுவது!
உங்களில் நீர்
இந்த நிலம்பெறுவீர் தவிர்கிற் பெற யாரினி
வேறுரியார்!
வந்தினி நும்பியர் தம்மொடு
சேர்கென மாயன்
மொழிந் தனனே"
(கிருஷ்ணணன் தூது.220)

தீயவர்களுக்குத் துணைபோய், தூய கர்ணன் பாவத்தில் பங்குகொண்டு விடக்கூடாது என்று எண்ணிய கண்ண பெருமானின் திருவருளே இவ்வாறு 'பாண்டவர்களுடன் வந்து சேர்க' என கர்ணனை நோக் அறிவுறுத்துகின்றது!

ஆனால் அதுநாள் வரையிலும் தன்னைப் பெற்றவர் யார் என்று தெரியாமல் திகைத்து இருந்தவனாகிய கர்ணன், குந்தியே தன் தாய் என்பதை அறிந்து மேலும் திகைப்பிற்கு ஆளாவதாலும், செஞ்சோற்றுக் கடனைத் தருமமாக அவன் மதிப்பதனாலும் கண்ணனைப் பணிந்தவனாய்

"கன்றால் விளவின் கனியுகுத்தும்
கழை ஆநிரையின் கணம் அழைத்தும்
குன்றால் மழையின் குலம் தடுத்தும்
குலவும் செல்வக்கோபாலா
இன்றால் எனது பிறப்புணர்ந்தேன்
என்றன்புருகி எம்பியர்பால்
சென்றால் என்னை நீயறியச்
செகத்தார் என்றும் சிரியாரோ"
(கிருஷ்ணன் தூது 221)

"ஆரென்றறியத் தகாதவெனை
அரசுமாக்கி முடி சூட்டிச்
சீரும் திறமுந் தனது
பெருந்திருவும்
எனக்கே தெரிந்தளித்தான்
பாரின் றறிய நூற்றுவர்க்கும் பழிதீர்
வென்றிப் பாண்டவர்க்கும்
போரென் றறிந்துஞ் செய்ந்நன்றி
போற்றா தவரிற்
போவேனோ"
(கிருஷ்ணன் தூது 222)



என்று பதில் இறுக்கின்றான் கர்ணன் இவ்வாறே பதிலுரைப்பான் என்பதும் கண்ணபெருமான் தம்

வெறும் கண்களால் கடவுளைக் காண முடியாவிட்டாலும், கடவுளின் அருளை நாம் உணர முடியும்.

## சிவபிரானுக்கு செய்யப்படும் பதினாறு வகை உபசாரம்

தியானம், ஆவாகனம், ஆசனம், அர்க்கியம், ஆசமனம், அபிஷேகம், வஸ்திரம், சந்தனம், அலங்காரம், தூபம், தீபம், நைவேதனம், ஆரத்தி, புஷ்பாஞ்சலி, வலம்வரல், பிழை பொறுக்க வேண்டல்.

திருவருளால் ஏற்கனவே அறிந்து வைத்திருப்பதுதான், குந்தியிடம் கர்ணனின் பிறப்பின் உண்மையைத் தெரிவித்து வரம் கேட்டுப் பெறக் கூறிவிட்டு இப்போது கர்ணனிடம் அவன் தாய் யார் என்பதைத் தாமும் தெரிவித்தருளுகின்றார் என்றால் கர்ணன் சிந்தித்துப் பார்ப்பதற்கு அது வாய்ப்பாக அமைய வேண்டும் என்ற கருத்தினால் தான்.

ஆகவேதான் "குந்தி உன்னைத் தேடி வந்து வரம் கோருவாள்" என்பதாக எதுவுமே கூறாமல் கண்ணன் தன்னுடைய மனக்கருத்தைத் தெரிவித்த கர்ணனிடம் , அதன் மேல் தன் கருத்தொன்றையும் கூறாமல் கர்ணனுக்கு விடை கொடுத்தனுப்பி விடுகிறார். "தன்னைப் பெற்றவள் குந்தியே; பாண்டவர்கள் தம் தம்பிமார்களே; போரோ வந்து விட்டது. கண்ணனோ பாண்டவருடன் சேருக என்கிறார். நாமோ துரியோதனனின் உப்பை உண்டு விட்டோம். செஞ்சோற்றுக் கடனே கடன்" என்பதாகப் பல்வேறு எண்ணங்கள் வந்து மோத, கர்ணனும் கண்ணனிடம் விடை பெற்றுச் செல்கிறான்.

அரண்மனை வாயிலைத் தாண்டி வெளியே வந்த கண்ணபெருமான் தன்னருகே வருமாறு அடுத்து அசுவத்தாமாவை அழைக்கிறார்.

அசுவத்தாமா மாபெரும் வீரன். பாண்டவர், கௌரவர், ஆகிய இருசாராருக்கும் குருவாக விளங்கும் துரோணரின் ஒரே மகன். சிவபெருமானின் வரத்தாலே பிறந்தவன். அவன் போர்க்களத்தில் எதிர் நிற்பானேயானால் எத்தனை கோடி வீரர்கள் வந்தாலும் ஒரே பகலில் வெல்லக்கூடிய ஈடு இணையற்ற படைக்கலப் பயிற்சிகளைப் பெற்றவன். அத்தகைய மாபெரும் வீரன், துரியோதனனின் படைத் தலைமையை ஏற்று விட்டால் பாண்டவர்கள் வெற்றி பெறுவது எளிதல்ல என்பதை அறிந்திருப்பவராகிய கண்ண பெருமான், அசுவத்தமாவின் பேரில், துரியோதனன் கொண்டிருக்கும் நம்பிக்கையைக் குலைக்க நாடகம் நடத்தியாக வேண்டும் என்பதாகத் திருவுள்ளம் பாலித்தே அசுவத்தாமாவைத் தம்மருகே வருமாறு அழைக்கிறார்.

தம் கைவிரல் மோதிரம் தானாக நழுவித் தரையிலே விழுவதைப் போலச் செய்கிறார்.

அசுவத்தாமா கண்ணனின் சூழ்ச்சி புரியாமல், கண்ணபெருமானின் மோதிரத்தைக் கீழே குனிந்து எடுத்துத் தர, அதையும் உடனே வாங்கிக்கொள்ளாமல், ஆகாயத்தை அசுவத்தாமாவிடம் காட்டி "சூரியனை ஊர்கோள் சூழ்ந்திருப்பதைப் பார்த்தாயா?" என ஒரு கேள்வியையும் கேட்டு, அதற்கு அசுவத்தாமாவும் தலையசைக்க, பிறகே தம் மோதிரத்தை வாங்கி கைவிரலில் அணிந்து கொள்கிறார்.

இவற்றையெல்லாம் வைத்த கண் வாங்காமல் தன்னுடைய ஆசனத்திலிருந்தே பார்த்துக்கொண்டிருக்கும் துரியோதனனும், "ஆ! அசுவத்தாமாவும் எனக்குத் துரோகம் செய்துவிட்டான். கண்ணனின் மோதிரத்தை வாங்கி சூரியன் சாட்சியாக கண்ண பெருமானுக்குச் சத்தியம் செய்து தந்து விட்டான். இனி அவனை நம்பவோ, அவனைப் படைத்தளபதி ஆக்கவோ நானொன்றும் ஏமாளி அல்ல. அதோ அங்கே பாருங்கள்!" என்பதாக துரியோதனன் சப்தமிட, அசுவத்தாமாவும் அப்போது தான் கண்ணன் நடத்திய ஒரு நாடகத்தால் துரியோதனன் தன்மீது நம்பிக்கை இழந்து விட்டதை உணர்ந்து வருந்துகின்றான். மோதிரத்தைக் கையில் வாங்கி சூரியன் சாட்சியாக சத்தியம் செய்வது அக்காலப் பழக்கமாகும்.

விதுரனின் வில்லொடிக்க அவர் வீட்டில் விருந்தாளியாகத் தங்கிய கண்ணபெருமான், அதுநாள் வரை சொல்லாமல் வைத்திருந்து குந்திக்கும், கர்ணனுக்கும் அவர்களைப் பற்றிய

இரகசியம் தெரிவித்த கண்ண பெருமான், இப்போதும் அசுவத்தாமாவின் வீரம் துரியோதனனுக்குப் பயன்படாமல் போவதற்காக விரலாழியை நழுவவிட்டு ஒரு நாடகம் நடத்தி வெற்றியே காண்கிறார் என்றால் தருமத்தை நிலைநிறுத்த அவர் ஆற்றிடும் தந்திரங்களின் சிறப்பை எப்படி எடுத்துரைப்பது?"

"நாடகமே உலகம், மாந்தர் எல்லாம் நடிகர்கள்" என்று மகாகவி ஷேக்ஸ்பியர் தம் காவியத்தில் வரைந்திருக்கிறார். ஆனால் நம்முடைய தமிழ்ச் சமயச் சான்றோர்கள் தான் ஆண்டவனையே நடிகனாக - மாந்தர் வாழ்க்கையெல்லாம் இறைவன் திருவிளையாடல்களாக வருணித்திருக்கிறார்கள்.

"உலகம் யாவையும் தாம்உள வாக்கலும்

நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா

அலகு இலா விளையாட்டு உடையார் அவர்

தலைவர், அன்னவர்க்கே சரண் நாங்களே"

என்று கவிச்சக்கரவர்த்தி கம்பரும் இறைவனையே நாடகத் தலைவராகக் காட்டுவார்.

மகாபாரதக் காவியம் முழுவதுமே கண்ணபெருமானின் திருவிளையாடல்களைக் காட்டுவது தான்.

கண்ணபெருமான் அசுவத்தாமாவிடம் ஆடிய இந்த நாடகத்திற்குப் பிறகு இமையவர் வேந்தனாகிய இந்திரனை உடனே தாம் இருக்குமிடம் வருமாறு அழைக்கிறார். இந்திரனும் வந்துவணங்கி நிற்கிறான். "நீ செய்து முடிக்க வேண்டிய வேலை ஒன்று இருக்கிறது. நான் சொல்வதைப் போல் செய்" என்று இந்திரனுக்கு ஆணையிட்டருளுகிறார் கண்ணபெருமான். இந்திரனை கண்ணபெருமான் என்ன வேலை செய்து வர ஏவுகிறார்? அவ்வேலையும் கண்ணபெருமானின் மனம்போலவே நடந்து முடிகிறதா? என்பனவற்றையெல்லாம் நாம் காண்போம்...

தொடரும்...

# கிழவியின் நிழலில் சுகமாக இருக்கிறேன்



இராஜராஜசோழன் தஞ்சைப் பெருவுடையார் ஆலயம் கட்டித் திருக்குடநீராட்டு விழாவையும், மிகச்சிறப்பாக நிறைவேற்றிய பெருமையுடன் இறைவனிடம் "நான் இவ்வளவு சிறப்பாகக் கோயில் கட்டிக் கொடுத்து இருக்கிறேனே, உமக்கு நிறைவுதானே!" என்று கேட்டான்.

அதற்குப் பிரகதீஸ்வரப் பெருமான் "கிழவியின் நிழலில் சுகமாக இருக்கிறேன்" என்று பதில்அளித்தார்.

வியப்புற்ற சோழன் உண்மையில் நடந்தது என்ன என்பதை விசாரித்துத் தெரிந்து கொண்டான்.

ஆலயத் திருப்பணி நிறைவுறும் சமயம் விமானத்திற்குக் கருங்கற்கள் பொருத்திக் கொண்டு இருந்தார்கள். பெருவுடையார் உருவத்திற்கு மேலே இருந்த சிறு இடைவெளியை மூடுவதற்கு இசைவான கல் ஒன்று எங்கு தேடியும் கிடைக்கவில்லை.

கடைசியாக ஒரு கிழவியின் குடிசை வாசலிலிருந்த ஒருகல்தான் பொருத்தமாக இருந்தது.

பக்தியோடு கிழவி அர்ப்பணித்த ஒரு சிறு கல்லைக் கூட பெரிதாக மதித்து "கிழவியின் நிழலில் சுகமாக இருக்கிறேன்" என்று பாராட்டியுரைத்த பெருவுடையாரின் திருவருள் சிறப்பை இதனால் நாம் நன்கு உணரலாம்.

கடவுள் வழிபாட்டையும், தரும செயல்களையும், நிறையச் செய்தால், எப்போதும் மகிழ்ச்சியாகவும், மேன்மை அடையவும் வழி வகுக்கும்.

# ? பதில்



கு.கண்ணன், குறிச்சி, நெல்லை

கேள்வி : திருவிளக்கு ஏற்றிட உகந்த திசைகள் யாவை ?

பதில்: 1. கிழக்கு : இத்திசையில் தீபம் ஏற்றிவழிபட, , துன்பம் ஒழியும், கிரக பீடை அகலும்.

2. மேற்கு : கடன் தொல்லை, சனிபீடை, கிரக தோஷம், பங்காளிப்பகை நீங்கும்

3. வடக்கு : திரவிய செல்வமும், மங்களமும் உண்டாகும். திருமணத் தடை, சுபகாரியத்தடை, கல்வித்தடை, இவை அனைத்தும் நீங்கும். சர்வ மங்களமும் உண்டாகும்.

4. தெற்கு : தீபம் ஏற்றக் கூடாது.

★★★

பால சுப்பிரமணியன், பாளையங்கோட்டை

கேள்வி : சிதம்பர ரகசியம் என்றால் என்ன?

பதில் : சிதம்பரத்தில் நடராஜ மூர்த்திக்குப் பின்புறத்தில் தோன்றா உருவுடைய ஆகாச லிங்கம் உள்ளது. ஆகாசம் உருவற்ற பரவெளி ஆகும். இதனையே சிதம்பர ரகசியம் என்பர். இந்த ரகசியம் மகா ஞானிகளுக்கே புலப்படும். அனைத்தையும் தனக்குள் அடக்கிக் கொள்ளும் சிதம்பர ரகசியம் என்பதுஇறைவனுடன் இரண்டறக் கலத்தலே ஆகும். பஞ்சபூத தலங்களுள் 'ஆகாச'த் தலமாக கூறப்படுவதும் இதற்காகவே.

★★★

செந்தில், பிள்ளையார்பட்டி

கேள்வி : அஷ்ட புஷ்பங்கள் யாவை?

பதில்: எருக்கு, தாமரை, புன்னை, நந்தியாவர்த்தம், பாதிரி, அரளி, சண்முகம், நீலோற்பலமலர்கள்.

பி. மாரிமுத்து, மயிலாப்பூர், சென்னை.

கேள்வி : ஐஸ்வர்யம் கிடைக்க எத்தனை முக ருத்ராட்சம் அணிய வேண்டும்?

பதில் : ஐஸ்வர்யம் கிடைக்கவும், தீராத நோய் நீங்கவும், சுப்பிரமணிய ஸ்வரூபம் என அழைக்கப்படும் **ஆறுமுகம் கொண்ட ருத்ராட்சம்** அணிய வேண்டும்.

திரு.தி. கணேஷ், பட்டுக்கோட்டை

கேள்வி : "நம" என்பதன் விளக்கம் என்ன?

பதில்: "நம" என்றால் வணக்கம், தம்பனம் - நிலை நிறுத்தல். இறைத் திருவருள் தன்னில் நிலைக்க வேண்டுதல். எனவே, இது மூல மந்திரங்களின் முடிவில் சேர்க்கப்படும்.

★★★

செல்வி. ஆர்.ஜனனி, அம்பத்தூர், சென்னை-53.

கேள்வி : பஞ்ச நாதங்கள் எவை எவை? ஐந்து வகை ஒலிகளைக் குறிப்பதா? அவை என்ன?

பதில் : நாதம் - என்னும் பொருள் கொள்ளாமல் நாதன் என்ற பொருளில், ஐந்து முக்கிய சிவத்தலங்களைக் குறிப்பிடுவது அது.

1. விசுவநாதம் - வாரணாசி (உ.பி.)
2. சோமநாதம் - சோம்நாத் (குஜராத்)
3. ராமநாதம் - ராமேஸ்வரம் (தமிழ்நாடு)
4. வைத்தியநாதம் - பர்லி (மகாராஷ்டிரா)
5. ஜெகந்நாதம் - பூரி (ஒரிசா)

★★★

இலட்சுமி அம்மாள், மதுரை

கேள்வி : பதினாறும் பெற்றுப் பெரு வாழ்வு வாழ்க என்பதில் உள்ள பதினாறு பேறுகள் எவை?

பதில் : புகழ், வலிமை, நன்மக்கள், பொன், நெல், நல்லூழ், கல்வி , அனுபவம், அழகு, துணிவு, நோய் இன்மை, வாழ்நாள், வெற்றி, பெருமை அறிவு ஆகியவை ஆகும். அபிராமி அந்தாதியின்'கலையாத கல்வியும்' என்று தொடங்கும் பாடலில் பேறுகள் எப்படி அமையப் பெற வேண்டும் என்பதையும் சுவைபடக் கூறுகின்றன.

***

இராஜா பிரசாந்த், அண்ணாநகர், சென்னை

கேள்வி : முருகனுக்கு ஆறுமுகங்கள் ஏன்?

பதில் : சிவனுக்கு ஐந்து முகங்கள் உண்டு. அதோடு, அதோ முகம் என்னும் முகத்தினையும் சேர்த்து ஆறுமுகம் என அழைக்கப்படுகிறார். சிவத்துக்குரிய ஐந்து முகத்தினையும் சக்தியின் ஒரு முகத்தினையும் கொண்டு, ஆறுமுகம் ஆகினார் எனவும், நான்கு திசைகளுடன் மேல் கீழ் இடங்களை பரிபாலனம் செய்வதால் ஆறுமுகம் ஆனார் எனவும் குறிக்கப்படுகிறது.

***

தி. இராமமூர்த்தி, அமைந்தகரை, சென்னை

கேள்வி : ஆவுடையார், பாணம், லிங்கம், என்றால் என்ன? விளக்க முடியுமா?

பதில் : சிவலிங்கத்தில் ஆவுடையார் என்பது அடியில் இருக்கும் பீடப்பகுதியாகும். இது சக்தியைக் குறிக்கும். லிங்கம் ஆவுடையாரின் மீது தோன்றி சிவத்தின் உண்மை சொருபமாகிய பரவெளியைக் குறிக்கின்றது. இதுவே பாணம் அல்லது லிங்கம் எனப்படுகிறது. லிங்கப் பகுதி கீழே பிரம்ம பாகம் எனவும், நடுவில் விஷ்ணு பாகம் எனவும், மேலே வெளித் தெரிவது ருத்ரபாகம் எனவும் மூன்றாகப் பிரிக்கப்படுகின்றது.

***

செல்வி. அகிலாண்டேஸ்வரி, திருச்சி

கேள்வி : அஷ்ட சிரஞ்சீவிகள் யார்?

பதில் : இறை அருளால் இறவாமையை அடைந்த மார்க்கண்டேயர், அஸ்வத்தாமன், மாவலி, வியாசர், அனுமன், விபீடணன், கிருபர், பரசுராமர் ஆகிய எட்டு பேரும்அஷ்ட சிரஞ்சீவிகள் என அழைக்கப்படுகின்றனர்.

***

குமார், விருத்தாச்சலம்

கேள்வி : எழுவகை பிறப்புகள் என்பவை யாவை?

பதில் : தேவர், மனிதர், விலங்கு,பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பவையாகும்.

***

திரு.பி. சந்திரசேகரன், மேற்கு மாம்பலம், சென்னை

கேள்வி : ஒரு நாளில் வெவ்வேறு நேரங்களில் இறைவனை அழைப்பதற்கு சிறப்புப் பெயர்கள் இருப்பதாகத் தெரிவிக்கின்றார்கள். அவைகள் யாவை?

பதில் :

| செயல் | திருமால் நாமம் | சிவ நாமம் |
|---|---|---|
| 1. உணவு உண்ணும் போது | ஜனார்த்தனா | ப்ராணவல்லபா |
| 2. திருமணம் நடைபெறும் போது | பிரஜாபதி | கல்யாண சுந்தரா |
| 3. யுத்தக் காலத்தில் | சக்ரதாரி | சூலபாணே |
| 4. பிரயாணத்தைத் தொடங்கும் முன் | திரிவிக்ரமா | மார்க்க பந்தோ |
| 5. நண்பர்களிடத்தில் பேசுவதற்கு முன்பு | ஸ்ரீதரா | தியாகராஜா |
| 6. கெட்ட சொப்பனம் கண்டால் | கோவிந்தா | புஜங்க பூஷணா |
| 7. சங்கட காலங்களில் | மதுசூதனா | சங்கரா |
| 8. தனி வழி செல்லும் போது | நரசிம்மா | கிருத்திவாசா |
| 9. நெருப்பினால் ஆபத்து உண்டாகும் போது | ஜலசாயினே | நடராஜா |
| 10. தண்ணீரால் ஆபத்து நேரிடும் போது | வராஹா | கங்காதரா |
| 11. மலை ஏறும் போது | ரகுநந்தனா | கைலாஸபதி |
| 12. வீதியில் நடக்கும் போது | வாமனா | விஸ்வநாதா |
| 13. மருந்துகள் உண்ணும் போது | விஷ்ணு | வைத்தியநாதா |
| 14. உறங்கச் செல்லும் போது | பத்மநாபா | பார்வதி ரமணா |
| 15. எங்கும், எப்போதும் | மாதவா | மஹாதேவா |

மேற்கண்ட திருநாமங்களை (திருப்பெயர்களை) அந்தந்தச் சந்தர்ப்பங்களில் பலமுறை உச்சரிப்பதால் அளவற்ற நிம்மதியும், துணிவும், வெற்றியும், மகிழ்ச்சியும் உண்டாகும்.

ஆலயங்களுக்குச் சென்று இறைவனை வழிபட்டு முன்னோர்களின் முயற்சியை வியந்து எண்ணத்தை தூய்மைப் படுத்திக் கொள்வதுடன், திருக்கோயிலையும் தூய்மையாக வைக்க நம்மால் முடிந்ததை செய்ய வேண்டும்.

# சிற்ப ஓவியங்களில் தேவாரமும் ஓதுவார்களும்

டாக்டர் குடவாயில் பாலசுப்பிரமயன், தஞ்சை



தாராசுரம் ஐராவதீஸ்வரர் கோயிலில் உள்ள இரண்டாம் இராஜராஜசோழன் காலத்து ஓதுவார் சிற்பங்கள் - ஒவ்வொருவர் பெயரும் கல்வெட்டாகப் பொறிக்கப்பட்டுள்ள காட்சி.

பல்லவர் சோழர் கால சாசனங்களில் திருப்பதிகங்கள் பாடும் இசைவாணர்களைத் 'திருப்பதியம் பாடுவார்' 'திருப்பதியம் பாடும் அடிகள்மார்' 'பிடாரர்கள்' என்ற பெயர்கள் குறிக்கின்றன. சிவதீட்சை பெற்ற பிறகு 'சிவன்' என்ற சிவநாமத்தை இணைப்பது வழக்கத்தில் இருந்துள்ளது.

தேவாரம் தொடர்புடைய சிற்பங்களைப் பெற்றுத் திகழும் ஒரே திருக்கோயிலாகத் தாராசுரம் திருக்கோயில் விளங்குகிறது. இங்கு தேவார மூவரும் திருப்பதியம் பாடும் எழிற்காட்சிகள் இடம் பெற்றுள்ளன. இவற்றுள்ளே தலையாய சிறப்புடைய சிற்பமாக விளங்குவது திருநாவுக்கரசர் கயிலையைக் காணச் சென்று அங்குள்ள பொய்கையில் மூழ்கித் திருவையாற்றில் உள்ள வாவியில் எழுந்து "மாதர்ப் பிறைக் கண்ணியானை" எனும் பதிகம் பாடியதாகும். கயிலைக் காட்சிகளில் தொடங்கித் திருவையாற்றில் பதிகம் பாடியது ஈறாகத் தொடர்காட்சியாகச் சிற்ப அமைப்பு உள்ளது. பதினோரு பாடல்களுக்கும் பதினொரு காட்சிகள் உள்ளன. ஒரு பதிகம் இங்கு முழுமையாகச் சிற்ப வடிவம் பெற்றுள்ளது.

அதேபோல் திருஞானசம்பந்தர் திருவாலவாய் சென்று புனல்வாதம் செய்த காட்சியாக, "வாழ்க அந்தணர்" எனத் தொடங்கும் திருப்பாசுரத்தை ஏட்டில் எழுதி, வைகை ஆற்றில் விடவும் அது நீரின் போக்கை எதிர்த்துச் செல்லும் காட்சி அழகுடைச் சிற்பமாகக் காட்சி நல்குகின்றது.

சுந்தரரும் சேரமான் பெருமாளும் திருக்கண்டியூர் வீரட்டம் சென்று வழிபட்டபின், காவிரியின் வடகரையிலுள்ள திருவையாற்றுக் கோயிலுக்குச் செல்ல முற்படும்போது, பெருகி வரும் வெள்ளம் கண்டு "பரவும் பரிசொன்றுடையேன் நான்" என்னும் முதற்குறிப்புடைய பதிகம் பாடினார். காவிரியின் இடையே வழி ஏற்படும் காட்சி, சிற்பமாக விளங்குவதோடு, மேலாக "உடைய நம்பிக்கு ஓலமென்றருளிபடி" என்னும் கல்வெட்டு காணப்பெறுகின்றது.

இதே போன்று "அவிநாசியாண்டார் முதலை வாய்ப்பிள்ளை" என்ற கல்வெட்டின் கீழ்க்காணப் பெறும் சிற்பப் படைப்பில் சுந்தரர் "எற்றான் மறக்கேன்" எனும் பதிகம் பாடுவதும் மடுவிலுள்ள முதலை விழுங்கிய சிறுவனை உமிழும் காட்சியும் ஏற்றமிகு படைப்புக்களாக விளங்குகின்றன.

இத்திருக்கோயிலில் தேவாரமூவர்கள் பதிகம் பாடும் திருக்காட்சிகளை நாம்

காணும்போதே வடபுறத்திருச்சுற்றில் இரண்டாம் இராஜராஜன் காலத்தில் இத்திருக்கோயிலுக்கென நியமிக்கப்பெற்ற திருப்பதிகங்கள் பாடும் பிடாரர்கள் நூற்றெண்மர் உருவச்சிற்பங்களும், அவர்தம் இயற்பெயரும் தீட்சை பெயரும் கல்வெட்டுப் பொறிப்போடு விளங்குவதைக் கண்டு மகிழலாம். இராஜராஜனின் தஞ்சைக் கல்வெட்டு குறிப்பிடும் அதே தீட்சா நாமங்களே இங்குள்ள ஓதுவாமூர்த்திகளுக்கும் குறிக்கப் பெற்றுக் காணப் பெறுவது சிறப்பு அம்சமாகும்.



தாராசுரம் சிற்பத்தில் பிடாரர்கள் (ஓதுவார்கள்)

**ஓவியங்களில் தேவாரமும் ஓதுவார்களும்**

திருவாரூர்த் திருக்கோயிலில் சுந்தரர் திருத்தொண்டத்தொகை பாடிய இடம் தேவாசிரிய மண்டபமாகும். அம்மண்டபத்தின் விதானத்தில் கி.பி.1700 ஆம் ஆண்டுகளில் தஞ்சை சகசி மன்னின் ஆக்கத்தால் சிங்காதனம் என்பான் வண்ண ஓவியத் தொகுப்பொன்றைப் படைத்துள்ளான். அதில் தியாகப் பெருமான் கோயிலின் கருவறையின் வாயிலைச் சாமந்தனார் எம் அரசப்பிரதிநிதியும், ஓவியம் வரைந்த சிங்காதனமும் வணங்கி நிற்க, எதிரே இரண்டு ஓதுவார்கள் தேவாரம் பாட, பணியாளன் ஒருவன் கதவினைத் திறக்கும் காட்சி இடம் பெற்றுள்ளது. காட்சி விளக்கங்கள் அங்கங்கே தமிழில் எழுதப்பெற்றுள்ளன. ஓதுவார்களுக்குக் கீழாக "ஓதுவார்" என்னும் பெயரும் காணப்பெறுகின்றது. ஓதுவா மூர்த்திகள் பதிகம் பாடக் கருவறைக் கதவு திறக்கும் மரபு கி.பி. 1700 இல் ஆரூரிலே திகழ்ந்தது என்பதனை இச்சான்றால் அறிய முடிகிறது. ❖

## பஞ்சாட்சரப் படிகள்



சிதம்பரத்தில் சிற்றம்பலத்தையும், அதன் முன் உள்ள மகா மண்டபமாகிய பொன்னம்பலத்தையும், இணைக்கும் வகையில் ஐந்துபடிகள் உள்ளன. இவையே பஞ்சாட்சரப் படிகள் என அழைக்கப்படுகின்றன. இவற்றின் இரண்டு புறமும் இரண்டு யானை வடிவங்கள் இருப்பதால், களிற்றுப்படி எனவும், அழைக்கப்படுகிறது.

திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார் தான் இயற்றிய சாத்திரத்தின் ஏட்டுப் பிரதியை இப்படியில் வைக்க அப்படியின் பக்கவாட்டில் இருந்த கல் யானை உயிர் பெற்று தன் துதிக்கையால் அச்சுவடியை எடுத்து நடராசப் பெருமானின் திருவடியில் வைத்து, மீண்டும் பழைய நிலையை எய்தியது. அதனால், இந்நூல் திருக்களிற்றுப் படியார் என பெயர் பெற்றது.

நம் சக்திக்குட்பட்ட தர்மம் எதுவானாலும், தினமும் செய்ய வேண்டும்.

# அதிசயத் தலமரம் அழிஞ்சல்



திருமழிசை, அருள்மிகு ஒத்தாண்டீஸ்வரர் திருக்கோயில் அமைந்துள்ள இடம் அழிசை எனும் மரங்கள் அமைந்த காடாக இருந்தது எனவும், அழிசைக்காடு இருந்ததால் திருமழிசை எனப் பெயர் பெற்றது எனவும் கூறுவர். அழிஞ்சல் மரங்கள் இருந்த காடு அழிசை எனப்பெயர் பெற்றது.

அழிஞ்சல் மூலிகை வகைத் தாவரம் ஆகும். அழிஞ்சல் மரத்தில் 13 வகைகள் உண்டென்றும் ஏறழிஞ்சல், இறங்கழிஞ்சல், கருப்பழிஞ்சல், எனப் பலவகைப் பெயர்கள் உண்டென்றும் கூறப்படுகின்றது. தாவரவியலார் இதனை Alangium Decapetalum எனவும் அழைப்பர். அங்கோலம் எனவும் இது அழைக்கப்படும்.

சித்திரை வைகாசி மாதங்களில் இதன் காய்கள் கீழே விழும். அமாவாசை பௌர்ணமி தினங்களில் விழும் இக்கனிகள் மரத்தின் அடி வேரிலும் தண்டுப் பகுதியிலும் நகர்ந்து சென்று ஒட்டிக் கொள்ளும். இவ்வகை மரங்கள் ஏறழிஞ்சல் எனப்படுகின்றன. சில கனிகள் கிளைகளிலிருந்து நகர்ந்து சென்று இறங்கி கீழ்நோக்கி வரும் என்பர். இவ்வகை இறங்கழிஞ்சல் எனப்படும்.

அழிஞ்சல் மரம் வாதம், கோபம், கபதோஷம்,சீழ்வடியும் பெருநோய் இவைகளை நீக்கும். ஜீவ ஜந்துக்களின் பற்கடியினால் நேர்ந்த விஷக்கடி தோஷங்கள் நீங்கும் என்பது போன்ற சித்த மருத்துவ குணங்களை உடையது என 'பதார்த்த குண விளக்கம்' என்னும் நூல் விளக்குகின்றது.

குசஸ்தலை ஆற்றின் கரையில் அகத்திய முனிவர் சிவலிங்கங்களை பிரதிஷ்டித்துக் கொண்டு வந்து 108வது சிவலிங்கமாக ஒரு சிவலிங்கத்தை அழிஞ்சல் மரக்காடுகள் நிறைந்த திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், சின்னக்காவணம் என்னும் ஊரில் பிரதிஷ்டை செய்தார் எனவும், அதனால் இத்திருக்கோவில் நூற்றெட்டீஸ்வரர் திருக்கோயில் எனவும், வழங்கப்டுகிறது.

குசஸ்தலை ஆற்றின் கரையில் 107 சிவலிங்கங்களின் பிரதிஷ்டை முடிந்து, 108வது சிவலிங்கத்தை அழிஞ்சல் காட்டில் பிரதிஷ்டை செய்ததிலிருந்து அதனை வழிபடுவோருக்கு அனைத்து நோய்களும் தீரும் என்பதற்காகத்தான் பிரதிஷ்டை செய்தார் எனக் கூறப்படும் காரணமும் ஏற்கத்தக்கதாக உள்ளது.

இத்தகைய முக்கிய மூலிகைத் தல மரத்தினை உடைய இறைவனை வணங்குவதால், குஷ்டநோய் தீருவதற்கும் ஜந்துக்கள் தீண்டியதால் ஏற்படும் விஷம் முறிவுபடும் என்பது ஐதீகம்.

- சென்னை இணைஆணையர் மண்டலச் செய்தித் தொகுப்பு

## தீபத்தின் நலன்

தீபத்திற்கு நெய் விடுவது சகல வித செல்வங்களையும் நலனையும் தரும்.

நல்லெண்ணெய் விளக்கு எல்லாப் பீடைகளையும் விலக்கும்.

விளக்கெண்ணை தீபம் புகழ், பந்து சுகம், தாம்பத்ய சுகம் இவற்றை அதிகரிக்கும்.

கடலெண்ணையால் விளக்கேற்றக் கூடாது.

வேப்பெண்ணை, நெய், இலுப்பெண்ணை ஆகிய கலந்து முக்கூட்டு எண்ணையால் செல்வம் உண்டாகும். குலதெய்வத்திற்கு உகந்தது.

நெய், விளக்கெண்ணை, வேப்பெண்ணை, இலுப்பெண்ணை ஆகிய ஐந்தும் கலந்து ஏற்றிப் பூஜை செய்கிறவர்களுக்கு இறையருள் வாய்க்கும்.

With best compliments from :

TRADE MARK

ஆண்டாள் சீவல்

ஆண்டாள் சீவல்

REGD. No.634995

தயாரிப்பாளர்கள் :

**ஸ்ரீ ரெங்கவிலாஸ் சீவல் கம்பெனி**

திருச்சி - 5.

நல்வாழ்த்துக்களுடன்....

சின்ன கடைவீதியில்
ஒரு
"பெரிய கடை"



**லக்ஷ்மி**
**சில்க்ஸ் & ரெடிமேட்ஸ்**

**மலைவாசல், திருச்சி-2. போன் : 2701344**



# இனிய நல்வாழ்த்துக்கள்



**பா. ஆதிநாராயணன் செட்டியார்**

**ஆ.குமரன்**

# அப்பாய் மளிகை

5, இளங்கண் மாரியம்மன் கோவில் தெரு,

(காந்தி மார்க்கட் அருகில்)

திருச்சி - 620 008.

போன் : 2709083, 2706485

WITH BEST WISHES FROM :



# GEM GRANITES

## Manufacturers and Exporters of Polished and Flame Finished Granite Building Slabs, Tiles, Memorials, Markers etc., in many colours

**FACTORY (Tamil Nadu)**
#146, Injambakkam, Chennai - 600 041.
Phone : 044-24490885 / 24491835
Fax : 044-24491357

**FACTORY ( Karnataka)**
Balagundi Village,
Hungund Taluk
Bagalkot District
Karnataka - 587 125.

Administrative Office:
#78, Cathedral Road, Chennai - 600 086.
Phone : 044 - 28115190, Fax : 044 - 28117338
E-mail : sales@gemgranites.com
gemgran@giasmd01.vsnl.net.in
Website : www.gemgranites.com

**"BUILDING INDIA'S PRESTIGE IN GRANITES"**

**(A 100% Export Oriented Unit)**

நல்வாழ்த்துக்களுடன்....




தெய்வப் பழநியில் புகழ்பெற்றது

பழனி

# பரிமள விலாஸ்

## S.சித்தனாதன்

**ஜவ்வாது வாசனை விபூதி**

**மற்றும்**

**ஸ்பெஷல் பஞ்சாமிர்தம்**

**வாங்கி உபயோகியுங்கள்**

உரிமையாளர் : **S.சித்தனாதன் சன்ஸ்**

அடிவாரம், பழநி - 624 601.

**போன் : கடை : 42405 வீடு மற்றும் ஸ்டோர் : 42406**

With best compliments from :

# GALAXY

## TRICHY AIR PRIVATE LIMITED

**INTERNATIONAL & DOMESTIC AIR TICKETS**

**ALL PASSPORT RELATED SERVICES**

IATA

TAAI

**Head Office :**
1,2 & 3, Kanchana towers,
13F, Williams Road, Trichy-1.
Ph : 2414126, 2412272, 2465112, 2464495 Fax : 2414126
E-mail : galaxyravi@sify.com

**L.O. : Chennai**
7&8, Nambi Complex, Blackers Road, Chennai-2.
Ph : 28512470, 28511843

நல்வாழ்த்துக்களுடன்....

பதிவு எண் : 118/99



# பிரும்மவித்யாம்பாள் டிவைன் டிரஸ்ட்

## ஸ்ரீ பிரும்ம வித்யாம்பாள் வேதசிவாகம பாடசாலை

அன்புள்ளம் கொண்ட ஆன்மீக அன்பர்களே!

கருணைமிகு ஸ்ரீ பிரும்ம வித்யாம்பாள் சமேத ஸ்ரீ சுவேதாரண்யேஸ்வரர் திருவருளாலும் கருவாழக்கரை ஸ்ரீ காமாட்சியம்மன் திருவருளாலும் கடந்த 1999 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 25ஆம் தேதி இவ்வறக்கட்டளை துவங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

இப்பள்ளியில் ஆதிசைவ சிவாச்சார்ய மரபில் தோன்றிய குழந்தைகளுக்கு ருக், யஜுர், சாமம், அதர்வணம் ஆகிய நான்கு வேதங்கள், சிவாகமம், சாஸ்திரம், காவியம், புராணம், திருமுறை, சைவசித்தாந்தம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்கள் பயில்வதோடு நன்கொடையாளர்கள் உதவியுடன் தங்குமிடம், உணவு, உடை, மருத்துவம் ஆகிய அனைத்தும் இலவசமாக அளிப்பதோடு 5 ஆண்டுகள் பயிற்சி முடித்து மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. ஆகவே விருப்பம் உள்ள ஆதிசைவ சிவாச்சார்ய சமூகத்தைச் சேர்ந்த மாணவர்கள் பாடசாலையில் சேர்ந்து பயனடைய வேண்டுகிறோம்.

இறைபணியில் என்றும்

**S. சண்முகம் பிள்ளை**
துணைத்தலைவர்
ஓய்வுபெற்ற தமிழாசிரியர்
இலையமுதுகூடம் - 04364-256344

திருப்பணித் திலகம்
**டாக்டர் G. அன்பழகிசுந்தரேசன்,** M.B.B.S.
நிறுவனர் / தலைவர்

**T.A. தெட்சிணாமூர்த்தி சிவாச்சாரியார்**
செயலர் - பொருளாளர்
ஸ்ரீ பிரும்ம வித்யாம்பாள் டிவைன் டிரஸ்ட்
ஸ்ரீ பிரும்ம வித்யாம்பாள் வேதசிவாகம பாடசாலை
சன்னதி தெரு(ருத்ரகயா) திருவெண்காடு - 609 114.
சீர்காழி வட்டம், நாகை மாவட்டம். தமிழ்நாடு
போன்- 04364 - 256531, 275931 தென் இந்தியா

**S. ஜெகதீஸ்வரி**
உறுப்பினர்

**D. விஜயலெட்சுமி**
உறுப்பினர்

With best compliments from

# Flats For Sale

## SHRI AKILANDESWARI GARDENS

MELUR ROAD, SRIRANGAM, TIRUCHY - 620 006.

S.K.V. Builders having completed 15 years successfully in the construction field, Handing over on 15.02.2005

D.T.P. Approved

1 K.M. from Srirangam Rajagopuram

East to "THATHACHARIAR GARDENS"

Lord Ranganatha Swami Visits twice a year

The famous Masi Garuden and Chithirai Hanumantha Vahanam

Excellent Location

Coconut Thope all around

Free Air

Very near to Malattaru and Kaveri River

One Hundred and Eleven (111) Deluxe Single and Double Bed Room Flats,

24 Hours Water Supply, Covered Car & Scooter Parking

3 Phase Electric Supply

## OUR PREVIOUS PROJECTS AT SRIRANGAM

* SHRI RANGA * CHANKYA * THIRUMANGAI * JAYASHREE * CHAITANYA * CHATRAPATHI * SHRI MARUTHI * VEDANTA DESIKA HOMES * SHRI GOKULAM * THIRUMAL * SHRI SAPTHAGIRI HOMES

**FOR DETAILS PLEASE CONTACT :**

## M/S. S.K.V. ENGINEERING CONSTRUCTIONS

540A, AMMA MANDAPAM ROAD, SRIRANGAM, TIRUCHY - 620 006.

☎: 0431-2433132 / 2434685 CELL : 98424 43132

**LOCAL ADDRESS**

S.K. JAGANNATHAN, 213, SARASWATHY RAMAKRISHNAN STREET, JANAKI NAGAR, VALASARAWAKKA, CHENNAI - 87. ☎: 044-24866901

With best compliments from

# ARK VIDHYAJOTHI VIKHAS

## MATRICULATION HR.SEC. SCHOOL



Kallanai Road, Vengur,
Trichy - 620 013.
Ph : 0431 - 5535258, 3100741

உ

பழனி முருகன் தங்கம்! ஓம் சரவணபவ இல்லத்தின் தெய்வீக அங்கம்!!

நல்வாழ்த்துக்களுடன்....

# பழனி முருகன் ஜீவல்லரி



108 ஆண்டுகள் பாரம்பரியம்மிக்க ஸ்தாபனம்





ஆடைநகரின் ஆபரண உலகம்




தலைமுறைகள் போற்றும் தங்கச்சுரங்கம்

பொன்விழா கண்ட பொற்கோவில்......

N. ராஜகோபால் செட்டியார் சன்

## பழனி முருகன் ஜீவல்லரி

நெ. 240,242, ஜவஹர் பஜார், கரூர்-1.
போன் : 04324-264427,263927,260227

உரிமையாளர் : N.C. சுதர்சன், N.S. பாலமுருகன்

நல்வாழ்த்துக்களுடன்....

# பழனி
# ஸ்ரீ கந்தவிலாஸ் விபூதி ஸ்டோர்

SRI KANDA VILAS
VIBUTHI STORE
ADIVARAM, PALNI

## எமது சிறந்த தயாரிப்புகள்
## ஸ்பெஷல் பஞ்சாமிர்தம்
## ஜவ்வாது வாசனை விபூதி
## உடனடி சாம்பிராணி வகைகள்
## நறுமணப் பத்தி வகைகள்

**ஸ்ரீ கந்தவிலாஸ் விபூதி ஸ்டோர்**

34, அடிவாரம், பழனி

போன் : *242796 / 242133*, ஃபேக்ஸ் : *247915*

ஈ.மெயில் : srikandavilaspln@eth.net

வெப்சைட் : www.srikandavilas.com

# திருவிளையாடல் புராணம்

- இரா அரங்கசாமி

## 5. திருமணப் படலம்

உமாதேவியார் இளம் கன்னியாக இருந்து மனுநூல் முறைப்படி அரசாட்சி செய்து வந்தார். அவருக்குத் திருமணம் செய்யும் காலம் வந்து எய்தியது. அவர் தாயாகிய காஞ்சனமாலை தன் மகளுக்குத் திருமணப் பேறு இன்னும் கூடவில்லையே என்று வருந்தத் தொடங்கினாள். அதை அறிந்த உமாதேவியார், "தாயே! நீ வருந்தற்க, நான் சென்று எட்டுத் திக்குகளிலும், இப்பூமண்டலத்திலும் என்னுடைய வெற்றியை நாட்டி வருகிறேன். அப்போது நீ எண்ணிய எண்ணம் நிறைவேறும். நீ இங்கேயே இருப்பாயாக" என்று கூறி விரைந்து எழுந்து சென்றார்.

தடாதகைப் பிராட்டியார் தேரில் ஏறினார், அரசர்களும் அமைச்சர்களும் அவரைத் தொடர்ந்தனர். வெற்றி முரசு கொட்ட பிராட்டியார் புறப்பட்டுச் சென்றார். நால்வகைப்படைகளும் அவரைப் பின் தொடர்ந்து சென்றன. வடநாட்டில் உள்ள கயபதி, துரகபதி, நரபதி முதலான அரசர்களை அம்மையார் வென்று அவர்களின் செல்வங்களையெல்லாம் கவர்ந்தார். அம்மையார் இந்திர உலகம் அடைந்தார். இதை அறிந்த இந்திரன் தன் ஆற்றல் அழிந்து போர்க்களம் வராமலே நீங்கினான். இந்திரனின் செல்வங்களைக் கவர்ந்து கொண்ட அம்மையார் கயிலாய மலையை அடைந்தார்.



அம்மையார் கயிலையை அடைந்தவுடன் அங்குள்ள காவலர்கள் ஓடிச் சென்று திருநந்திதேவரை அடைந்து வணங்கி இச்செய்தியைத் தெரிவித்தனர். அவர் பூதகணங்களை ஏவினார். பூதகணங்களும் பிராட்டியாருடைய சேனையும் ஒன்றோடு ஒன்று எதிர்த்துப் போரிட்டன. இருதிறத்துப் படைகளும் கடுமையாகப் போரிட்டன. முடிவில் பூதகணங்கள் வலிமை இழந்து புறங்காட்டி ஓடின.

இதையறிந்த திருநந்திதேவர் கைலாசபதியாகிய சிவபெருமானை அடைந்து நடந்தவற்றை அவரிடம் அறிவித்தார். சிவபெருமான் புன்னகை புரிந்து "பினாக" வில்லையும்,

அடக்கமாயிரு. ஆனால் தீமையைக் கண்டு அஞ்சாதே
நேர்மையாய் இரு. ஆனால் அதருமத்திற்குப் பணியாதே

படைக்கலங்களையும் திருக்கரத்தில் கொண்டு இடபவாகனத்தில் ஏறிப் போர்க்களத்தை அடைந்தார். அங்கு, பெண் சிங்கத்தைப் போல் நின்ற அம்மையாரை நேரில் கண்டார். அம்மையாரும் பெருமானை நேரில் கண்டார். கண்ட அளவில் அவருடைய ஒரு தனம் மறைந்தது. உடனே உள்ளத்தில் நாணம், மடம், அச்சம் வந்து எய்த, முன்னை அன்பு குடி கொண்டது. தலைகுனிந்து வெட்கத்துடன் நின்றருளினார்.

அக்காட்சியைக் கண்ட பேரறிவுடைய மந்திரியாகிய சுமதி என்பவன், தான் முன்னாளில் கேட்ட அசரீரியை மனதில் கொண்டு அம்மையாரை வணங்கி "தாயே! சிவபெருமானாகிய இப்பேரழகனே தங்கள் மணவாளன்" என்று கூறினான். அதைக் கேட்ட பிராட்டியார் பேரன்பு பெருக நின்றார்.

அப்போது கருணை வடிவாகிய சிவபெருமான் "நீ திக்கு விசயத்தின் பொருட்டு என்று புறப்பட்டாயோ அன்று முதல் யாமும் நம்முடைய மதுரைப் பதியை விட்டுப் புறப்பட்டு உன்னைச் சற்றும் பிரியாது தொடர்ந்து வந்தோம். உன்னை வருகின்ற சோமவாரத்தன்று நல்ல முகூர்த்தம் கூடிய பொழுதிலே திருமணம் புரிய வருவோம். நீ தற்போது மதுரைக்குச் செல்வாயாக!" என்றார்.

இவ்வாறு கூறிய பெருமானிடம் தம் அன்பையும், உயிரையும் ஒருங்கு வைத்த பிராட்டியார், தம் தோழியரும், படைகளும் சூழ மதுரைக்குத் திரும்பினார். பிறகு அமைச்சர்கள் திருமண ஓலை எழுதி அனுப்பி எல்லா நாட்டினர்க்கும் தெரிவித்தனர். மணமுரசினை யானையின் மேல் ஏற்றி மதுரை நகரமெங்கும் இச்செய்தியை அறிவித்தனர். இதையறிந்த நகரமக்கள் தங்கள் வீடுகளை அலங்காரம் செய்தனர். மகிழ்வோடு ஒருவரை ஒருவர் விசாரித்துத் தெரிந்து கொண்டனர்.

பொன்னாலும், நவமணிகளாலும் அழகிய மணமண்டபத்தை அமைத்தார்கள். திருமண வேள்வி புரியும் இடத்தையும் உண்டாக்கி அலங்கரித்தனர். தேவர்களும், சிவனடியார்களும் அமர்வதற்குரிய இடங்களை அமைத்து அதனையும் அலங்கரித்தனர். திருமண மண்டபத்தில் பொற்பீடம் ஒன்று அமைத்தனர். திருமணத்தைக் காணப் பல நாட்டு அரசர்களும், திருமால் முதலிய தேவர்களும், உருத்திரர் ஆகியோரும் வந்து சேர்ந்தனர்.

## சிவலிங்கம்



சுயம்பு லிங்கம், காண லிங்கம், தைவீக லிங்கம், ஆரிட லிங்கம், மானுட லிங்கம் என ஐவகைப்படும்.

இவைகளுள்ளே சுயம்பு லிங்கமானது தானே தோன்றியது.

காண லிங்கமானது விநாயகர், சுப்பிரமணியர் முதலிய கணங்களாலே தாபிக்கப்பட்டது.

தைவிக லிங்கமானது விட்டுணு முதலிய தேவர்களால் தாபிக்கப்பட்டது.

ஆரிடலிங்கமானது இருடிகளால் தாபிக்கப்பட்டது. அசுரர், இராக்கதர் முதலாயினராலும் தாபிக்கப்பட்டது அது.

மானுட லிங்கமானது மனிதரால் தாபிக்கப்பட்டது.

மானுட லிங்கத்தின் உயர்ந்தது ஆரிடலிங்கம்.

அதனின் உயர்ந்தது தைவிக லிங்கம்.

அதனின் உயர்ந்தது காண லிங்கம்.

அதனின் உயர்ந்தது சுயம்பு லிங்கம்.

தேவர்கள் அனைவரும் கயிலைமலையை அடைந்து "அர அர" என்று துதித்தனர். நந்திதேவரின் அனுமதியுடன் சிவபெருமானைக் கண்டு தரிசித்து ஆசிபெற்றனர். அனைவருக்கும் திருவருள் பாலித்த பெருமான் பின்னர் அழகான மணக்கோலம் கொண்டார். குபேரன் இறைவருக்குத் திருமணக்கோலம் செய்தமைத்தான். பின்னர் குண்டோதரன் சந்திரவட்டக் குடைதாங்க இடபவாகனத்தின் மேல் ஏறி மதுரை மாநகரின் புறத்தே வந்தருளினார். திருமால், நான்முகன் முதலான தேவர்கள் அனைவரும் மதுரையை அடைந்தனர்.

பெருமான் எழுந்தருளியிருப்பதை அறிந்த சுமதி முதலிய அமைச்சர்கள் சென்று பெருமானை வணங்கி அவரை வீதியில் வலமாக அழைத்து வந்தனர். பலநாட்டுப் பெண்கள் அவரைக் கண்டு தரிசித்தனர். பின்னர் அந்தணர்கள் மங்கல வாழ்த்துக் கூற அரண்மனையினுள்ளே எழுந்தருளினார்.

அப்போது காஞ்சனமாலை பெருமானை

அடைந்து "தடாதகைப்பிராட்டியாரைத் திருமணம் செய்து பாண்டியநாட்டையும் ஆளவேண்டும்" என்று விண்ணப்பம் செய்தாள். அதற்குச் சிவபெருமான் திருவுள்ளம் இசைந்து இசைக்கருவிகள் முழங்கத் திருக்கல்யாண மண்டபத்தை அடைந்தார். நான்மறைகள் ஓத சிங்காதனத்தில் ஏறி வீற்றிருந்தருளினார்.

பின்னர் அங்குள்ள பெண்கள் பிராட்டியாரை அழைத்து வந்து திருமணக்கோலம் செய்தனர். உடன் அன்பு நிறைந்த சிவபெருமான் பக்கத்தில் சென்று அமர்ந்தருளினார். திருமால் சிவபெருமானின் திருக்கரத்தில் தடாதகைப் பிராட்டியாரின் திருக்கரத்தை வைத்து வேதமந்திரங்களைச் சொல்லி தாராதத்தம் செய்தார். தேவர்கள் பூமாரி பொழிந்தனர். முனிவர்கள் "அர! அர! "என்று தோத்திரம் செய்தனர். தேவர்களும் முனிவர்களும் குங்கும நீரில் கலந்த முத்துப் போன்ற அரிசியை வீசி இன்பவெள்ளத்தில் அழுந்தினர்.

நான்முகன் நெய்யைக் கொண்டு தீயை வளர்த்தனன். செந்தீ தன் நாக்கை உயர்த்தி ஓங்கி வளர்ந்தது. நான்கு வேதங்களும் நின்று முழங்கின. சங்கங்கள் ஆர்த்தன. முரசங்கள் ஒலித்தன. பிரமதேவன் திருமணச் சடங்குகளை வேத முறைப்படி செய்து முடித்தான். சிவபெருமான் தடாதகைப் பிராட்டியாருக்குத் திருமங்கல நாணைப் பூட்டித் திருக்கரம் பற்றி அருளினார். அதைக் கண்டு உலகம் உய்யும் வண்ணம் மறைகள் முழங்கின. மகளிர் வாழ்த்துக் கூறத் திருமணம் இனிது நிறைவேறியது. பின்னர் இறைவர் பிராட்டியாரோடு திருமண அறையில் புகுந்தருளினார்.

திருமண அறையிலிருந்து வெளிவந்த இறைவர் நான்முகன், திருமால் முதலிய தேவர்களுக்குப் பல வரிசைகளைக் கொடுத்து அவர்களுக்கு விடை கொடுத்து அனுப்பி வைத்தார். பின்னர் பாண்டிய மன்னனாய்த் திருக்கோலம் கொண்டு அரசு வீற்றிருந்தருளினார். சங்குகன்னன் முதலிய சிவகணத் தலைவர்கள் அரசர் பணி செய்வதற்கு ஏற்ற மானுட வடிவம் கொண்டு அரச ஏவலில் நின்றார்கள்.

பின்னர், இறைவர் "நடுவூர்" என்னும் திருநகரம் ஒன்றை உண்டாக்கினார். அதிலே சிவாகம முறைப்படி கோயில் எடுத்தார். அருள் வடிவாகிய சிவலிங்கத்தை நிலைபெறுத்தி, "இம்மையே நன்மை நல்கும் இறை" என்னும் திருப்பெயர் இட்டு முறைப்படி பூசித்தார். கடம்ப வனத்தில் உள்ள சோமசுந்தரக் கடவுளை மூன்று காலங்களிலும் பூசித்தார். உலகம் முற்றும் தன் சிறப்பான செங்கோலைச் செலுத்தி அரசாண்டார்.

தொடரும்.....

நன்றி : இராமலிங்கர் பணிமன்றம், சென்னை

## அசுவ மேத யாகப் பலன்

கஜபூஜை, கோ பூஜை, கமங்கலி பூஜை, கலச பூஜை செய்பவனும் படிப்புக்கு உதவி செய்பவனும், ஏழைப் பெண்ணின் திருமணத்திற்கு உதவுபவனும், அனாதைப் பிரேதத்தை எவர் உதவியும் இன்றித் தானே செலவு செய்து அடக்கம் செய்பவனும், அசுவ மேத யாகப் பலனை அடைகிறார்கள்.

## மகா கும்பாபிஷேக பலன்கள்



கும்பாபிஷேகம் பெருஞ்சாந்தி எனப்பெயர்பெறும். திருஞானசம்பந்தர் சிறந்த ஆலய விழாக்களைக் குறித்து அருளிச் செய்த பூம்பாவைத் திருப்பதிகத்தில் பெருஞ்சாந்தி விழாவைக் கண்டுகளிக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகிறார். கும்பாபிஷேகம் செய்தல், செய்வித்தல், துணைபுரிதல், கண்டுகளித்தல் ஆகியன மிக்க சிவ புண்ணியத்தை நமக்கு ஈட்டித்தரும் சிறப்புடையன. பெருஞ்சாந்தி விழாவைச் செய்பவர், செய்விப்பவர், காண்பவர்கள் இருமை இன்பங்களையும் எய்தி இன்புறுவார்கள்.

ஆலயம் நமது உயிருக்கு உயிர் ஆதலால் ஆலய நலனில் அனைவரும் அக்கறை கொண்டு, மேலான நலன்களைப் பெற வேண்டும்.

முக்தித் திருத்தலங்களுள் ஒன்றான காசியில் எழுந்தருளியிருக்கும் அன்னபூர்ணியின் மகிமைகள் ஏராளம்!

அகண்ட பாரதபூமியே, அன்னையின் அருள் பிரதேசம்தான். இந்த பூமியின் ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு துளியிலும் அவள் குடியிருக்கிறாள். நமது தாய்த் திருநாட்டின் ஊர்களின் பெயர்கள் கூட அவளின் திருநாமங்களைக் கொண்டே அமைகின்றன. மும்பாதேவியினால் மும்பையும், சென்னம்மாவினால் சென்னைப்பட்டிணமும், காளிமாதாவினால் கொல்கத்தாவும் அமைந்தது போலவே பிறநகரங்களும் ஊர்களும் கூட அமைந்துள்ளன. சியாமளாதேவியின் ஊர்களும்



திருமதி. சுதா சேக்ஷய்யன்

பூர்ணம் என்றால் முழுமை. எப்போதும் முழுமையாகவும் எல்லா உயிர்க்கும் எல்லாப் பொருட்களுக்கும் முழுமையைத் தருபவளாகவும் இருக்கக் கூடியவர் அன்னபூரணி.

அன்னபூர்ணே ஸதாபூர்ணே சங்கரப்ராண
- வல்லபே

ஞான வைராக்ய ஸித்யார்த்தம் பிக்ஷாம்தேஹிர்
- பார்வதி!

# கருணை பொழியும் காசிவிசாலாட்சி

கூட அமைந்துள்ளன. சியாமளாதேவியின் ஊர் "சிம்லா" (சியாமளா சிதைந்து சிம்லா) ஆயிற்று. காளிகாவின் ஊர் "கல்கா"; சண்டிகாதேவி ஆட்சிநடத்தும் பகுதி 'சண்டிகர்'; மங்களாதேவியின் ஊர் 'மங்களூர்'; படன்தேவியின் நகரம் 'பாட்னா' ஊர் மாறி பேர் மாறி உருமாறி கருமாரி ஒன்றே ஓம் சக்தியென்று உரைக்கக் கூடிய அம்பிகையின் அருள்வடிவங்களில் அன்னபூரணி வடிவமும் ஒன்றாகும்.

வாரணன் அஸி என்னும் இரு கிளைநதிகள் கங்கையுடன் கலக்கின்றன. இரு நதிகளுக்குகிடையிலும் கங்கைக்கரையிலும் அமைந்ததால் 'வாரணாசி' என்று பெயர் பெறுகிறது இத்திருநகரம். பழங்காலந்தொட்டே 'காசி' என்றும் அழைக்கப்படுகிறது. காசி என்னும் சொல் ஒளியைக் குறிக்கும். காசி என்பது ஒளி; எது ஒளிர்கிறதோ அது காசி, சனாதன தர்மத்தின் ஒளியாக விளங்குவதால், காசி என்றும் இத்திருநகரம் வழங்கப்படுகிறது. விஸ்வநாதரும் விசாலாட்சியும் அருளாட்சி நடத்தும், இத்தலத்தில், அன்னை அன்னபூரணியும் அருள்பாலிக்கிறாள்.

பார்வதிதேவியின் ஒருவடிவமாகவும், அம்சமாகவும் கருதப்பட்டாலும், அன்னபூரணிக்குத் தனி ஆலயம்தான்!

மாதாச பார்வதீதேவி பிதாச மஹேஸ்வர:

பாந்தவா: சிவபக்தாச்ச ஸ்வதேசோ புவனத்ரயம்

என்று துதித்து ஒவ்வொரு வேளை உணவு உட்கொள்ளும் போதும் அன்னபூர்ணியை வழிபடவேண்டுவது முறை. எப்போதும் முழுமையாக இருக்கக் கூடிய அவளே, ஈசனின் ப்ராணத்துணையாகவும் ஆற்றலாகவும் விளங்குகிறாள்.

ஜகன்மாதாவாக, லோகமாதாவாக இருக்கக்கூடியவள்



அம்பிகை. உலகுக்கெல்லாம் தாயாக விளங்கும் அவள், பல வடிவங்களில் பல இடங்களில் காட்சிதருகிறாள். அவளே மீனாட்சி, அவளே காமாட்சி, அவளே வைஷ்ணவி; அவளே சரஸ்வதி; அவளே சாரதா; அவளே ராஜராஜேஸ்வரி; உலகையும், உலகவுயிர்களையும் பொருட்களையும் படைக்கிற அவள் அவற்றைக் காப்பாற்றவும் செய்கிறாள். தேவைப்படும்போது அவற்றைச் சிதைப்பதும் அவள்தாம். அதனாலேயே அன்னையை வழிபடத் தொடங்கும்போதே ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம், ஸ்ரீ மாதா ஸ்ரீமஹாராஜ்நி ஸ்ரீமத் ஸிம்ஹாஸநேஸ்வரீ என்றும் தொடங்கும்.

பூத்தவளே - புவனம் பதினாள்கையும்
பூத்தவண்ணம் காத்தவளே - பின் கரந்தவளே!

என்றார் அபிராமிப்பட்டரும்!

மகாராணி(மஹாராஜ்நீ)யாகப் பரிபாலித்துக் காப்பாற்றும் அன்னை, அதனையும் வாத்ஸல்யத்துடன், தாயன்புடன் செய்கிறாள்.

ஒரு சராசரி வீட்டைக்கூட எடுத்துக் கொள்வோம். வசதி, வாய்ப்பு, செல்வம், செல்வாக்கு என்பவை எப்படியிருந்தாலும், ஒவ்வொரு வீட்டிலும் நாம் பொதுவாகக் காணக்கூடியது ஒன்றுண்டு. தாயினுடைய கவனம் முதலில் குழந்தையிடத்தில் தான் இருக்கும். கணவனை கவனிக்கும் மனைவி, தந்தையை நோக்கும் தனயை, மூத்தவர்களைப் பேணும் மங்கை, உறவினர்களையும் பாதுகாக்கும் பெண் என்கிற தன்னுடைய பலநிலைகளிலும், பிள்ளையைப் பார்க்கும் தாய் என்னும் நிலையே அவள் மனதிலும் செயலிலும் சொல்லிலும் மேலோங்கிநிற்கும். குழந்தை வளர்ந்து பதவியும் பொறுப்பும் கொண்டு வாழ்ந்தாலும் கூட "ஐயோ", என் பிள்ளை பசி தாளாதே! என்றுதான் தாய் பரிதவிப்பாள்; அந்தப் பிள்ளையே, தாயும் தந்தையும் ஆகிவிட்டாலும், பச்சைக் குழந்தையாகவே பாவிப்பாள்.

சாதாரண மனிதப் பெண்ணே இப்படி இருக்கும்போது, உலகுக்கெல்லாம் தாயானவள் எப்படி இருப்பாள்?

அவள் அன்னபூரணியாகவே அருளாட்சி செய்கிறாள்.

காசியில்,விஸ்வநாதரின் தர்மபத்தினியாக இருக்கக்கூடியவள் விசாலாட்சி. எல்லா உயிர்களுக்கும் அன்பு செய்து அரவணைக்கக்கூடியவள். "மாதவங்கள் செய்கின்ற மாமுனிவர் பலபேர்கள் வாழ்கின்ற புனிதகாசி சொந்தமென வந்து நிதம் உன்னடியைத் தொழுவோர்க்குத் துணை நீயே விசாலாட்சியே"! என்று வணங்கினால் தனது கடைக்கண் பார்வையால் உய்விக்கக்கூடியவள் விசாலமான (அகலமான பெரிய) பார்வை கொண்டதனால் அவளுக்கு விசாலாட்சி என்பது பெயர்.

விசாலாட்சியின் ஒரு அம்சமாக விளங்குபவள் அன்னபூரணி. தனிக்கோயில் கொண்டுள்ளாள். தன் தாய் பெரிய கல்விச் சீமாட்டியாக, பெரும்பதவி வகிப்பவளாக எப்படி இருந்தாலும், தனக்குச் சோறூட்டுபவளாகத் தானே குழந்தைகருதும்- அப்படி அன்னம் பரிமாறுபவளாக இருப்பவளே அன்னபூரணி.

காசியில் தங்கியிருந்த காலத்தில் இந்த அன்னபூரணியின் மீது ஒரு துதி பாடினார் ஆதிசங்கரர். அதில் தான் ஒவ்வொரு பாடலின் முடிவிலேயும் "பிக்ஷாம் தேஹி க்ருபா வலம்பநகரீ மாதா அன்னபூர்ணேஸ்வரீ"
என்று பாடியருளினார்.

க்ருபாவலம்பநகரீ-கிருபையின், கருணையின் பற்றுக்கோடானவளே! மாதா-தாயே! பிக்ஷாம் தேஹி- பிச்சைபோடு! பிச்சைபோடு என்பது வெறும் சோறு போடு என்று கேட்பதில்லை., விதை விதைக்கலாம், பயிர் செழித்தால் அறுவடை செய்யலாம். தண்ணீர் பாய கால்வாய் வெட்டிவிடலாம். ஆனால், மழையைப் பொழிவித்து, பயிரை விளைவித்து, வளமையை நிறைக்கவேண்டியது இறையருள்தாமே! பிச்சை போடு! அம்பிகை யிடத்தில், பிச்சை போடு என்றார்





சங்கரர். அப்படி வேண்டிய போது இன்னொன்றும் சொன்னார். பார்வதியே அம்மா, மஹேஸ்வரனே அப்பா; பக்தர்கள் எல்லோரும் உறவினர்கள் மூவுலகமும் வீடு என்றார். அப்படியாயின், எல்லோருக்கும் சோறிடு! என்று அன்னபூரணிக்கு விண்ணப்பம் விடுத்தார்.

அன்னபூரணித்தாய் காசியில் நின்றதிருக்கோலத்தில் காட்சி தருகிறாள். அவளின் இடதுகரத்தில் ஒரு பாத்திரம். அதில் பால்சோறு இருக்கிறதாம். வலதுகரத்தில் ஒரு கரண்டி. அந்தக்கரண்டியைக் கொண்டு அவள் அன்னம் பரிமாறுகிறாள்.

சரி அவ்வப்போது சோறுபோட்டுக் குழந்தையை வளர்ப்பது மட்டுமல்ல; அவள் செய்யும் மற்றவை என்ன என்ன?

அவளை வணங்கும்போது கேட்கவேண்டியது என்ன? "ஞான வைராக்கிய ஸித்யர்த்தம் பிக்ஷாந்தேஹீ"! ஞானமும் வைராக்யமும் நிறைவுபெற பிச்சையிடு - அறிவும் உறுதியும் நிறைய பிச்சையிடு! உணவு உடலை வளர்க்கும். ஆனால், ஆளுடன் சேர்ந்து அறிவும் வளரவேண்டுமல்லவா! ஆளும் வளரணும் - அறிவும் வளரணும் - அதுதான் வளர்ச்சி! உணவிட்டு, அதன் மூலமே உறுதியையும் அவள் வளர்க்கிறாளாம். பாலூட்டும் தாய், வெறுமே பால் மட்டுமா ஊட்டுகிறாள்?. வீரத்தை, விவேகத்தை, அன்பை, பண்பை, அறிவை, அடக்கத்தை எல்லாவற்றையும் சேர்த்துத்தானே ஊட்டுகிறாள். அப்படித்தான் சோறூட்டும் அன்னபூரணி, சோறுடன் சேர்த்து ஆற்றலையும் அறிவையும் தருகிறாள்.

அவள் வைத்திருக்கும் பாத்திரத்தில் இருப்பது பால்சோறு. பாலுக்கு என்ன முக்கியத்துவம்?. பாலுக்குள்தான் வெண்ணையும், நெய்யும் இருக்கின்றன. இறைவன் எங்கே இருக்கிறார்? என்ற கேள்வி எழுந்தபோது ஒருவர் விடை சொன்னார். இறைவன் மறைந்திருக்கிறாராம். எங்கே? எல்லா இடங்களிலும்! எப்படி? அது தான் சூட்சுமம்! எப்படி மறைந்திருக்கிறார் தெரியுமா? பாலில் இருக்கும் நெய் மாதிரி மறைந்திருக்கிறார். சரி, எப்படி நெய் மாதிரி மறைந்திருக்கிறார். பாலைக் காய்ச்சியப் பின் தயிராக்கி மோராக்கி, பின் கடைந்தால் போதும், தானாக வெண்ணெய் திரண்டுவிடும். நெய்யைக் காணலாம். அது போலத்தான் மனத்தைப் பக்குவப்படுத்தினால் பாலைக்காய்ச்சிப் பதமாக்குவது போல் இறைவனைக் காணலாம்.

பாலைக் காய்ச்சினால் பக்குவப்படும். காய்ச்சும்போது, பாலுடன் சேர்ந்த தண்ணீர் காணாமல் போய்விடும். அப்படித்தான் வேண்டாதவற்றை வீணானவற்றை மனித மனமும் (தண்ணீரைப்போல்) தொலைக்கவேண்டும். பால் சூடேறும், சுருங்கும், சுண்டும், பக்குவப்படும். அறிவும், அநுபவமும் ஏறஏற மனிதனும் வைராக்யத்தில் கெட்டிப்பட்டு ஞானத்தில் நிலைக்க வேண்டும்.

அன்னபூரணிக்கு ஒரு பெருஞ்சிறப்பு உண்டு. பிரம்மனின் ஒரு தலையைக் கிள்ளினாராம். சிவன் அந்தத் தலை அவர் கையிலேயே ஒட்டிக் கொண்டது. கொலை செய்த பாவமும் சேர்ந்தது. பசியாக வயிற்றில் எரிந்தது. என்ன செய்வார் பாவம்! யாராவது அவருக்கு பிச்சை போட்டால் பாவம் தீரும். வேறுயார் அவருக்கு பிச்சை போட முடியும். ஆதிசக்தியே அன்னபூரணியாக அவதாரம் எடுத்தாள். பிட்சாடனராகச் சிவன் சுற்றிவர, அவருக்குச் சோறிட்டுத் தீர்வு தந்தவளே அன்னபூரணி. பரமேஸ்வரனுக்கு உணவிட்ட அந்தப் பரமேஸ்வரி பாருக்கெல்லாம் உணவுதரக் காத்துக் கொண்டிருகிறாள்.

தீபாவளிப் பண்டிகையின் போது, அன்னபூரணித் தாய், மிகக் கோலாகலமாக வணங்கப்படுகிறாள். பூர்ணமயமாக இருக்கும் அன்னபூரணியின் தங்கக் கவசம், சாதாரண நாட்களில் வங்கியின் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கும். தீபாவளியின் போது தங்கக் கவசம் வெளியில் எடுக்கப்பட்டு, அன்னபூரணிக்குச் சாத்தப்பட்டு மூன்று நாட்கள் மிகச் சிறப்பாக பூசைகள் நடைபெறும். ❖

# அருள்தரும் அன்னை அபிராமி

முனைவர் இரா. செல்வக்கணபதி

அபிராமம் என்ற நாமத்திற்கு 'அழகு', 'பிரியம்', 'அழகானது' என்பது பொருள்கள். 'அபிராமி' என்ற பதத்திற்கு 'அழகி' என்பது பொருள். இதனை அபிராமிபட்டர் "அழகுக்கு ஒருவரும் ஒவ்வாதவல்லி" என்று குறிப்பார். தன்னிடம் ஒரு முறைபதிந்த மனம், பிறிதொன்றைச் சென்று பற்றாவண்ணம் தடுத்து நிறுத்தும் பேரழகே அபிராமம் எனப்பெறும். அத்தகுப் பேரழகை உடையவள் அன்னை அபிராமி. சிவசக்தியின் மூர்த்த பேதங்கள் ஏழு. அவர்களைச் சத்தமாதர்கள் என்று குறிப்பர். அத்தகு மூர்த்த பேதங்களுள் ஒன்றாக நின்று அருள் சுரப்பவள் அன்னை அபிராமி.

### திருக்கடவூர்

பிரிக்கப்படாத தஞ்சைமாவட்டத்தில் (இன்று நாகப்பட்டினம் மாவட்டம்) சோழநாட்டுப் பாடல்பெற்ற காவிரித் தென்கரைத்தலங்களுள் ஒன்று திருக்கடவூர். கடையூர், கிடையூர், தலையூர் என்று ஊர்ப்பெயர்கள் இன்றும் வழக்கில் உள்ளன. கீழைக் கடற்கரையில் கடைசியாக அமைந்த ஊர் என்ற பொருளில் இவ்வூர் 'கடையூர்' என்றே தொடக்க காலத்தில் அழைக்கப்பெற்றுள்ளது. புராண வழக்குகள் தோன்றிய பின் அமுத குடம் (கடம்) சிவலிங்கமானதாக உணரப்பட்டு இவ்வூர் திருக்கடவூர் என்று மாறியது. இம்மாற்றம் தேவார காலம் முதலே வழக்கத்தில் இருந்துள்ளது.

திருக்கடவூருக்குப் பல சிறப்புகள் உண்டு. சிவன் நிகழ்த்திய எட்டு வீரச் செயல்களுள் ஒன்றாகப் புராணங்கள் குறிப்பனவற்றுள், மார்க்கண்டேயருக்காக இறைவன் எமனை உதைப்பித்த தலம் இது. அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவராகிய 'குங்குலியக்கலயர்', வாழ்ந்திருந்த திருத்தலம். நீண்டவாழ்நாள் பெறவிரும்பிச் சைவ அன்பர்கள் அறுபதாவது ஆண்டு நிறைவு மணிவிழாக் கொள்வதும் இங்கேதான். வேறுபல சிறப்புகளும் கொண்டியங்கும் திருக்கடவூர் திருத்தலத்தில் கிழக்கு நோக்கித் தனித் திருக்கோயில் கொண்டு சிவசக்தி 'அபிராமி' என்றதொரு நாமம் பூண்டு அருள்பாலித்து வருகிறாள்.

### அபிராமி அந்தாதி

சிவசக்தி மேல் தனித் தோத்திரப் பாமாலைகள் பெரிதும் கி.பி. 16ஆம் நூற்றாண்டுக்குப் பின்னரே தோற்றம் கொண்டன. அன்னை அபிராமியின் அருளிப்பாட்டை நாம் அறிந்துபோற்றப் பெரிதும் துணையாக நிற்பன இரண்டு அருட்பனுவல்கள். ஒன்று அபிராமி அந்தாதி, மற்றொன்று அபிராமி அம்மைப் பதிகம். இரண்டையும் அருளிச் செய்தவர் அபிராமிப்பட்டர். உலகமெங்கும் வாழும் சைவப்



அழிவே இல்லாத விபூதியை நெற்றியில் இட்டுக் கொண்டால், நாம் அழியாமல் இருப்போம்.



பெருமக்களால் பெரிதும் போற்றிக்கொண்டாடப்படுவது அபிராமி அந்தாதி. மிகச் சிறந்த, அம்மைக்கு உகந்த பாராயண நூலாக இன்று இதுவே திகழ்கிறது.

### தாயன்பு

அன்னை அபிராமி அருளிப்பாடு மிக்கவள் என்ற நம்பிக்கை அடியவர் நெஞ்சில் ஊற்றெடுத்தால் தான், அடியவர்கள் அவளை நாடிச் சென்று வழிபட்டு வரம் வேண்ட இயலும். இயற்கை ஒரு பெண் வாழ்க்கையில் வெற்றிபெற்றுச் சிறக்கப் பல பருவங்களை வழங்குகின்றது. சிவ சக்தியாகிய அபிராமி, அன்று சீர்காழி, பிரம தீர்த்தக் கரையில், ஞான சம்பந்தர் அழுத போது திருமுலைப்பால் வழங்கிய தாயன்பை அபிராமி பட்டர் நினைவு கூர்ந்து, அன்னையின் கருணை நிறைந்த மார்பகங்களின் சிறப்பு உரைப்பார்போல்

"கருத்தன, எந்தைதன் கண்ணன! கனகவெற்பில்

பெருத்தன

பால் அழும் பிள்ளைக்கு நல்கின"

என்று எடுத்துரைத்து அன்னையின் அருட்கருணையை வியந்துரைத்து நம்பிக்கை ஊட்டுகிறார்.

### திருவடிச் சிறப்பு

இறைவியை விட விரைந்து அருள்வன அன்னையின் திருவடிகள். அதனை அறிந்து இனங்கண்டு நெஞ்சத்தால் பற்றவல்லவருக்கு

"துதியுறு சேவடியாய் சிந்துரானை சுந்தரியே",

என்றும்

"பணியேன் ஒருவரை நின்பத்மபாதம் பணிந்தபின்னே"

என்றெல்லாம் வரும் அன்னை திருவடிச் சிறப்புரைக்கும் தொடர்கள் நாம் நினைவு கூர்ந்து பற்றி உய்ய வந்தன.

### அம்மை - அப்பர் வழிபாடு

நம்மில் பலர் சிவாலய வழிபாட்டில் அம்மையை மட்டும் வணங்கி விட்டு திரும்புதல் உண்டு. அபிராமி தனிச் சக்தி அல்லள். அருள்மிகு அமிர்தகடேசுவரரின் பாகம் பிரியாத பைந்தொடி. எனவே, அம்மை அப்பரை நினைந்து செய்யும் வழிபாடே, அன்னை அருள் வழங்கும் வழிபாடாக அமையும்.

"உமையும் உமையொரு பாகனும் ஏக உருவில் வந்து இங்கு

எமையும் தமக்கு அன்பு செய்யவைத்தார்"

"ஐயன் அளந்தபடி இருநாழி கொண்டு,
அண்டமெல்லாம்

உய்ய அறம் செய்யும் உன்னையும் போற்றி"

என்றெல்லாம் வரும் அபிராமி அந்தாதித் தொடர்கள், அபிராமியை சிவசக்தியாக வணங்கியே வரம் பெற இயலும் என்பதனை எடுத்துரைக்கின்றன.

❖



# ஒளி தரும் ஒற்றியூர் அன்னை

ம.கி.இரமணன்



### 1. உயர்வைத் தருவாள்!

''ஆதிபுரி'' என்றே அனைவரும் போற்றும்
அருள்நிறை ஆலயம் அமைந்தவூர் ஒற்றியூர்!
வேதியர் முதலா பாமரர் வரையில்
யாவரும் போற்ற அருளுவாள் வடிவன்னையே!
விதியில் வந்தவர், விதியால் நொந்தவர்
வடிவுடை அன்னையை வழிபட்டால் உயர்வரே!
சாதியும் மதமும் கடந்த பக்தரும்
சாதனை காணவே வடிவன்னையைக் காண்பரே!

### 2. வரம் தருவாள்!

ஆரூர் தியாக ராஜரும் அன்னைக்கு
ஆனந்த ''பஞ்ச ரத்னம்'' சூட்டினாரே!
வேரூர் பட்டினத்து அடிகளின் கசந்த
கரும்பை இனிக்க வைத்தனள் அன்னையே!
தேனூறும் காப்பியம் கம்பரும் பாடவே
வட்டப்பாறை அன்னை விளக்கு ஏந்தினளே!
வேரூரில் காணாத அழகினில் வடிவுடை
அன்னையும் இங்கு வரந்தந்து காப்பாளே!

### 3. வள்ளலாருக்கு உணவளித்தாள்!

எல்லோரும் வாழவே சன்மார்க்கம் கண்டவர்
எப்போதும் வடிவன்னை தியாகரை வணங்கிட
நில்லாமல் இருபத்து மூன்றாண்டும் வந்தவர்
கல்லாமல் ஞானமும் கைவரப் பெற்றாரே!
சொல்லாமல் பசியோடு சோர்வுற்ற வேளையில்
சோற்றைத் தந்தே வள்ளலாராய் மாற்றினாளே!
எல்லாமும் வழங்கிய வடிவுடை அன்னைமேல்
இராமலிங்கர் ''மாணிக்க மாலையும்'' பாடினாரே!

### 4. இசையால் வழிபாடு

நட்சத்திர லிங்கங்கள் இருபத்து ஏழும்
சுயம்பு சிவனும் அன்னைக்கு அருள் சேர்க்க
சம்பந்தர் அப்பர் சுந்தரர் போற்றிய
ஒற்றியை அருணகிரி வியந்து பாட
சங்கரர் வந்து ''ஸ்ரீசக்ரம்'' தந்து
நம்பூதிரி பூசையை தொடக்கி வைக்க
சங்கீதம் பாடி முத்துசாமி தீட்சதர்
பாம்பன் சுவாமிகள் அன்னையைப் போற்றினரே!

### 5. ஒளிதரும் அன்னை

அகத்தியர், வான்மீகி, வியாசர், காளமேகம்
இரட்டைப் புலவர் யாவரும் போற்றினரே!
அகவொளி மிக்க கலியர் ஒற்றியூர்
ஆலய விளக்கேற்றி அருளொளி பெற்றாரே!
தவத்திலே கபாலி சாஸ்திரியார் வடிவுடை
அன்னையைக் கண்டு ''மகாமனுஸ்தவம்''
பாடினாரே!
அகத்திலே வடிவுடை அன்னையை வழிபட
அனைத்து வரங்களும் அளித்து ஒளிர்வாள்!

*''வடிவுடை அன்னையை வழிபட
முடிவிலா அருள்மழை பொழியுமே''*

### தரிசனம் செய்ய...

கோவிலுக்குச் செல்லும் பக்தர்கள் குளிக்காமலும், கை, கால் கழுவாமலும், திருச்சின்னம் அணியாமலும் போகக் கூடாது. மேலும் சட்டை போட்டுக் கொள்ளல், அங்க வஸ்திரத்தை மேலே போர்த்திக் கொண்டு செல்லுதல், பாதரக்ஷை அணிந்து கொண்டு செல்லுதல், மூக்கு நீர் சிந்துதல், தலைசீவுதல் ஆகிய காரியங்களைக் கோவிலினுள் செல்பவர்கள் தவிர்க்க வேண்டும்.

மாதா, பிதா, குரு தெய்வம் என்ற நால்வரும் நம் வணக்கத்திற்குரியவர்கள்.



சிமெண்ட் உற்பத்தியில்
உலகத்தரம் வாய்ந்த
இந்தியாவை உருவாக்கும்
உலகத்தர தொழில் நுட்பம்.
உயர்தர பிளெண்டட் சிமெண்ட்
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ராம்கோ
சூப்பர் கிரேடு
TM

நல்வாழ்த்துக்களுடன்....

# வஸந்தபவன்

திருச்சி, சென்னை, துபாய்

எங்கள் மதிப்பிற்குரிய
வாடிக்கையாளர்களுக்கும், அன்பர்களுக்கும்
வஸந்தபவனின் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

நல்ல உணவு அருந்துவதற்கும்,
உலகப்புகழ் பெற்ற திருநெல்வேலி அல்வா, ஸ்வீட், காரம்
வாங்க வருகை தாருங்கள் வஸந்தபவனுக்கு

**திருச்சி, சென்னை, துபாயில்**
**சுகமாய் தங்கிட நல்ல ஹோட்டல்**

திருச்சியில்

**அபிராமி ஹோட்டல்ஸ்**
சென்டரல் பஸ் ஸ்டாண்ட், திருச்சி
போன் : 0431-2415001

சென்னையில்

**ஹால்ஸ் ரோட்**
சென்னை-8.
போன் : 044-28194547

துபாய்

**BUR DUBAI VAE**
PHONE : 3938006

சைவ சமயம் போற்றும் நால்வர், ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்க வாசகர்.

வைணவ சமயம் போற்றும் நால்வர் நம்மாழ்வார், பெரியாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார், திருமங்கையாழ்வார் ஆகியோர்கள். பின்னால் ஆசாரியர்களால் காட்டப்பட்டுள்ள நால்வர்களில், ஆழ்வார்கள் பன்னிருவரில் அவயவி ஆன நம்மாழ்வார்.

வேதம் தமிழ் செய்த மாறன் சடகோபன் அருளிச் செய்தப் பிரபந்தங்கள் பெரிய திருமொழி பெரிய திருமடல் சிறிய திருமடல், திருவெழுகூற்றிருக்கை, திருநெடுந்தாண்டகம், திருக்குறுந்தாண்டகம் என்ற ஆறும் ஆகும்.

ஸ்ரீ ரங்கநாதனே திவ்ய தம்பதியாக வயலாளி மணவாளனாக எழுந்தருளித் தன் ஆபரணங்களைக் களவு செய்யுபடிக் கொடுத்துப்

# ஆலிநாடனும் ஆளுடையபிள்ளையும்





- R. சேஷாத்ரி
பட்டாச்சார்,
சீர்காழி

ஆழ்வார்களில் கடைக் குட்டியான பரகாலர் என்னும் திருமங்கையாழ்வார் ஆசாரிய சிரேஷ்டர்களில் சிறப்பானவர் யதிவராதிகள் என்ற ஸ்ரீ ராமானுஜர், மணவாள மாமுனிகள் ஆகிய நால்வர்கள் சம்பிரதாயத்தில் ஏற்றம் பெற்றவர்கள்.

பெரியபுராணம் போல் ஆழ்வார் ஆசாரியர்களை உலகுக்குக் காட்டிக் கொடுத்தவர் மணவாள மாமுனிகள். தன் பிரபந்தமான உபதேசரத்னமாலை என்ற சிறப்பான பிரபந்தத்தில் திருமங்கை மன்னன் அவதரித்த பெருமையையும், எதற்காக அவதரித்தார் என்பதைப் பற்றியும் ஒரு பாடல் திருவாய் மலர்ந்துள்ளார்.

பின்பு திருவஷ்டாக்ஷரமந்திர உபதேசம் செய்து அவரை ஆட்கொண்டு ஆதரித்தார்.

மற்ற 107 திவ்யதேச எம்பெருமான் களையும் மங்களாசாஸனம் செய்யக் கிளம்பிய பரகாலர்

ஸ்ரீ திருமங்கையாழ்வாரின் அடியவர்கள் பெரும் திரளாக

'பைங்கமலத் திடவயல் சூழ் ஆலி நாடன் வந்தார்,
அருள்மாரி, அரட்டமுக்கி, அடையார் சீயம் வந்தார்,
கொங்கலர் குழலியர் வேல் மங்கை வேந்தன் வந்தார்
கொற்றவேல் பரகாலன் வந்தார், கலியன் வந்தார்'

என்று விருதுகள் ஓதிக் கொண்டு வந்தார்கள்.

சீர்காழி பெரும் வெள்ளத்தில் மூழ்காமல் தோணியப்பராகி மலையில் இருந்து கொண்டு காப்பாற்றிய பிரும்மபுரீசர் அமர்ந்துள்ள தோணிபுரத்தில், பிரம்ம அவதாரமாகி, உயர்வுபெற்ற சிவபாத இருதயர்க்கு ஞானக் குழந்தையாகி அவதரித்த மகான் ஸ்ரீ திருஞான சம்பந்தர், மூன்று வயதிலேயே சாக்ஷாத் பார்வதி தேவியிடம் திருமுலைப்பால் அருந்தியவர் ஆளுடையபிள்ளை.

சிவபாத இருதயர் தூய வேதம் ஓதும் அந்தணர். அவர் ஸ்நானம் செய்யப் போகும்போது தன் குழந்தையையும் குளத்துக்கு அழைத்துப் போனார். அன்று, குளக்கரையில் குழந்தையை உட்கார வைத்து மூழ்கிக் குளித்துக் கொண்டிருந்தார். சிறிது நேரம் ஆகியும் அப்பாவைக் காணாததால் ஞானக் குழந்தை அழுதது.



உடன் மலைமேல் உள்ள திரிபுரசுந்தரி தங்கக் கிண்ணத்தில் திருமுலைப்பால் கொடுத்து அழும் ஞானக் குழந்தையைச் சமாதானப்படுத்தி மறைந்தார். பால் ஒழுகும் வாயுடன் இருந்த பாலகனைக் கண்டு ''யார் கொடுத்த பால், ஏன் வாங்கிக் குடித்தாய்?'' என்று பிரம்பால் குழந்தையை அடிக்கப் போக, அந்தஞானக் குழந்தையோ தேவாரத்தின் முதல் திருமுறையில் முதல் பதிகமான,

'தோடுடைய செவியன்' என்னும் பாடலினைப் பாடியதும் இந்த அற்புதமான பாட்டைப் பாடி சிவபெருமான் உமையவளுடன் ரிஷபாரூடராய் காட்சி தருவதைக் காட்டினார். அத்தகைய சிறப்பான ஊர் சீர்காழி 'ஆளுடையபிள்ளை சமணர்களைக் கழுவேற்றியவர், சைவத்தை வளர்த்தவர். அவர் வாழும் ஊரில் நீங்கள் வேறு ஒருவர் பெருமைகளையும் விருதுகளையும் ஓதிச் செல்லக் கூடாது' என்று திருஞான சம்பந்தரின் சிஷ்யர்கள் தடுத்து விட திருமங்கை ஆழ்வார் அடியார்களும் விபரத்தை ஆழ்வாரிடம் சொல்ல, பின்பு அவர்கள் அங்கேயே தங்கி, 'அருளாளரான திருஞானசம்பந்தரை நாம் எப்படி சமன் கொள்ளலாம்' என்று நினைத்து கண்வளர்ந்த பொழுது எம்பெருமான் அவர்கள் கனவில் திரிவிக்ரம அவதாரத்தைக் காட்டி, இங்குள்ள ஒரு அம்மையார் வீட்டுத் தவிட்டுப் பானைக்குள் தன்னை வைத்து ஆராதிப்பதாகவும், அவளிடம் சென்று தன்னை எழுந்தருளச் செய்து கொண்டு திருஞானசம்பந்தர் அவைக்குச் சென்றால் நீர் சமன் பெறுவீர் என்றருளி மறைந்தார்.

இதைப் போல் அங்குள்ள அம்மையாருக்கும் கனவில் பெருமாள் காக்ஷியளித்து ''தவிட்டுப் பானையில் உள்ள என்னைச் சீர்காழியில் தங்கியிருக்கும் அவதார புருஷர், என்னைப் பாடிப் பறைக் கொண்டவரான ஸ்ரீ திருமங்கையாழ்வாரிடம் கொண்டுப் போய் சேர்த்துவிடு என அவரும் பெருமாளுடன் வர, ஆழ்வாரும் அப்பொழுதே கிளம்பி அம்மையாரைத் தேடி வர, இருவரும் எதிரும் புதிருமாக சந்திக்கப் பெருமாள் ஆழ்வாரிடம் சேர்ந்தார்.

ஆழ்வாரும் மறுநாள் காலை தன் திருவாராதனப் பெருமாளான சிந்தைக்கினியான் அருகில் பெருமாளை எழுந்தருளப் பண்ணித் திருவாராதனம் செய்து விட்டு பெருமாளுடன் திருஞான சம்பந்தர் மடத்துக்குச் சென்றார். சம்பந்தரும் ஆழ்வார் பெருமையைக்

கேள்விப்பட்டு 'ஆழ்வாரே! நீர் ஒரு குறள் பா பாடும்' என்றார். அதன்படி ஆழ்வாரும்,

"ஒருகுறளாய் இருநிலம் மூவடி மண்வேண்டி

உலகனைத்தும் ஈரடியாலொடுக்கி"... என்று திரிவிக்ரம அவதாரத்தை முன் வைத்து மற்ற தசாவதாராங்களையும் பத்துப்பாட்டால் அடக்கிக் கடைசிப் பாட்டில் தன் விருதுகள் முற்றும் வைத்துப் பாடியருளினார்.

அப்பாடல்களைக் கேட்ட ஆளுடையபிள்ளை, ஸ்ரீ திருமங்கையாழ்வாரை ஆலிங்கனம் செய்து "நாலுகவிப் பெருமாள் என்ற பட்டம் உமக்குத் தகும்" என்று சொல்லி தன் கையில் வைத்துள்ள வீரவேலையும், காலில் அணிந்துள்ள வீரத் தண்டையையும் பரிசாக அளித்துப் பாராட்டி மகிழ்ந்தார்.

வைணவத்தையும் சைவத்தையும் இணைத்த தலமான ஸ்ரீதாடாளன் சன்னதி, ஸ்ரீ லோகநாயகி சமேத திரிவிக்ரம நாராயணப் பெருமாளையும் சேவித்து வந்தால் ஸ்ரீ திருஞானசம்பந்தர், ஸ்ரீ திருமங்கை ஆழ்வார் திருவருளும் கிடைக்கும். உலகில் வாழ்வாங்கு வாழலாம்.

திருஞான சம்பந்தரும் சீர்காழியில் மட்டும்தான் ரோமசரிஷிக்குச் சிவபெருமான் காக்ஷி கொடுத்தார் என்று பாடியுள்ளார். அதேப்போல் 108 திவ்ய தேசங்களைப் பாடியருளிய திருமங்கையாழ்வார் தாடாளன் கோயில் காழிச் சீராம விண்ணகரப் பதியில்தான் ரோமசரிஷிக்குத் திரிவிக்ரம நாராயணன் காக்ஷி கொடுத்துள்ளதாகப் பாடி உள்ளார்.

சிவன் கோவில் தல புராணப்படி மஹாபலி சீர்காழியில் தான் யாகம் செய்ததாக வரலாறு கூட கூறுகிறது. திருகோலக்கா என்ற இடத்தில் மஹாவிஷ்ணு வாமனனாக அவதாரத் திருக்கோலம் எடுத்த இடமாகி அமைந்திருப்பது மிகப் பெருமை வாய்ந்தது.

சுவாமிகள் ஒன்றாகிக் கோயில் கொண்டிருக்கும் சிதம்பரம் ஸ்ரீ நடராஜர், ஸ்ரீ கோவிந்தராஜர் ஒன்றாகி இருக்கும் இடம் ஏற்றம் பெற்று விளங்குகிறது. அதை விடச் சிறப்பாக அருளாளர்களான ஸ்ரீ ஆளுடையபிள்ளையும் ஆலிநாடனையும் பெற்றுப் பெருமை பெற்றது மிகவும் விசேஷம். சைவ வைணவக் கடவுள்கள் இணைந்த சிதம்பரத்தைக் காட்டிலும் பக்தர்கள், - சிவபக்தர்களும், விஷ்ணுபக்தர்களும் - இணைந்த இடமான தாடாளன் கோவில் மிகவும் பெருமையுள்ளது; சிறப்பானது என்றால் மிகையாகாது.

ஸ்ரீ திருமங்கை ஆழ்வார் அருளாளரான சிவபக்தரான ஆளுடையபிள்ளையைப் பாலறாவாயனைப் பற்றிப் பாடிய பாடல் ஒன்று சிறப்புமிக்கது.

இதே போல் திருஞானசம்பந்தரும் ஸ்ரீதிருமங்கை ஆழ்வாரைப் பற்றிப் பாடிய பாடலும், திருஞானசம்பந்தர் தன்னைத் தாய் நிலையில் வைத்துத் தன் மகளின் நிலையைக் கூறும் பாடலாக அமைந்து உள்ளது.

அதாவது திருமங்கையாழ்வாரின் ஆசுகவியில் தன் உள்ளத்தை திருஞானசம்பந்தர் இழந்துவிட்டதாகக் கூறுகிறார். அதாவது ஒருவரை ஒருவர் மலிவுப்படுத்தாமல் உணர்ந்து சமயப் பொறையுடன் வாழ்ந்து காட்டிய ஆசுகவி ஆலிநாடனும் ஆளுடையபிள்ளையும் காட்டிய ஸ்ரீ தாடாளனைச் சேவித்து அருள் பெறுவோம்.

❖


## திருக்கோயில்

திங்கள் இதழ்

சந்தா விவரம்



| | |
|---|---|
| தனி இதழின் விலை | - ரூ. 10/- |
| ஓராண்டுச் சந்தா | - ரூ. 120/- |
| பத்து ஆண்டுச் சந்தா | - ரூ. 1000/- |
| ஆயுட்காலச் சந்தா | - ரூ. 1500/- |

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

விளம்பரக் கட்டண விவரம்

| | |
|---|---|
| 1. பின் பக்க அட்டை வெளிப்புறம் (வண்ணத்தில்) | ரூ. 25,000/- |
| 1. முன் பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்) | ரூ. 12,000/- |
| 2. பின் பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்) | ரூ. 10,000/- |
| 3. உள்புறம் முழுப்பக்கம் | ரூ. 5,000/- |
| 4. உள்புறம் அரைப்பக்கம் | ரூ. 3,000/- |

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை ஆணையர், இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை, 119, உத்தமர் காந்தி சாலை, சென்னை-600 034 என்ற முகவரிக்கு அனுப்பவும்.



# கும்பாபிஷேகமுறைகள்

கே. வைத்தியநாத சுவாமி
சிவாச்சாரியார், திருப்புகலூர்

அகில அண்டங்களையும் படைத்துக் காக்கும் தெய்வம் அருவமாக எங்கும் நிறைந்திருக்கிறார். அவர் நிர்மலர்; பரிபூரணர். அவர் ஆங்காங்கு கோயில் கொண்டு விளங்கும் மூர்த்திகளில் அருள் பாலிக்கிறார், ஆகமங்களில் கூறப்பட்டிருக்கிறபடி மந்திரபூர்வமாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் மூர்த்திகளில் உருக்கொண்டு ஜீவராசிகளுக்கும் அருள் புரியும் இடமே ஆலயம். ஆலயத்தில் கர்ப்பகிருகம் அர்த்தமண்டபம், மஹா மண்டபம் முதலியவை அமைக்க வேண்டியதற்கு அளவுகளும் லஷணங்களும் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. சிற்ப விற்பன்னர்களால் தயாரிக்கப்பட்ட மூர்த்திகளில் சிவாகமங்களை நன்கு கற்றுணர்ந்த மந்திர பலத்தைக் கொண்டு பிரதிஷ்டை செய்யப்படும் பொழுது அந்த அந்த மூர்த்திகளும் நம் வழிபாட்டுக்கு உகந்தவைகளாக அமைகின்றன. மூர்த்திகளும் அந்த சிவா சாரியர்களாலேயே பூசை செய்யப்படும் பொழுது ஜீவராசிகளுக்குக் கருணையுடன் அருள் பாலிப்பவர்களாக அமைகிறார்கள்.

ஒரு இடத்தில் புதிதாக ஆலயம் அமைத்துப் பிரதிஷ்டை செய்யப்படும் மூர்த்திகளுக்குக் கும்பாபிஷேகம் செய்யப்படுவதை ஆவர்த்தம் எனவும், வெகு காலமாகக் கோயில்களில் பூஜை செய்யப்பட்ட மூர்த்திகளுக்குத் தற்சமயம் பூஜை இல்லாமல், ஆறுகளாலும், சமுத்திரத்தாலும் கோயில் சலனமடைந்ததைப் புதிதாக நிர்மானம் செய்து அதே மூர்த்திகளுக்குக் கும்பாபிஷேகம் செய்வதை அனாவர்த்தம் எனவும், கர்ப்பகிரஹம், விமானம், பிரகாரம், கோபுரம் முதலிய கட்டடங்கள் பழுதாகியிருந்தாலும், அஷ்ட பந்தனம் இல்லாவிட்டாலும் பாலாலயம் செய்து கட்டிடங்களையும், கோபுரங்களையும், பிரகாரங்களையும் புதுப்பித்து அஷ்டபந்தனம் சாத்தித் திரும்ப மூலத்தில் அந்தந்தமூர்த்தியைப் பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் செய்வதைப் புனராவர்த்தம் எனவும், சரிவரப் பூஜைகள் நடைபெற்று வரும் கோயில்களில் துவஜஸ் தம்பத்திற்கு உட்புறத்தில் ஆசௌசமுள்ளவர்கள் விலங்குகள் பிரவேசித்தால் செய்யப்படும் சம்புரோஷணம் என வழங்கப்படும் சாந்திக்கு அந்தரிதம் எனவும் பிரதிஷ்டை நான்கு வகைகளாகும்.

சரியா, கிரியா, யோகம், ஞானம் என்கிற நான்கு பாதங்கள் சைவாகமங்களில் இருக்கின்றன. சிவபூஜை செய்பவர்கள் சௌசாதி நியமங்களுடன் ஹோமயாகாதிகளை எப்படிச் செய்ய வேண்டும் என்பதைக் கூறுவது சரியா பாதம். ஒரு இடத்தில் ஈசுவரனை யந்திர பலத்தாலும் மந்திர பலத்தாலும் பிரதிஷ்டை செய்து உலகத்திலுள்ள மக்களனைவருக்கும் பிரதிநிதியாக ஆங்காங்கு ஒருவர் இருந்து எல்லோருடைய க்ஷேமத்தையும் கோரிப் பூஜை

செய்வது பரார்த்தபூஜை, கிரியா பாதத்தில் பூஜை செய்பவர்களுக்கு, ஆத்மசுத்தி, மனச்சுத்தி உண்டாவதற்கு, பிராணாயாமம், அந்தரியாகம் முதலிய கிரமங்கள் விளக்கப்பட்டிருக்கின்றன. ஞான பாதத்தில் பிரபஞ்சம், ஜீவன், ஈசுவரன் இவைகளுக்கு ஒன்றுக்கொன்று உள்ள சம்பந்தம் சாசுவதமான முக்தி நிலை உள்ள சம்பந்தம் சாசுவதமான முக்தி நிலை எவ்வித சிவோஹம் பாவனையால் ஏற்படுகிறது என்ற விஷயங்கள் வெளியாகின்றன.

அந்தர்யாமி ஒருவன் அனைவரின் உள்ளேயும் இருந்து கொண்டு எல்லா ஜீவன்களையும் ஏவுகிறான். அவரைத் தீவிரமாகப் பாவனை செய்து யோக மார்க்கத்தினாலும், பிராணாயாமங்களினாலும் அந்தர்மாத்ருகா நியாசங்களினாலும், சில முத்திரைகளின் உதவியினாலும் வெளியில் நம் பார்வைக்குக் கொண்டுவர வேண்டும். அப்போதுதான் மூர்த்திகளில் ஸான்னித்தியம் உண்டாகும்.

''ஹிருத்ய மத்யகதாம் பரமேச்வரம்
அரண்யாமிவ ஹவ்யஞ்ச மூர்த்தா வாவஹ
யாம்யஹம்''

எதிரிலிருக்கும் மூர்த்தியில் நம்முடைய ஹிருதயத்திலிருக்கும் பரமேசுவரனைத் தியானம் செய்து இம்மாதிரி முறையோடு ஆவாஹனம் செய்கிறேன் என்று மூர்த்தியில் ஆவாஹனம் செய்ய வேண்டும். யாகசாலையில் இரண்டு கட்டைகளைக் கடைந்தால் அக்னிவருவதுபோல, 'இதோ இங்கே இருக்க வேண்டும் என பிரீதியுடன் பாவனா பூர்வமாய்ப் பிரார்த்தித்தால் மூர்த்தியில் பெற்ற ஒருவரால் பூஜை செய்யப்படும் பொழுது பக்தர்கள் அனைவருக்கும் அருள் புரிகிறார்.

காசியில் விசாலாட்சியும், காஞ்சியில் காமாட்சியும், மதுரையில் மீனாட்சியும், பரமசிவனுக்குச் சக்திரூபங்களாக விளங்கி வருகிறார்கள். பஞ்சபூத க்ஷேத்திரங்களில் ஒன்றான ஜல க்ஷேத்ரமான திருவானைக்காவில் ஜம்புகேஸ்வரரின் அகிலாண்வேஸ்வரி அகில உலகங்களையும் காப்பாற்றி வருகிறாள். பரிவார தேவதை பந்தன மஹா கும்பாபிஷேகம் மிகச் சிறப்புடன் இப்போது நடைபெறுவது சகல ஜீவராசிகளுக்கும் இகபர சுகங்களை என்றென்றும் அளிப்பதாகும்.

கும்பாபிஷேகத்தில் தனபூஜை, ஸ்ரீ விக்னேஸ்வர பூஜை முதல்சகல காரியங்களையும் இங்கு ஓரளவு விளக்குவோம். அதன் தத்துவங்களையும் காண்போம்.

உத்தம புண்ணியச் செயல்களால் சேகரிக்கப்பட்ட திரவியத்தைச் சிவார்ப்பணம் செய்து அதில் ஒரு பாகத்திரன்யத்தைச் சுவர்ண பாத்திரத்தில் பட்டு விரித்து அதன் மேல் வைத்துப் பரம சிவார்ப்பணமாக ஆசாரியர் கையில் பிரார்த்தனையுடன் கொடுத்து அவர் மூலமாக முறைப்படித் தனபூஜை செய்ய வேண்டும்.

அனுக்ஞை என்பது செய்யப்போகிற கும்பாபிஷேத்தை ஆசாரியர் எஜமானராக இருந்து நடத்தத் தகுதியுள்ளவர் எனச் சபையோர்களிடம் அனுமதி பெற்றுப் பின் இறைவனிடமும் இறைவியிடமும் அனுமதி பெறுவதாகும். பசுவாகிய நமக்குப் பதியாக விளங்கும் பசுபதி பரமேசுவரனிடம் சேகரிக்கப்பட்ட திரவியத்தை மும்மலங்களும் நீக்கக் கோரி அர்ப்பணம் செய்து அவருடைய அனுக்ரஹ பூர்வமாகக் கிரஹித்துக் கொண்டு காரியங்களில் விநியோகம் செய்யப்படுவது அஷ்ட ஐஸ்வர்யங்களையும் அளிக்க வல்லது என்பதே இதன் தத்துவமாகும். செய்யப்படும் காரியத்தை இடையூறின்றி முடிக்க வேண்டியதன் பொருட்டு விக்கினத்தைப் போக்கவல்ல விநாயகரை வணங்கிப் பிரார்த்தித்து அனுமதி பெறுவது விக்னேஸ்வரபூஜை, இறவாதவரம் வாங்கி வாஸ்துபுருஷன் என்ற அசுரனின் தொந்தரவு இல்லாமலிருக்கப் பிரமன் முதலான தேவர்களை அவ்வசுரனைக் காவல் புரியும் ஐம்பத்து மூன்று தேவர்களையும் பூஜை பலி முதலியவைகளால் திருப்தி செய்து இடையூற்றை நீக்குவதற்கு வாஸ்துசாந்தி செய்ய வேண்டும். அங்குரார்ப்பணம் எனக்கிரியைச் செய்வதற்கு மண்ணை மண்ணுக்கு அதிபதியான பூமியையும் காவல்களான இந்திரன் முதலிய திக்பாலர்களையும் தலைவரான பிரமனையும் பிரார்த்தித்து அவர்களின் அனுமதி பெற்று மண்ணை வெட்டி எடுப்பது மிருத்ஸங்கிரஹணம். வெட்டிய தோஷம் நீங்க ஏழு கடலை வரவழைத்துப் பூஜை செய்து வெட்டிய பள்ளத்தில் அபிஷேகம் செய்ய வேண்டும். பாலிகைகளில் பால் கலந்த தானியங்களை மந்திரபூர்வமாகத் தெளித்து முளைக்கச் செய்வது அங்குரார்ப் பணம். தெளிக்கப்பட்ட வித்துகள் முறையாகவும் பசுமையாகவும் முளைத்தால் கிரியை சரியான முறையில் அமைந்தது என்று உணர்ந்து கொள்ள வேண்டும். அது மாறுதலாக இருந்தால் குறைபாடு இருப்பதாக உணர்ந்து அதற்குத்தக்க பிராயச்சித்தம் செய்ய வேண்டும். அங்குரம் இல்லாத கிரியைப் பயனற்றது.

ஆசாரியருக்குச் செய்யப்படும் ரக்ஷையினால் கிரியைப் பூர்த்தியாவதற்குள் தெய்வீகமாய் ஆசௌசாதிகள் (தீட்டுகள்) நேர்ந்தாலும் அக்கிரியைக்குக் குந்தகம் ஏற்படாத வகையில் ஆசாரியனை ரக்ஷாபந்தனம் விஸர்ஜனம் செய்யும் வரையில் தீட்டு முதலான தோஷம் அணுகாமல் காப்பது ரக்ஷாபந்தனம். இறைவனை ஆவாஹனம் செய்யும் பொருட்டுக் கடத்தை மந்திரபூர்வமாக அலங்கரித்து வித்யா தேகமாகப் பாவித்துக் குடத்திற்குச் சாத்தப்பட்ட வஸ்திரம் தோலாகவும், மேல் பூசப்பட்ட மண் இரத்தமாகவும், செய் பொருள் மாமிசமாகவும், ஜலம் தாதுவாகவும், கூர்ச்சம் எலும்பாகவும், சுற்றப்பட்ட நூலை நரம்பாகவும், குடத்தில் போடப்பட்ட இரத்னம் சுவர்ணம் சுக்லமாகவும் நியாஸம் செய்யப்பட்ட மந்திரம் ஜீவனாகவும் போடப்பட்ட தானியம் ஆஸனமாகவும் உள்ளன. கும்பஸ்தாபனம் மூலஸ்தானத்தில் சுவாமியை அலங்காரம் செய்த வித்யாதேகமாக பாவிக்கப்பட்ட இடத்தில் குருபதேச முறைப்படி குடத்தில் ஆகர்ஷணம் செய்து குறிப்பிட்ட காலம் வரையில் கடத்தில் இருக்கச் செய்வது கலாகர்ஷணம். சுவாமியை முறைப்படி குடத்தில் ஆகர்ஷணம் செய்து அக்குடத்தை யாகசாலையில் வைத்து ஒன்பது, ஐந்து, ஏக, குண்ட முறைப்படி தேசகால கிரியை முதலியவைகளை அனுசரித்து ஒவ்வொரு காலமும் பூஜை செய்வது யாக பூஜை, பீடத்தையும் பிம்பத்தையும் சேர்த்துப் பலவருஷங்கள் மூர்த்தியை அசையாமல் காப்பது அஷடபந்தன மருந்தின் அபூர்வ சக்தியாகும். யாகசாலையில் செய்யப்பட்ட ஹோமங்களையும் தத்துவங்களையும் தத்துவத்தில் அதிபர்களையும் (நாடி சந்தானம்) தங்கக் கம்பி முதலியவைகளின் மூலம் அந்த அந்த மூல ஸ்தானத்தில் சேர்ப்பது ஃஸ்பர்சாகுதி.



யாகசாலையில் முறைப்படி கும்பங்களில் சிவலிங்கத்தைப் போலவே ஷடத்வா வடிவாக இருப்பதால் அதன் அடியில் ஆத்ம தத்துவமும், நடுவில் வித்யா தத்துவமும், முடியில் சிவதத்துவமும் பூஜிக்கப்படுகிறது. கும்பத்தில் ஸர்வ தீர்த்தங்களும் பஞ்சாவரண தேவதைகளும் பிரதிஷ்டை செய்து பூஜை செய்யப்படும், முறையாகப் பூஜித்த மூர்த்திகளை எழுந்தருளச் செய்து அந்த அந்த மூலஸ்தானத்திலும் ஸ்தூபியிலும் முன்வைத்து குருஉபதேச முறைப்படிகும்பத்திலிருந்து பிம்பத்திலும், ஸ்தூபியிலும் கூர்ச்சங்களைச் சேர்த்து நியாஸ பூர்வமாகத் தியானம் செய்து அக்கும்ப தீர்த்தங்களை அந்த அந்த மூர்த்திகளுக்கு அபிஷேகம் செய்வது மஹாகும்பாபிஷேகம். மூர்த்தி குஷ்ம ரூபமாகவும் ஸ்தூபி ஸ்தூலரூபமாகவும் கூறப்பட்டிருக்கிறது. ஸ்தூல ரூபமான ஸ்தூபியின் அபிஷேகத்தைத் தரிசிப்பவர்களும் எல்லா நன்மைகளும் பெறுவார்கள். நாடு செழிக்கும். மஹா கும்பாபிஷேக தரிசனத்தால் அன்றுவரை செய்த பாவங்கள் தீரும். சிவபராதங்களும் தீரும். கும்பாபிஷேகம் பெரும் சாந்தி என்று திருஞான சம்பந்தர் அருளினார்.

“உரிஞ்சாய வாழ்க்கை யமணுடையை போக்கும்
இருஞ்சாக் கியர்க ளெடுத்துரைப்ப நாட்டில்
கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச்சர மமர்ந்தான்
பெருஞ்சாந்தி காணாதே போதியோ பூம்பாவாய்
என்றார்
(மயிலாப்பூர் தேவாரம்)

மஹா கும்பாபிஷேகம் செய்து பரிவார தேவதைகளுடன் பூஜிக்கப்படும் சிவாலயங்களில் விளங்கும் மூர்த்திகளில் இறைவன் சான்னித்யம் பெற்று வழிபடும் பக்தனுக்கு உரிய காலத்தில் கண் முன் தோன்றி, அனுக்கிரகம் செய்து வருகிறார் என்பதை நாம் சரித்திரங்கள் வாயிலாகவும் நம் காலத்திலேயே நேரிடையாகவும் காண்கிறோம். பக்தர்கள் அனைவரும் மஹா கும்பாபிஷேகம் தரிசனம்செய்து தீவினைகள் நீங்கியவர்களாய் அஷ்ட ஐஸ்வர்யங்களையும் புத்திரப் பேறுகளையும் என்றும் அழியாத சிவ பக்தியையும் பெற்றுச் சிவானந்தானுபவம் பெறுவார்களாக.

❖

குரு பக்தியை வாழ்க்கையிலிருந்து பரித்து விடமுடியாது. குரு பக்தியை விட சிறந்த நன்றிக் கடன் கிடையாது.



இறைவன் நினைவின்றி அமையாது உணர்வு.

மனித வாழ்வில் அடிப்படைத் தேவைக்கு அவசியமானது நீர்.

அதனால்தான் ஆதி மனிதன் தனது குடிருப்பை நதிக்கரை ஓரத்தில் அமைத்துக் கொண்டான் என்று வரலாறு கூறுகிறது.

நிர்மலமான மனத்திற்குத் தேவையானது நீரோட்டமும் ஆறும். நிலையான செல்வத்திற்கு ஆற்றங்கரையின் செழுமையும், உவமையாக்கப்படுகிறது.

# பொங்கி வரும் கங்கை...

ஸ்ரீகவி

நதிகளில் புண்ணிய நதிகளாக கருதப்படுபவை ஏழு.

அவற்றுள் பெரிதும் போற்றத் தக்கது கங்கை.

அங்கிங்கெனாதபடி நோக்குமிடமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் நீண்ட சிகரங்களில் வெண்பனி போர்த்திய ஆடைகள், உடலை உறைய வைத்து மனதைக் குளிர வைக்கும் இயற்கைச் சீதனங்கள்.

இமய மலைச்சாரலில் உள்ள ஓர் இதமான இடத்தின் பெயர் 'கரேவால்'.

புனித கங்கைத் தோற்றமாகும் 'கோமுகம்' என்ற புண்ணியத் தலமானது இந்தக் 'கரேவால்' பகுதியில் தான் காணப்படுகிறது.

பசுவின் மூலம் (முகம்) போன்றதொரு தோற்றுவாயிலிருந்து பனித்துளியாய் பரிமளித்து உருவாகிறது கங்கை.

சாதாரணமான கோ (பசு) முகத்தைக் காட்டிலும் நான்கு மடங்கு பெரியதாக விளங்கும் கோமுகத்திலிருந்து பொழிகின்ற கங்கையானது சுமார் இருபத்தியிரண்டு அடி உயரத்திலிருந்து நான்கு அடி அகலமுள்ள நீர் தாரையாகப் பெருகுகிறது.

இந்தப் புண்ணிய கங்கையின் புனிதப் பயணம் சுமார் பத்தொன்பது கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும் 'கங்கோத்திரி' வரை பனிச் சிகரங்களின் ஊடே பரவிப் பாய்கிறது.

அன்றொரு நாள்.....

தேனமர் பொழிலாய் விளங்கும் வானமர்த் திருகயிலைதனில் ஆனப் பெருநான்மறை அறியாத மோன நிலையில் அய்யன் எழுந்தருளியிருந்தார்.

அப்போது அவரது ஞானத்திரு விழிகளைத் தம்மிரு பொற்கரங்களால் அன்னை பொத்தினாள்.

அதனால் அகிலம் இருளானது. இரவு, பகல் இல்லாது போனது. கிரக நிலை இயக்கமின்றி நின்றது. தேவ முனி ரிஷிகளானவர் கலக்கமடைந்தனர்.

அனைத்தையும் அறிந்த அன்னையானவர் அச்சத்தின் உச்சத்தை அடைந்தார். அய்யனின் விழிகளிலிருந்து பொற்கரங்களை அகற்றினார். அக்கரங்களில் நடுக்கம் அமைந்தது. அவரது விரல்களிலிருந்து நீர்த் துளிகள் பெருக்கத்தை விளைவித்தது.

அங்கே ஒரு மகாப் பிரளயம் உருவானது.

பிரமாதி தேவர்கள் அஞ்சி அய்யனின் பாதங்களில் தஞ்சம் அடைந்தனர். அறக்கருணை பூண்ட அய்யன் அந்தப் பிரளயத்தை அழைத்துத் தமது சடை முடியில் தரித்து அருள்பாலித்து அருளினார்.

அதுவே....

பொங்கி வரும் கங்கை...

கங்கோத்திரியில் பொழிகின்ற கங்கை இமயமலையிலிருந்து பாய்ந்து வரும் 'கேதாரகங்கை' யுடன் கலந்து மலையிலிருந்து விழும் போது அந்த மகா பிரளயத்தின் காட்சி தான் நம் மனக்கண் முன்னர் சாஸ்வதமாகிறது.

பாகீரதி என்ற பெயர் பெற்ற இந்தப் புனிதமான கங்கைக் கரையில் பகீரதன் தவம் இருந்ததாகப் பேசப்படுவதால் இதற்கான இடம் 'பகீரத சிலா' என்று அழைக்கப்படுகிறது.

இத்தலத்தில் பாகீரதிக்கோர் ஆலயம் அழகுற அமைந்துள்ளது. கங்கா பாகீரதி ஆலயத்தில் அருள் பொழியும் கங்கா தேவியைப் பூஜித்து வழிபடுகிறோம். சிவப்பிரியையான கங்காதேவி சிம்மாசனத்தில் மகர வாகனத்தில் அமர்ந்த நிலையில் ஆனந்தமாக இருக்க, ஆலய மணியின் முழக்கம் இமயத்தில் எதிரொலிக்க, ஆரத்தி காட்டப்படுவதைப் பார்க்கின்ற போது நம் மனதில் சாந்தம் தவழ்கிறது. இது ஸ்ரீ சங்கரர் வழிபட்ட திருத்தலம் ஸ்ரீ சக்கரம் பிரதிஷ்டை செய்ததாகவும், பாகீரதி ஆலயத்தை புதுப்பித்துக் கட்டிய பெருமை அவருக்கே உரியதாகவும் கூறப்படுகிறது. தவக் கோலத்தில் பகீரதனையும் மகா லட்சுமி, அன்னபூரணி, யமுனா, ஸ்ரீ ஆதிசங்கரர் ஆகியோரின் திருவுருவங்களையும் தரிசிக்கும் பேற்றை நாம் இங்கு பெறலாம்.

மலைச் சிகரங்களின் வழியே தனது வளமான பயணத்தை தொடங்கித் தான் வருகின்ற பாதையெல்லாம் பசுமை விரிப்பை மட்டுமின்றி, குளிர் இத சுடுநீராகவும், கங்கை பாய்ந்து 'உத்தர காசி' யெனும் உன்னதத் திருத்தலத்தை தொடுகிறாள். இது வடக்கே அமைந்துள்ள புண்ணியத் தலங்களில் ஒன்று. காசியைப் போலவே விசுவநாதர் ஆலயமும் மணி கர்ணிகா என்ற நீராடுதுறையையும், பஞ்ச பாண்டவர்களுள் ஒருவரான அர்ச்சுனனின் தவத்தை மெச்சி பரமேஸ்வரன் தரிசனம் அளித்து பாசுபதாஸ்திரம் வழங்கிய வாரணமலை என்பதும் உத்தரகாசியில் தான் உள்ளது என்று நம்பப்படுகிறது.

பட்லாடி என்ற சிவத்தலம் ஒன்று உத்தரகாசியிலிருந்து சற்று தொலைவில் இருக்கிறது. இந்த இடத்தில் நபுலகங்கா என்ற சிற்றாறு கங்கையில் சங்கமிக்கிறது. இது பாஸ்கர பிரயாகை என்று அழைக்கப்படுகிறது. சிவ பெருமானை வேண்டிச் சூரியன் தவமிருந்த இடம் என்பதால் இதற்குப் பாஸ்கர க்ஷேத்திரம் என்ற ஒரு பெயரும் உண்டு என்று சொல்கிறார்கள்.




பாகீரதியான கங்கை அடுத்து சங்கமம் ஆகும் அருமையான அழகான தலம் தேவப்பிரயாகை இத்தலத்தில் கங்கையுடன் சங்கமம் ஆகிறது அலகந்தா எனும் நதி. தேவர்கள் கங்கா தேவியை வழிபடும் தலம் என்பதால் தேவப் பிரயாகையில் கங்கா தேவிக்கு ஒரு ஆலயத்தை நிர்மாணித்திருக்கின்றனர். கரை நெடுகத் தீபம் வைத்துக் காணுங்கள் பாபம் போக என்ற உண்மையினை உணர்த்தும் வண்ணம் இரவு நேரத்தில் தேவப் பிரயாகையில் கங்கைக் கரைச் சுடர் விடுகிறது ஒளிமயமாக.

இமயத்தின் அடிவாரம் என அழைக்கப்படும் ரிஷிகேசம் வரை வரும் கங்கையின் பயணம் மலைச் சிகரங்களின் பாதையில் பவனி வந்து புகழ் பரணி பாடுகிறது. ஹரித்துவாரத்தில்தான் பூமியின் சமவெளியை அடைகிறது.

கபில முனிவரின் சாபத்திற்கு ஆட்பட்டனர் சகர சக்ரவர்த்திகள். இவர்களின் வம்சாவழித்தோன்றலோ பகீரதன். இவன் இச்சக்ரவர்த்திகளுக்கானசாப விமோசனத்திற்காகப் பல்லாண்டு காலம் பரமனை நோக்கி தவம் இயற்றி இறையருளின் இன்னருளினால் கங்கையைப் பூமிக்கு கொண்டு வந்தவுடன் நில்லாமல், அவளைப் புவியின் கீழுள்ள ஏழு லோகங்களில் ஆறாவதான ரசாத்தலம் என்ற இடத்திற்கு அழைத்துச் சென்று அங்குள்ள கபிலாஸ்ரமத்தில் சாப விமோசனத்திற்காக காத்திருந்த மூதாதையர்களுக்குக் கதி மோட்சம் பெற்றுத் தந்தான். இந்த கபிலாஸ்ரமம் ஹரித்வாரத்தில் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. அது மட்டுமின்றி சந்திரவம்ச மன்னன் சந்தனு கங்கையை மணந்தும் அவள் பிதாமகரான பீஷ்மரைப் பெற்றெடுத்ததும் இங்கு தான் என்றும் நம்பப்படுகின்றது. பாரதத்தின் ஆதி பர்வத்தில் இக்கதையும், தலமும் இடம் பெறுகிறது. பரத்வாஜர், க்ருதாசி என்ற அப்சரசின் மூலம் துரோணரை இந்த கங்காத்வாரத்தில் தான் அடைந்ததாக இதிகாசங்கள் தெரிவிக்கின்றன. குந்தி மைந்தனான அர்ச்சுனன் தனது தீர்த்த யாத்திரையின் போது, நாக கன்னிகையான



அருள்மிகு அருள்வள்ளநாத சுவாமி, திருமணஞ்சேரி



ஸ்ரீ காஞ்சி மகாப் பெரியவர்



அருள்மிகு அகிலாண்டேஸ்வரி, திருவானைக்காவல்



ஸ்ரீ ஆண்டாள் - ஸ்ரீ ரெங்கமன்னார், சயனக்கோலம், ஸ்ரீவில்லிபுத்தூர்

உலூபியால் இழுத்துச் செல்லப்பட்டதும் அவள் மூலம் அரவாணைப் பெற்றெடுத்த சம்பவமும் நிகழ்ந்த இடம் இது.

புனிதத் திருத்தலமான ஹரித்துவாரத்தில் கங்கை ஓடுகின்ற எதிர்க்கரையில் நீலபர்வதம் நமக்குக் காட்சி தருகிறது. அந்தப் பர்வதத்தில் நீலாதேவி கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கிறாள்.

மனத்தில் திட்டமிடும் எண்ணங்களை ஈடேற்றி வைப்பதற்காக, மலையின் மீது மானஸா தேவி (மன்சா தேவி என்பது வழக்குச் சொல்) பல மகிமைகளுடன் காட்சி தருகிறாள். அங்கிருந்து, எதிரில் காணும் மலையில் சண்டிதேவி கொலுவிருக்கிறாள்.

கனகல் எனப்படும் இடத்தில் (ஹரித்வாரத்திலிருந்து இரண்டு மைல் தூரத்தில் உள்ளது) தக்ஷப்ரஜாபதிக்கு ஆலயம் உள்ளது. தாக்ஷாயணி தன்னைத் தூய்மைப்படுத்திக் கொள்ள உயிர்த் தியாகம் செய்த சதிகுண்டமும் இங்குக் காணப்படுகிறது.

பில்லெச்வர மகாதேவனுக்கான ஆலயத்தையும், மகா விஷ்ணுவின் பாதார விந்தத்தையும், அஞ்சனிதேவி, சரவண நாத மகா தேவர், நீலிஸ்வரர், நவக்கிரக, ஸ்ரீ ஐயப்பன் போன்ற பல தெய்வங்களையும் தரிசிக்கும் பேறு பெற்று கங்காமாதா ஆலயத்திற்கு வருகிறோம்.

'ஹரி கி பைரி'.

திருமாலின் திருவடிமடிந்த துறை என்பது பொருள்.

ஹரித்வாரம், குசாவர்த்தம், பில்வ தீர்த்தம், நீலபர்வதம், கனகலம் ஆகிய ஐந்து தீர்த்தக் கட்டங்களில் முதலிடம் பெறுவது இது. இதற்குச் சமீபத்தில் தான் அன்னை கங்கா மாதாவின் கங்கா த்வார ஆலயம் அமைந்துள்ளது.

எத்தனையோ வேண்டுதல்கள், உறுதியான நம்பிக்கை சங்கல்பங்கள் அனைத்தும் இங்கே நடைபெறுகிறது.

அந்த சாந்த வசந்தத்தின் சாயங்கால வேளையில், தீப தூபங்களைப் புஷ்பங்களுடன் ஏந்திய தொன்னைப் படகுகள், பலரது இதயப் பிரார்த்தனையை ஏந்திக் கங்கையில் மிதந்து சென்று கொண்டிருக்கின்றன.

கும்பமேளாவின் போது லட்சக் கணக்கான மக்கள் நீராடிப் புனிதம் பெறும் ஹரித்துவாரத்திலிருந்து அசைந்து ஆடி, ஓடி, பாடி, பவனி வரும் கங்கைப் பிரயாகையில் யமுனை, சரஸ்வதி ஆகிய புண்ணிய நதிகளுடன் இணைந்து திரிவேணி சங்கமம் என்ற திருமொழியுடன் திகழ்கிறாள். இதில் சரஸ்வதி கண்ணுக்குத் தெரியாமல் அடியில் பரந்து ஓடுவதாக ஐதீகம்.

அலகாபாத் என்ற இடத்திலுள்ள திரிவேணி சங்கமத்துறையில் நீராடி பித்ருக்களுக்குப் பூஜை செய்து வழிபடுவது சிறப்பு.

வாரணாசி எனப்படும் காசிக்குள் கங்கை வந்து கலக்கிறது. அறுபத்து நான்கு படித்துறைகள் உள்ள மணி கர்ணிகா என்ற கட்டம் பாவத்தைப் போக்கிப் புண்ணியத்தை நல்குவதாகும்.

வருணை அசி என்ற இருநதிகளின் சங்கமமான காசியிலுள்ள கங்கைக் கரையில் மூங்கில் கம்பங்களின் உச்சியில் தீபம் ஏற்றி ஆகாச தீபம் என்று போற்றி வணங்குகின்றனர்.

பஞ்ச கங்கா கட்டத்தில் நீராடி பிந்து மாதவரை தரிசிப்பதும், காசி விசுவநாதரின் பேரருளைப் பெறுவதும் ஒவ்வொருவரும் வாழ்க்கையில் செய்ய வேண்டிய நித்ய கர்மா என்றே கூறலாம்.

ஜகஜ்ஜனனியான அன்னபூரணா தேவி அழகிய திருக்கோலமுடன் கொலுவீற்றிருந்து தனது வள்ளல் தன்மையை நிரூபித்துக் கொண்டிருப்பதால், இத்திருத்தலத்தை அன்னபூரண க்ஷேத்திரம் என்றும் சொல்வது உண்டு.

இந்தக் காசி பூமியில் இருக்கிறது. ஆனால் இது பூமியைச் சேர்ந்தது இல்லை. இது சொர்க்கத்துக்கும் உயரே இருக்கிறது. பூ மண்டலத்துடன் சம்மந்தப்பட்டிருந்தாலும் முக்திதானத்தை அளிக்கிறது.

கபிலமுனிவர் அமர்ந்து தியானம் செய்து மன அமைதி பெற்றதான கங்கா சாகரில் அநேகச் சிறு ஆலயங்களும் அற்புதமான கங்கையின் ஓட்டமும் மனதை நெகிழ வைக்கிறது. கங்கை சங்கமம் ஆகும் கங்காசாகரில் மீனவர்களும், புரோகிதர்களும் ஒற்றுமையுடன் நீராடுவதைப் பார்க்கின்ற போது உள்ளம் குளிர்கிறது.

புண்ணிய நதிகள் ஏழில் புனிதமாக கருதப்படும் கங்கை சமுத்திர ராஜனை வந்தடைந்து இணையும் கரையில் துறவிகளின் தவமும் புதுமண தம்பதியரின் திருமணமும், அஸ்தியின் கரைப்பும், தானமும், தர்மமும்,பூஜையும் எனப் பல வகையான நிகழ்ச்சிகளைப் பார்க்கின்ற போது அனைத்துப் பாவங்களையும் சம நோக்குடன் தீர்த்து வைக்கும் கங்கைத்தாயை தரிசிக்க முடிகிறது.

நாடு பலவாறாயினும், மொழி பலவாறாயினும், அந்த நானிலம் போற்றும் நதி மீது கொண்ட பக்தி, மரியாதை மதிப்பைப் பார்த்ததும் இந்து மத ஆன்மீக தத்துவத்தையோ, அதன் எழுச்சியையோ எவரும் அழித்திடவோ தடுத்து நிறுத்திடவோ இயலாது என்ற எண்ணம் மேலோங்கி எழுவதை நினைத்துப் பூரித்துப் போகிறோம். ❖

# சூடிக்கொடுத்த சுடர்க்கொடி

க. இராஜமாணிக்கம்
எம்.காம்., பி.எல்., பி.எட்.,



எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் உகந்து எழுந்தருளிய திருத்தலங்களுள் புராணப் பிரசித்தி பெற்றதாகவும், நூற்றியெட்டு வைணவத் திருப்பதிகளுள் மிகவும் சிறப்பு வாய்ந்த திவ்ய தேசமாகவும் திகழ்கிறது "ஸ்ரீவில்லிபுத்தூர்" என்னும் திருத்தலம்.

மேலும் பன்னிரு ஆழ்வார்களில் பொங்கும் பரிவோடு கண்ணபிரானிடம் ஈடுபட்டதால் 'பெரியாழ்வார்' எனப் புகழப்பட்ட விஷ்ணு சித்தரும், அவர்தம் திருமகளாக தோன்றிய சூடிக்கொடுத்த சுடர்க்கொடியான ஸ்ரீ ஆண்டாளும் அவதரித்த புண்ணிய சேஷத்திரமாகவும் திகழ்கிறது இத்தலம். எனவே தான் "மின்னார் தடமதிள்சூழ் வில்லிபுத்தூர் என்றொருகால் சொன்னார் கழற்கமலஞ் சூட்டினோம்" ...... என்று கொண்டாடுவோர் பெரியோர்.

**திருக்கோயில் வரலாறு**

இத்திருக்கோயில் இரு பகுதிகளாக அமைந்துள்ளது. முதல் பகுதி வடபத்ர சயனர் கோயில் என்றும், இரண்டாம் பகுதி ஸ்ரீஆண்டாள் சன்னதி என்றும் அழைக்கபடுகிறது.

வடபெருங்கோயிலானது, இவ்வூரை உருவாக்கிய வில்லி என்ற மன்னனால் கட்டப்பட்டது. **இக்கோயில் முன் அமைந்துள்ள மிக உயர்ந்த கோபுரமே தமிழ்நாடு அரசின் முத்திரைச் சின்னமாக விளங்குகிறது.** இதன் உயரம் 196 அடி ஆகும். இக்கோபுரத்தைக் கண்ட கம்பன் இதனை மஹா மேருமலைக்கு சமமானது எனக் கீழ்க்கண்டவாறு பாடினார்.

"இருக்கோதும் அந்தணர்சூழ் புதுவாபுரி
யெங்கள் பிரான்
மருக்கோதை வாழும் வட பெருங்கோயில்
மணிவண்ணனார்
திருக்கோபுரத் துக்கிணையம் பொன்மேருச்
சித்ரமென்றே
பருக்கோதலா மன்றிவேறுபமானப்
பணிப்பில்லை" -
கம்பர்-

ஆண்டாள் சன்னதி பிற்காலப் பாண்டிய மன்னர்களால் கட்டப்பட்டுள்ளது. இதற்குச் சான்றாக ஆண்டாள் சன்னதியில் உள்ள மண்டபங்கள் மற்றும் வாயிலின் மேற்கூரையில் மீன் சின்னம் பொறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

நாயக்க மன்னர்களின் ஆட்சிக் காலத்தில், திருமலை நாயக்கரால் பல திருப்பணிகளும், மண்டபங்களும் கட்டப்பட்டுள்ளன. "சுக்ரவாரக் குறடு" எனப்படும் பொன் வேய்ந்த வெள்ளிக்கிழமை குறட்டிலே திருமலை நாயக்கர் மற்றும் அவருடைய தம்பியாகிய சொக்கப்ப நாயக்கர் அவர்களுடைய தேவியர்களின் திருமேனிச் சிலைகளும் செதுக்கப்பட்டுள்ளன.

**ஸ்ரீஆண்டாள் அவதாரம்**

விஷ்ணு சித்தராகிய பெரியாழ்வார், தம் நந்தவனத்தில் கைங்கர்யம் செய்து கொண்டிருக்கும்போது, ஒரு துளசிச் செடியின் அடியில் கலி பிறந்து 98ஆவதாக நிகழ்ந்த நள வருடத்தில் ஆடி மாதம் 8ஆம் தேதி சுக்லபட்சம்,

"ராம நாமா" எங்கெல்லாம் சொல்லப்படுகிறதோ அங்கெல்லாம் ஆஞ்சநேய சுவாமியினுடைய அனுக்கிரகம் பூர்ணமாக இருக்கும்.

பஞ்சமி திதி, செவ்வாய்க்கிழமை பூர நட்சத்திரத்தில், பூமிப்பிராட்டியின் அம்சமாக ஸ்ரீஆண்டாள் அவதரித்தார். ஸ்ரீஆண்டாள் அவதரித்த ஆடிப்பூரத் தினத்தன்று ஒவ்வொரு வருடமும் திருத்தேரோட்டத் திருவிழா மிகச் சிறப்பாக இத்திருத்தலத்தில் கொண்டாடப் படுகிறது.

பெரியாழ்வாரும், அக்குழந்தைக்குக் "கோதை" என்று திருப்பெயரிட்டு அன்போடு வளர்த்து வந்தார். கோதையும் தன் தந்தையைப் போலவே கண்ணபிரானிடம் ஆழ்ந்த அன்பு கொண்டவளாய்த் திகழ்ந்தார். நாளாக நாளாக கண்ணனிடம் . கொண்ட கோதையின் பேரன்பானது பக்தி மிகுந்த காதலாக பரிணமித்தது. அவள் கண்ணபிரானையே மணாளனாக அடைய வேண்டும் என உறுதி கொண்டார்.

## சூடிக் கொடுத்த சுடர்க்கொடி

கோதை, தம் தந்தையாகிய பெரியாழ்வார், வடபெருங் கோயிலுடையானுக்குச் சாற்றுவதற்காகத் தொடுத்து வைத்திருந்த பூ மாலைகளை எடுத்து அணிந்து கொண்டாள்; தான் கண்ணபிரானுக்கு ஏற்ற மணப்பெண் தானா? என அழகு பார்க்க, இதனை அறிந்த பெரியாழ்வார் மிகவும் மனம் வருந்தியவராய், அம்மாலைகளை எம்பெருமானுக்கு அணிவிக்காமல் இருந்தார். அன்று இரவு பெரியாழ்வாரின் கனவில் எம்பெருமான் தோன்றி, தமக்குக் கோதை சூடிக்களைந்த மாலையே மிகவும் உகப்புடையது எனக் கூறியருளினார்.

அன்று முதல் கோதை "ஸ்ரீஆண்டாள்" என்றும் "சூடிக்கொடுத்த நாச்சியார்" என்றும் அழைக்கப்பட்டார்.

திருவாய்ப்பாடியிலே கோபியர்கள் கண்ணபிரானை அடைய நோன்பு நோற்றதைப் பின்பற்றி ஆண்டாளும், "வேதம் அனைத்துக்கும் வித்து" எனப்படும் 30 பாசுரங்களான "திருப்பாவையை"ப் பாடினார். கண்ணபிரானிடம் தமக்குள்ள உயர்ந்த பக்தியை வெளிப்படுத்தும் விதமாக 143 பாசுரங்கள் கொண்ட "நாச்சியார் திருமொழி" என்கிற உயர்ந்த பிரபந்தத்தை அருளிச் செய்தாள்.

## ஸ்ரீஆண்டாள் திருக்கல்யாணம்

மணப்பருவத்தை அடைந்த ஆண்டாள் "மானிடவர்க்கென்று பேச்சுப் படில் வாழ்கில்லேன்" என்று உறுதி கொண்டவளாய் திருவரங்கனையே மணாளனாகப் பெற விரும்புவதாக தம் தந்தையிடம் விண்ணப்பித்தாள். திருவரங்கத்து எம்பெருமானும் ஆழ்வாரின் கனவில் தோன்றி, கோதையைத் தாம் மணந்து கொள்வதாகவும், அவளை அழைத்துக் கொண்டு திருவரங்கம் வருமாறும் ஆணையிட்டார்.

ஆழ்வாரும் ஒரு பல்லக்கிலே ஆண்டாளை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு பக்தர் குழாம் புடைசூழ திருவரங்கம் நோக்கிப் புறப்பட்டார். திருவரங்கக் காவிரியின் சமீபத்தில் பல்லக்கு அடைந்த போது அதிலிருந்து ஆண்டாள் மறைந்து விட்டார். பல்லக்கு தூக்குபவர்கள் பாரம் தோன்றாமலிருக்கவே இச்செய்தியை பெரியாழ்வாரிடம் விண்ணப்பித்தார்கள். பல்லக்கில் ஆண்டாளைக் காணாத பெரியாழ்வார் ரங்கநாதன் சன்னதிக்குச் சென்று மனம் வருந்திப் பிரார்த்தித்தார்.

எம்பெருமான் அரங்கனும் ஆண்டாள் தமக்கு திருவடி கைங்கர்யம்(பாத சேவை) செய்து கொண்டிருப்பதைக் காட்டியருளினார். இக்காட்சியைக் கண்ட பெரியாழ்வார் மனம் மகிழ்ந்தவராய், "தாங்கள் ஸ்ரீவில்லிபுத்தூர் எழுந்தருளி முறைப்படி ஆண்டாளை மணம் செய்ய வேண்டும்" எனப் பிரார்த்தனை செய்தார்.

## பக்தி - சிரத்தை

தெய்வ காரியங்களுக்குப் பக்தி வேண்டும். பித்ரு காரியங்களுக்கு சிரத்தை வேண்டும். தெய்வ காரியங்களைப் பண்ணும் போது சிகையை நன்றாக முடிந்து கொண்டு, யக்ஞோபவீதம் இடது தோளில் இருக்கும் படியாக பக்தியோடு செய்ய வேண்டும். பிரேத காரியங்களைச் செய்யும்போது சிகையை முடியாமல் யக்ஞோபவீதம் வலது தோளில் இருக்கும் படியாக சிரத்தையோடு செய்ய வேண்டும்.

## கோ துவாதசி

கார்த்திகை மாத சுக்லபட்ச துவாதசி திதி கோதுவாதசி எனப்படும். அன்று கன்றுடன் கூடிய பசுவைப் பூஜித்துப் பயன்பெறலாம்.

அவரின் பிரார்த்தனையை ஏற்ற அரங்கனும் பங்குனி உத்திர நன்நாளில் கருடாரூடனாய் ஸமஸ்த தேவர்களுடன் ஸ்ரீவில்லிபுத்தூர் எழுந்தருளி ஆண்டாளைத் திருக்கல்யாணம் செய்து கொண்டருளினார்.

இன்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் திருத்தலத்திலே மூலவருக்கு முன்பு, அர்த்த மண்டபத்தில் அழகே உருவான ஸ்ரீஆண்டாள் வலது புறமும், இடது புறம் கருடாழ்வாருடனும், கையில் செங்கோல் ஏந்தி, ரெங்கநாதன், ரெங்க மன்னனாக, ராஜகோபாலனாக, சம ஆசனத்தில் திருக்கல்யாணக் கோலத்திலேயே சேவை சாதிக்கிறார்.

### ஸ்ரீஆண்டாளும் கிளியும்

ஸ்ரீஆண்டாள் தன் காதலுக்குத் தூதாக சென்ற(தன் வளர்ப்பு) கிளி எப்போதும் தன்னுடனே இருக்குமாறு இடக்கரத்தில் ஏந்திக் காட்சி தருகிறாள். இக்கிளி கட்டுவதற்கு தேவையான மரவள்ளிக் கிழங்கு இலைகள், மாதுளம் பூக்கள் மற்றும் குச்சிகள் திருவாடிப்பூர நந்தவனத்தில் வளர்க்கப்பட்டு, கிளி கட்டும் வம்சாவழியினரால் தினந்தோறும் ஒரு கிளி மாலை 4.00 மணிக்கு ஆண்டாளுக்குச் சாற்றப்படுகிறது. மறுநாள் இக்கிளியை வேண்டிவரும் பக்தர்களுக்குப் பிரசாதமாக வழங்கப்படுகிறது.

### கிளியின் மகிமை

ஆண்டாள் கிளியை இல்லத்தின் பூஜையறையில் வைத்து வழிபட வேண்டும். அங்ஙனம் வழிபட்டால் திருமணம் ஆகாதவருக்கு விரைவில் திருமணம் கூடிவரும். மகப்பேறு இல்லாதவர்கள் மக்கட் செல்வம் பெற்று மகிழ்வர். மேலும் கிளி இல்லத்தில் இருந்தாலே பல துன்பங்களும் நீங்கி அனைத்து நலன்களும் பெறுவர் என்பது நம்பிக்கை.

### அருள்மிகு ஆண்டாள் மாலையின் சிறப்பு

ஆண்டாள் அவதார காலத்தின்போது, பெரியாழ்வார் வடபெருங் கோயிலுடையானுக்குச் சமர்ப்பிக்க வேண்டிய மாலைகளைக் கட்டி வைத்திருந்ததை, ஆண்டாள் தான் சூடி அழகு பார்க்க, இதனை அறிந்த பெரியாழ்வார் மனம் வருந்தி அம்மாலையை எம்பெருமானுக்கு சமர்ப்பிக்காமல் இருக்க, அன்று இரவு ஆழ்வாரின் கனவில் எம்பெருமான்தோன்றி, தமக்குக் கோதையின் மாலையே மிகவும் உகப்பு என்று அருளிச் செய்ய அன்று முதல் கோதை சூடிய மாலையையே பெரியாழ்வார் பரமனுக்கு சமர்ப்பித்து வந்தார். இவ்வைபவத்தாலே கோதைக்கு "ஆண்டாள்" என்றும் "சூடிக்கொடுத்த நாச்சியார்" என்றும் சிறப்புப் பெயர்கள் நிலைபெற்று வழங்கி வரலாயின.

இன்றும் பெருங்கோயிலுடையான், தம் திருமாளிகையிலிருந்து வாத்திய கோஷங்களுடன் தட்டு ஒன்றை அனுப்பி, முதல் நாள் ஆண்டாள் சூடியமாலையை மறுநாள் "தட்டுமாலை" யாகப் பெற்று அணிந்து அழகு கொள்கிறார்.

இவ்வாறே திருமாலிருஞ்சோலை அழகரும் சித்ரா பௌர்ணமியன்று குதிரை வாகனத்தில் எழுந்தருளியவுடன், ஆண்டாள் சூடிக்களைந்த மாலையை அணிந்து பின் வைகை ஆற்றில் இறங்குகிறார்.

திருப்பதி திருவேங்கடமுடையானும், புரட்டாசி பிரம்மோற்சவத்தின் போது ஐந்தாம் திருநாளான கருடோத்ஸவத்தில், ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து கொண்டுவரப்பட்ட ஆண்டாள் சூடிக்களைந்த மாலையைச் சாற்றிக் கொள்கிறார்.

"கோதை பிறந்தவூர் கோவிந்தன் வாழுமூர்
சோதிமணி மாடம் தோன்றுமூர்- நீதியால்
நல்ல பத்தர் வாழுமூர் நான்மறைகள் ஏத்துமூர்
வில்லிபுத்தூர் வேதக் கோனூர்" என்னும் பெருமையுடையது ஸ்ரீ வில்லிப்புத்தூர்.

ஸ்ரீவில்லிபுத்தூர் திருத்தலத்தில் ஸ்ரீஆண்டாள் ஸ்ரீரெங்கமன்னார் திவ்ய தம்பதிகளாக எழுந்தருளி, தம்மைத்தேடி தரிசிக்க வரும் பக்தர்களுக்கு அருள்பாலிக்கின்றனர்.

❖

### துளசியும் விஷ்ணுவும்

துளசி பத்திரத்தைக் கையில் எடுத்துக் கொண்டு என் பக்தன் எங்கு சென்றாலும் நான் அவனைப் பின் தொடர்ந்து செல்வேன். இது எப்படி என்றால் பசு தன் கன்றைத் தொடர்ந்து செல்வது போலாகும் என்று பகவான் கூறியுள்ளார். அதனால் ஒருவன் கையில் துளசி இருக்கும் வரை விஷ்ணுவின் துணை உண்டு.

நம் வீட்டு நலமும் நாட்டு நலமும் வளர நம் இல்லங்களிலும் ஆலயங்களிலும் ஒன்று கூடி திருவிளக்கு வழிபாடு ,நடத்த வேண்டும்.




அருள்மிகு
வேங்கடாசலபதி சுவாமி
திருக்கோயில்

ஒப்பிலியப்பன்
கோயில்

திருநாகேஸ்வரம் 612 204
கும்பகோணம் வட்டம்

Website : www.oppliappan.org, E-mail : oppliappan-koil@yahoo.com
Ph : 0435 : 2463385

SRI ASOK FIREWORKS INDUSTRIES

Manufacturers & Suppliers of "PENGUIN" Brand Quality
Fireworks & Crackers

42/7, P.K.S.A. Armuga Nadar Road, Post Box No.113.
Sivakasi - 626 189.
Ph : Off : 272490, 274690, Fac. : 237034
Gram : PENGUIN



# தியானம் கைக்கூடல்...

இப்போதெல்லாம் தியானம் செய்யச் சொல்வது என்பது மருத்துவ சிகிச்சையின் ஒரு பகுதியாகிவிட்டது.

"டாக்டர் அதிகம் தலைவலிக்கிறது டாக்டர்" என்று சொன்னால் 'தியானம் செய்யுங்கள்' என்ற ஒரு பதில் வருகிறது.

'இரவு தூக்கமே வருவதில்லை' என்று ஒருவரிடம் சொன்னால் 'தியானம் பழகுங்கள் தூக்கம் வரும்' என்று அவர் உறுதியளிக்கிறார். 'உங்கள் டென்ஷன், உங்கள் பரபரப்பு குறைய தியானம் செய்யுங்கள்' என்றும் உபதேசம் வருகிறது.

எப்படி?

நான், நீ, உனது, எனது, என்மொழி, உன்மொழி, உன் ஜாதி, என் ஜாதி, உன் தேசம், என் தேசம், உன் வீடு, என் வீடு என்று பல்வேறு விஷயங்களில் மனம் பிளவுபட நீங்கள் எதிரெதிராய் நிற்றலும்,



பாலகுமாரன்

தன்னையும் பிறரையும் மாற்றி மாற்றி எடைபோட்டு சந்தோஷித்தலும், துக்கப்படுதலும் நடக்கும். அவன் வச்சிருக்கிற கார்போல் எனக்கு இல்லையே! அவன் கட்டின வீடு மாதிரி நான் கட்டலையே! அவன் வீட்டுக் கல்யாணம் போல என் வீட்டுக் கல்யாணம் நடக்கலையே! அந்த தேசத்து மக்கள் வாழ்க்கை போல என் வாழ்க்கை இல்லையே! அவன் மொழியை செம்மொழியாக்கிவிட்டார்கள்; என் மொழியை செம்மொழியாக்கவில்லையே என்று விதம் விதமான பிளவுபடல்கள் நம்மிடம் உண்டு. இந்தப் பிளவுபடலாலதான் நமக்கு கோபமும், தாபமும், ஆத்திரமும், அசூயையும், பொறாமையும், பொல்லாத எரிச்சலும் ஏற்படுகின்றன.

**தியானம் என்றால் என்ன?**

கண்மூடிக்கொண்டு உட்கார்ந்திருத்தலா?. உட்கார்ந்தபடியே சிறிதுநேரத்தில் உறங்கிவிடுதலா?.

தியானம் என்பது என்ன?

ஒரு புள்ளியில் ஜீவித்தலா? அல்லது அதுவொருவிதமான மனோநிலையா?.

தியானம் என்பது இவை இரண்டும் இல்லை.

அப்படியானால் தியானம் என்பது என்ன?

தியானம் என்பது பரந்துபட்டிருத்தல், எல்லாமுமாயிருத்தல்.

புரியவில்லையே என்றுதான் உங்களுக்குச் சொல்லத் தோன்றும்.

கூர்மையாகப் படித்தால் மட்டுமே இது புரிகின்ற விஷயம். பிளவுபடாத மனநிலையில் நிற்றலே தியானம். நாம் பிளவுபட்டிருக்கிறோமா?

வெகு நிச்சயமாய், ஆமாம்.

மனம், முழுமையடைந்தால் மனம் பிளவுபடாதிருந்தால் அந்தச் சுகம் தனியானது. அந்தநிலை மகத்தானது. அந்தக் குணம் உயர்வானது. அந்த வாழ்க்கைச் சிறப்பானது.

இந்த நிலைதான் தியானம்.

பலபேர் பல்லைக் கடித்துக்கொண்டு கண்ணை மூடிக்கொண்டு அசையாது உட்கார்ந்திருந்தலைத் தியானம் என்று கருதுகிறார்கள். அதை வைராக்கியம் என்றும் சொல்கிறார்கள். இந்த இடத்தில் அது முரட்டுப் பிடிவாதமாகத்தான் மலர்ந்து நிற்கும்.

ஆசையானது தெய்வச் சிந்தனையை மறக்கச் செய்கிறது. கோபமானது ஐஸ்வர்யத்தை போக்கடிக்கும். அகங்காரமானது எல்லாவற்றையும் போக்கடிக்கிறது.

எலுமிச்சை மரத்தை வளைத்து இழுத்துப் பிடித்து பழம் பறிக்க முயன்றால் அது கையிலிருந்து பிடுங்கிக் கொண்டு முகத்தில் விளாறும்.

நீங்கள் எப்போது தியானம் என்று இறுக்க மனதைப் பிடித்துக் கொள்கிறீர்களோ அல்லது முரட்டுத்தனமாய் கண்மூடி உட்கார்ந்திருக்கின்றீர்களோ அதற்கு எதிர்பதம் தான் விளையும்.

**தியானம் என்பது முற்றிலும், முற்றிலும் தளர்வாய் இருத்தல்.** எந்தவித உத்தேசமுமில்லாமல் வெறுமேயிருத்தல். தியானம் என்பது முயற்சியால் விளையப்படுவதன்று. அது வெகு இயல்பாக நடைபெறவேண்டும். மூச்சை கவனித்துக் கொண்டேயிருந்தால் இடுப்பு, முதுகு, கழுத்து, தலை நேராக அமையும். நாமாக முயற்சி செய்கிறபோது, நேராக இருக்கத் திட்டமிடுகிற போது சிலநேரம் கழித்து முதுகு கோணலாகிவிடுவதும் உண்டு. ஆனால், மூச்சை கவனித்துக் கொண்டேயிருந்தால் அந்த மூச்சை கவனிப்பதால் உடம்பு இயல்பாகி அந்த இயல்பில் முதுகுத்தடம் நேராகவே நிற்கும்.

மூச்சை எப்போது இடைவிடாது கவனிக்க முடியும்?

Hero Honda - Dealer - விழுப்புரம்
R.K. Automobiles - விழுப்புரம்
Mahendra & Mahendra Tractor - Cuddalore & Pondy

*பிரதி பௌர்ணமி தினத்தில் திருவக்கரை அருள்தரும் வக்கிரகாளி அம்மனை தரிசனம் செய்து சகல நலன்களும் பெற விழையும்.*

திருவக்கரை அருள்மிகு வக்கிரகாளி அம்மன் அர்த்தஜாம கட்டளை
உபயதாரர்

**ஸ்ரீ வக்கிரகாளி அம்மன் ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட்**

சிலுக்குவார்பட்டி
நிலக்கோட்டை (வட்டம்)

தலைமை அலுவலகம் :
திருப்பூர், தொலைபேசி : 04543238213 செல் : 9843070165
எங்களிடம் தரமான 40'S டோம்டு கொசைரி நூல்கள் கிடைக்கும்.

உரிமையாளர்கள்
R.M. **ராஜமாணிக்கம்**
R.M. **ரவிச்சந்திரன்**
R.M. **செந்தில்குமார்**

வாசகர்களுக்கு எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்

நம்பிக்கை! நாணயம்!! கைராசி!!!

**பௌர்ணமி நாளில் கிரிவலம் செய்யும்**
**சிறப்பு வாய்ந்த தீபத்திருநகர்,**
**திருஅண்ணாமலையில்**
**உங்களால் பெருமை கொண்ட**

POOMPUKAR

# பூம்புகார்
## துணியகம்
# ஷப்னம்
## ரெடிமேட்ஸ்

55, தேரடிவீதி, திருவண்ணாமலை
போன் : **222528**

எங்கள் சார்பு நிறுவனம் :
**பூம்புகார் ஷாப்பிங் & மளிகை**



இறைசேவையில் என்றென்றும்
P.M. **முகமது இக்பால்,** M.A.
*உரிமையாளர்*

## A glittering proof of Poompuhar's expertise in executing Temple Projects



*Golden Chariot made by Poompuhar for Arulmigu Kapaleeswarar Thirukoil, Mylapore, Chennai.*



The Tamilnadu Handicrafts Development Corporation Limited (Poompuhar) has carved a niche in executing temple projects. It has in its fold highly talented mastercraftsmen to execute all temple projects such as Golden Chariots, Silver Chariots, Kodimarams, Wooden Rathas, Temple Bells, Idols of Gods and Goddesses in Bronze / Granite Stone, various types of lamps and all other temple requirements.



Poompuhar

**The Tamilnadu Handicrafts Development Corporation Limited**

759, Anna Salai, Chennai - 600 002. Ph : 28521271, 28521325, 28521798, 28525094

Fax : 044-28524135 E-mail : thdc@md5.vsnl.net.in

FLAME/04



இயற்கையின் எழிலால்
படைக்கப்பட்டது.
பெண்மைக்கு ஓர்
அன்பளிப்பு...
குமரன்
சில்க்ஸ்
பட்டு கனவுகள் 1955 முதல்
12, நாகேஸ்வரன் சாலை,
(பனகல் பார்க் எதிரில்)
தியாகராய நகர், சென்னை – 17.
போன் : 24343544, 24343727, 24343757.
Website : www.kumaransilks.com
e-mail : kumaransilks@vsnl.com
ஒரே விலாசம். ஒரே ஒரு குமரன் சில்க்ஸ்.

நல்வாழ்த்துக்களுடன்....

கடலூர் நகரின் பிரமாண்டமான ரெடிமேட் ஷோரூம்
கடலூர் கிஷ்கிந்தாவின்

பண்டிகை கால அழைப்பு

அழகான ரெடிமேட் ஆடைகள்
அனைவருக்கும் ....
வாங்க சிறந்த ரெடிமேட் ஷோரூம்

புதுசு எல்லாமே புதுசு

கிஷ்கிந்தா ரெடிமேட்ஸ்
82-ஏ, லாரன்ஸ் ரோடு,
கடலூர் - 2.

நாகை உமா சிட்ஸ் பிரைவேட் லிமிடெட்
1302, பெரிய கடைத் தெரு,(இரண்டாவது மாடி)
நாகப்பட்டினம் - 611001

தீபாவளி நல்வாழ்த்துக்கள்

**பி நடேச வேளார் சன்ஸ்,**
கடலை மண்டி
**உமா ரெஸ்டாரண்ட்**
கடைவீதி, நாகை
**உமா பேக்கரி**
கடைவீதி, நாகை
**உமா நெச்சுரல் ஐஸ்கிரீம்**
கடைவீதி, நாகை
**உமா ஃபுட் கார்னர்**
வெளிவை, நாகை
**உமா ஃபுட் கோர்ட்**
வெளிவை, நாகை

**உமா டிரேடிங் கம்பெனி, நாகை**
(ஏற்றுமதி மற்றும் இறக்குமதியாளர்)
**நாகை உமா சிட்ஸ் (பி) லிமிடெட்**
நாகை
**நாகை உமா ஹவுஸிங் (பி) லிமிடெட்**
நாகை
**ஸ்ரீவாரி டிரேடர்ஸ் பாட்டா ஷோரூம்**
திருவாரூர்
**ஜெயமாருதி பாலிவ் பிளாஸ்ட் (பி) லிமிடெட்**
பிவிசி பைப் உற்பத்தியாளர்கள்

**போன் : 242377, 242703, 240999 & 240795**


Give your
festive season an
auspicious start
SINCE 1900
vbc
VBC Jewellery
House of Vummidi
DIAMONDS. PLATINUM. GOLD. SILVER
www.vbcjewel.com
11-B, Panagal Park, Nageswara Rao Road, T.Nagar, Chennai: 600017. Tel: 2434 2407 / 6297.
&
78, G.N. Chetty Road (Opp. Hotel Residency), T.Nagar, Chennai: 600017. Tel: 2822 9556 / 9560.
EMI SCHEMES AVAILABLE FROM:
ICICI BANK
5% cash back offer
CITIBANK
6 / 12 / 24 months
INDIAN BANK
Swarna Abharana Scheme

நல்வாழ்த்துக்களுடன்....



ஸ்ரீ ஆனந்த விநாயகர் துணை

# அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்



## பிரசாத விற்பனை நிலையம்

மலைக்கோயிலில் உள்ள பிரசாத ஸ்டாலில்
**அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமிக்கு**
நிவேதனம் செய்யப்பட்ட லட்டு, புட்டமுது,
தேன்குழல்,அதிரசம், கற்கண்டு, சர்க்கரைப் பொங்கல்,
புளியோதரை, தயிர்சாதம் மற்றும் நயம் விபூதி
பேரீச்சம்பழம் முதலிய பிரசாதங்கள் கிடைக்கும்.
பக்தகோடி பெருமக்கள் அருட்பிரசாதங்களை வாங்கி
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமிகள் அருளைப்
பெற்றுய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு

**N. ஹரிஹரமுத்து**

பிரசாத விற்பனை குத்தகைதாரர், மலைக்கோயில், பழனி
திண்டுக்கல் மாவட்டம்
தொலைபேசி : 242784

பழனி அடிவாரத்தில் உயர்தர சைவ உணவிற்குச் சிறந்த இடங்கள்
ஸ்ரீ பழனியாண்டவர் கேண்டீன்
வடக்குக் கிரிவீதி, அடிவாரம், பழனி தொலைபேசி : 242754

**ஸ்ரீ பாலாஜி பவன்**
வடக்குக் கிரிவீதி, ஆண்டவர் பூங்காச் சாலை
சந்திப்பு அருகில், அடிவாரம், பழனி
தொலைபேசி : 245594

**ஸ்ரீ பாலாஜி பவன் கிளை**
வடக்குக் கிரிவீதி, அடிவாரம், பழனி
தொலைபேசி : 242115

பக்தர்கள் வசதியாக அமர்ந்து அறுசுவையுடன் சிற்றுண்டி,
உணவு வகைகளை உண்டு மகிழ அழைக்கிறோம்.

நல்வாழ்த்துக்களுடன்....



**RMS**

## பாத்திர மாளிகை

தமிழகத்தின் 2-வது பெரிய பாத்திர கடை

**தங்கம் & கும்பகோணம் பாத்திரம்**
**பர்னீச்சர் மாளிகை**
**உற்பத்தியாளர், மொத்தம் & சில்லரை**
**வியாபாரம்**

80, தேரடித் தெரு, திருப்பாதிரிப்புலியூர்,
கடலூர் - 607 002.

Shop : 234611, 289613, 570612
Cell : 98652 - 12228
E-mail : rms_196729@sify.com



நல்வாழ்த்துக்களுடன்....

*சிவமயம்*
*நற்றவாஉனை நான் மறக்கினும்*
*சொல்லும் நா நமசிவாயவே*

தலைவர்
சிவ ஸ்ரீ பட்டம்

**B. மஹாதேவ குருக்கள்**

**ஸ்ரீ ஆலால சுந்தரர் சபா**

105, சன்னதி வீதி,
திருப்பாப்புலியூர் - கடலூர்-2.
போன் : 04142 - 235045



நல்வாழ்த்துக்களுடன்....

## வேதசிவாகம பாடசாலை

மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றத்தில், ஏழை எளிய மாணவர்களுக்கு ஐந்தாண்டு கால சிவாகமம், வேதம், திருமுறைகள் ஆகியவைகள் உணவு, உடை இருப்பிட வசதிகளுடன், இலவசமாக கல்வி கற்றுத்தரப்படுகிறது.

ஆகம கல்வி கைங்கரியத்தில் பங்குபெற விரும்புவோர் கீழ்கண்ட முகவரியில் தொடர்புகொள்ள வேண்டப்படுகிறது.

**ஸ்ரீ ஸ்கந்த குரு வித்யாலயம்**
**ஸ்ரீ காஞ்சி மஹா சுவாமிகள் சதாப்தி**
**வேத சிவாகம பாடசாலை**
66, சன்னதித் தெரு, திருப்பரங்குன்றம்
மதுரை - 625 005.
போன் : 0425 - 2482945.



**அருள்மிகு**
**சுப்பிரமணி சுவாமி திருக்கோயில்,**
திருப்பரங்குன்றம், மதுரை-5.

**திருப்பணி வேண்டுகோள்**

மதுரை மாவட்டம், மதுரை தெற்கு வட்டம், திருப்பரங்குன்றம், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலின் உபகோயிலான, மலைமீது அமைந்துள்ள அருள்மிகு காசிவிஸ்வநாதர் சுவாமி திருக்கோயிலில் விரைவில் திருப்பணிகள் செய்து, குடமுழுக்கு செய்யப்படவுள்ளது. திருப்பணிகளுக்கும், குடமுழுக்கு விழாவிற்கும் உபயதாரர்கள்/ நன்கொடையாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள். திருக்கோயிலுக்கு நன்கொடை அளித்து அருள்மிகு காசிவிஸ்வநாதரின் அருளைப் பெற்றுய்ய வேண்டுகிறோம்.

போன் : 0452-2482248 / 2484359 அலுவலகம்
2482648 தங்கும் விடுதி
Website : www.thiruparankundramtemple.org
Email : parankundram@sify.com

**பா.பாஸ்கரன்**, பி.எஸ்.சி., பி.எல்.,
தக்கார்/இணை ஆணையர்

**இரா.பத்மநாபன்,** பி.எஸ்.சி., பி.எல்., டி.எல்ஏ.
துணை ஆணையர் / செயல் அலுவலர்

விளம்பர உதவி : **கே. முரளி, ஒப்பந்ததாரர்**
ஸ்ரீநகர், தாமரபரணி முதல் தெரு,
பிளாட் எண்.3, ஆணையூர், மதுரை-625 014.
போன் : **2640280, 264683,** செல் **:98421-62683**

# இடர்களையும் திருநெடுங்களம் திருக்கோயில்

கி. ஸ்ரீதரன்
பதிவு அலுவலர்
தொல்லியல் துறை, சென்னை-113.

மக்கள் தங்களுக்கு ஏற்படும் துன்பங்கள் நீங்கவும், மன அமைதி வேண்டியும் திருக்கோயில்களுக்குச் சென்று இறைவனை வழிபட்டு வருகின்றனர். அத்தகைய திருக்கோயில்களில் ஒன்றாகச் சிறப்பு வாய்ந்தத் திருத்தலமாக 'திருநெடுங்களம்' திருக்கோயில் விளங்குகிறது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் காவிரிக்கரையில் திருநெடுங்களம் என்னும் சிறப்பு மிக்க திருத்தலம் அமைந்துள்ளது. திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் சாலையில் திருவெறும்பூரை அடுத்து துவாக்குடி என்னும் ஊரிலிருந்து 3 கி.மீ. வடக்கே சென்றால் இவ்வூரை அடையலாம். நகரப் பேருந்துகள் இவ்வூர் வழியே செல்கின்றன.

திருஞான சம்பந்தர் இத்தலத்திற்கு வந்து இறைவனைப் போற்றி "இடர்களையும் திருப்பதிகம்" அருளிச் செய்த சிறப்பான தலமாக விளங்குகிறது. "மறையுடையாய் தோலுடையாய் வார்சடை மேல் வளரும் பிறையுடையாய் பிஞ்ஞகனே" என இங்கு கோயில் கொண்ட இறைவனை அழைத்து பதிகத்தின் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் "இடர்களையாய் நெடுங்களம் மேயவனே" என பக்தர்களின் துன்பத்தைப் போக்க வேண்டுகிறார். இத்தலத்திற்குச் சென்று இறைவனை இப்பாடல்களால் போற்றி வழிபடும் அன்பர்களுக்கு வரும் துன்பங்கள் அகலுவதைக் கண் கூடாகக் காணலாம். இது மட்டுமல்லமால் திருநாவுக்கரசுப் பெருமான் பாவநாசத் திருப்பதிகத்திலும், புள்ளிருக்கு வேளூர் திருத்தாண்டகத்திலும் திருநெடுங்களம் இறைவனைப் போற்றுவதை காணலாம்.

பல்லவ மன்னன் ஐயடிகள் காடவர் கோன் அருளிச் செய்த சேத்திரத் திருவெண்பாவில்

"தொட்டுத் தடவித் துடிப் பொன்றும் காணாது
பெட்டைப் பிணமென்று பேரிட்டுக் கட்டி எடுங்கள்
அத்தா என்னாமுன் ஏழை மடநெஞ்சே
நெடுங்களத்தான் பாதம் நினை"

என்று உள்ளம் உருக வேண்டுகின்றார்.

அருணகிரி நாதர் இத்தலத்தில் கோயில் கொண்டு விளங்கும் முருகப் பெருமானைத் தமது திருப்புகழ்ப் பாடல்களில் 'அன்பர் குலவும் திருநெடுங்கள வளம்பதி' எனப்போற்றுவதைக் காணலாம். அருட்பிரகாச வள்ளலார் பெருமானும் இத்தலத்தைப் போற்றியுள்ளார். எனவே அடியார்களால் போற்றிப் பாடப்பெற்ற சிறப்புடன் இத்தலம் விளங்குகிறது.



புராண வரலாறு :

அன்னை பராசக்தி இங்கே தவமிருந்து இறைவனை மணந்து கொண்டதாகப் புராண வரலாறு கூறுகிறது. மேலும் அகத்தியர், வங்கிய சோழன் ஆகியோர் இத்தலத்தை வழிபட்டு பேறு பெற்றதாகவும் கூறப்படுகிறது.

கோயில் அமைப்பு : -

கிழக்கு பார்த்தத் திருக்கோயில், இக்கோயில் முன்பு சுந்தர தீர்த்தம் என அழைக்கப்படும் திருக்குளம் உள்ளது. கோயிலின் நுழைவு வாயிலின் இடப்புறம் விநாயகர் சன்னதியும், வலப்புறம் சக்தி வாய்ந்த கருப்பண்ண சாமி சன்னதியும் உள்ளது. இருவரையும் வழிபட்டு உள்ளே செல்வோம்.

கோபுரம் :

கோயிலில் நுழைந்தவுடன் காண்பது ஐந்து நிலை கோபுரம், அண்மையில் நடைபெற்ற திருப்பணியின்போது, உழவாரப்பணிக் குழுவினரின் முயற்சியால் புதிதாக கட்டப்பட்ட கோபுரம். இக்கோயிலின் தலபுராண வரலாறு, ஞானசம்பந்தர் திருப்பதிகத்தில் குறிக்கப்பட்டுள்ள செய்திகள் அனைத்தும் அழகிய சுதை உருவங்களாக அமைந்துள்ளது சிறப்பாகும்.



கொடிமரம், பலிபீடம், நந்தி மண்டபம், அடுத்து வலப்புறம் அம்மன் சன்னதியைக் கண்டு வழிபடலாம்.

அம்பாள் தனது நான்கு கரங்களில் மேலிருகரங்களில் தாமரை மலர்களையும், கீழ் இருகரங்களில் அபய-வரத முத்திரையும் தாங்கியும் ஒப்பில்லா நாயகி மங்களாம்பிகை என்ற பெயர் கொண்டு அருள் வழங்குகிறார். கருணை பொங்கும் முகப் பொலிவுடன் அன்னை காட்சி தரும் அற்புதக் கோலத்தைக் கண்டு வணங்கலாம்.

அம்பாள் சன்னதியை அடுத்து முதல் திருச்சுற்றுக்குச் செல்லும் வாயில் கோபுரத்துடன் அமைந்துள்ளது. இதில் காணப்படும் துவாரபாலகர் சிற்பங்கள் அழகு மிக்கவை. இக்கோபுரத்தில் ஞானசம்பந்தர் இத்திருத்தலத்திற்கு வந்து வழிபட்ட காட்சி சுதை வடிவமாகக் காணப்படுகிறது.

முதல் திருச்சுற்றில் விநாயகர் முருகப் பெருமான், சப்த மாதர், பெருமாள் சண்டிகேசுவரர், நவக்கிரக சன்னதிகள் அமைந்துள்ளன. விநாயகர் வலம்புரி விநாயகராக காட்சி தருகிறார். வடகிழக்கு மூலையில் நடராஜர் சன்னதி அடுத்து பைரவரும், சூரியனும் காட்சி தருகின்றனர்.

திருநெடுங்களநாதர் :

திருச் சுற்று வலம் வந்து கருவறையில் எழுந்தருளியுள்ள இறைவனைக் காணச் செல்கிறோம். கருவறையின் அமைப்பு புதுமையானது. இறைவன் எழுந்தருளியுள்ள வடிவில் அமைந்துள்ளது. இறைவன் சிறிய வடிவிலே சுயம்புலிங்கமாகக் காட்சி தருகிறார். தன்னை வழிபடும் அன்பர்களின் துன்பங்களைப் போக்குகின்ற சிறப்பை உடையவராகத் திகழ்கிறார். இறைவன் திருநெடுங்களநாதர் என்றும் நித்திய சுந்தரேசுவரர் என்றும் அழைக்கப்படுகின்றார்.

தட்சண கைலாசம் :-

இறைவன் எழுந்தருளியுள்ள கருவறைக்கு மேல் ஒரு விமானமும், அர்த்த மண்டபத்தின் மேல் ஒரு விமானமும் சேர்ந்து இரண்டு விமானங்களுடன் காசியில் உள்ளது போல் விளங்குவதால் "தட்சிண கைலாசம்" என அழைத்துப் போற்றுகின்றனர். இக்கோயில் கல்வெட்டுக்களிலும் இக்கோயில் "தட்சிண கைலாசம்" என்று அழைக்கப்படுகிறது. ஆடி மாதத்தில் நாள்தோறும் இறைவன் மீது சூரிய ஒளிபட்டு சூரிய பூஜை நடக்கும் அற்புதக் காட்சியை கண்டு வணங்கலாம்.

யோக தட்சிணா மூர்த்தி :-

கருவறையின் வெளிப்புறச் சுவர் சதுர வடிவமாக

எப்போதும் சந்தோஷமாக இருக்க கடவுள் வழிபாட்டையும், தரும காரியங்களையும் நிறையச் செய். அதுவே நீ மேன்மை அடையும் வழியாகும்.

உள்ளது. தெற்கு தேவ கோட்டத்தில் அற்புத யோக தட்சிணாமூர்த்தி வடிவினைக் கண்டு வழிபடலாம். மேலிருகரங்களில் மான், மழு ஏந்தியும், இடது கீழ்க் கரத்தில் தீச்சுடரை ஏந்தியும், வலது கை ஞானம் போதிக்கின்ற சின் முத்திரையும் தாங்கிய அற்புதக் கோலம்.

**கல்வெட்டுகள்**

இக்கோயிலில் முப்பதுக்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் காணப்படுகின்றன. சோழ மன்னர்கள் காலம் முதல் மதுரை நாயக்க மன்னர்கள் காலம் வரை தொடர்ச்சியாக இக்கோயில் சிறப்பாகப் போற்றப்பட்டதற்கான வரலாற்றுச் சான்றுகளை இங்கு காணப்படும் கல்வெட்டுகளால் அறிய முடிகிறது. இன்றும் அன்பர்கள் இக்கோயிலில் பிரதோஷ வழிபாட்டினைச் சிறப்பாக செய்து வருகின்றனர்.

**வழிபாட்டுச் சிறப்பு :-**

முதற் சுற்றில் தெற்கு பக்கத்தில் திருநடைமாளிகையில் எழுந்தருளியுள்ள சப்த கன்னியர்கள் சன்னதி உள்ளது. இதில் **நடுநாயகமாக விளங்கும் வராகி அம்மனுக்கு மஞ்சள் கரைத்த நீரால் அபிஷேகம் செய்து அத்தீர்த்தத்தை கன்னிப் பெண்கள் தலையில் தெளித்துக் கொண்டால் விரைவில் திருமணம் ஆகிறது** என்பதால் பலர் இவ்வேண்டுதலை செய்து நலம் அடைகின்றனர்.

அண்மையில் கும்பாபிஷேகம் நடைபெற்று புதுப்பொலிவுடன் தன்னை நாடிவரும் அன்பர்களின் துன்பங்களைப் போக்கும் திருநெடுங்களம் திருக்கோயிலை நாமும் சென்று வழிபட்டு நலமடைவோம்.

❖

# கூத்தனூர் சகலகலாவல்லி

கல்விக்கலைமகள் குடிகொண்டுள்ள பல தலங்கள் உள்ளன.



திருவாரூர் மாவட்டம் பூந்தோட்டம் கூத்தனூர் என்னும் ஊரில் சரஸ்வதிக்கென தனியாக ஒரு கோயில் அமைந்துள்ளது. கையிலே அட்சமாலையும், புத்தகத்தையும், சின் முத்திரையும் கொண்டு, மடியிலே வீணை சாத்திக் கல்விக்கு அதிபதியாம் கலைமகள் கருவறையில் வீற்றிருந்த கோலத்தில் காட்சி தருகிறாள். இத்திருத்தலத்தில் கங்கையும், யமுனையும், சரஸ்வதியும் கலப்பதால் தட்சணதிருவேணி சங்கமம் என பிரும்மாண்டபுராணம் குறிப்பிடுகிறது.

இரண்டாம் இராஜராஜ சோழனால் அவரது அவையில் இருந்த ஒட்டக்கூத்தருக்குத் தானமாக வழங்கப்பட்ட ஊராதலால் கூத்தனூர் என வழங்கப்படுகிறது.

கும்பகோணம் சாரங்கபாணி தீட்சிதர் புதல்வன் பேசாமல் இருந்து சரஸ்வதி அருளால் விஜயதசமி நாளில் பேச்சுத்திறன் பெற்றது சமீப காலத்திய வரலாறு.

சரஸ்வதிக்கு அம்சவாகனம் வெண்ணிற ஆடை ஆகியவை வழக்கமாக கைக்கொள்ளப்படும் வழக்கங்களாக உள்ளது. இத்திருக்கோயில் சரஸ்வதியை வழிபடுவதால் கல்வி மேன்மையும் , ஞானமும் கைகூடும்.

கலைமகளால் அருள்பெற்றோர் வரிசையில் கம்பர், ஒட்டக்கூத்தர், காளிதாசர், குமரகுருபரர் எனப் பலர் அடங்குவர். தமிழகத்தின் கம்பர் 'சரஸ்வதி அந்தாதி'யையும், ஒட்டக்கூத்தர் 'ஈட்டியெழுபது' என்ற நூலையும் இயற்றியுள்ளனர்.

தக்கயாகப் பரணியில் ஒட்டக்கூத்தர் கம்பரை 'ஆற்றங்கரை சொற்கிழத்தி வாழியே' எனப் பாராட்டுகிறார்.

# திருமண தோஷம் நீங்க திருவிடந்தை செல்வோம்



சென்னைக்குத் தெற்கே எழில்மிகு கிழக்குக் கடற்கரை சாலையில் 42வது கி.மீ. தூரத்திலும், கோவளத்தில் இருந்து 2 கி.மீ. தூரத்திலும், மாமல்லபுரத்தில் இருந்து வடக்கே 16வது கி.மீ. தூரத்திலும், கிழக்கு நோக்கி திருவிடந்தை அருள்மிகு நித்யகல்யாண பெருமாள் திருக்கோயில் அமைந்து உள்ளது. 108 திவ்யதேசங்களில் தொண்டை நாட்டு திருப்பதிகள் 22ல் இது சிறப்புப்பெற்றது.

திருவிடந்தை - பெயர்க்காரணம்

"எந்தை" என்றால் எம்+எந்தை என பொருள். எம் தந்தையாகிய பெருமாள், திரு(லட்சுமி)வை தம் இடப்பாகத்தில் கொண்டுள்ளதால் திருவிடவெந்தை எனப் பெயர் ஏற்பட்டது. பின் மருவி திருவிடந்தை ஆயிற்று.

திருவிடந்தையின் வேறு பெயர்கள் :

1. பெருமாளுக்கு நித்யமும் (தினமும்) திருமணம் நடந்ததால் நித்யகல்யாணபுரி எனவும்
2. பெரிய பிராட்டியார் அவதாரம் செய்த தலமாததலாம் ஸ்ரீபுரி எனவும்
3. ஆதிவராக மூர்த்தியாக நின்று சேவை சாதிப்பதால் வராகபுரி எனவும்
4. கல்வெட்டுகளில் காணப்படும் பெயர் அசுரகுல கால நல்லூர், வாமகவீபுரி எனவும் விளங்குகிறது.

முன்னொரு காலத்தில் மேகநாதன் என்ற அசுரனுக்கு பலி என்ற மகன் பிறந்து நீதிமானாய் அரசாட்சி செய்து வந்தபோது, மாலி, மால்யவான், சுமாலி என்ற மூன்று அசுரர்கள் தங்களுடன், இணைந்து வந்து தேவர்களுடன் போரிட அழைத்ததாகவும், பலி மறுத்து விட்டதாகவும், மூவரும் சென்று தேவர்களுடன் போரிட்டு தோல்வியுற்று வந்து பலியிடம் சரணாகதி அடைந்ததாகவும், அவர்களுக்காக தேவர்களுடன் போராடி பலி ஜெயித்ததாகவும், தேவர்களுடன் யுத்தம் நடத்திய பாவம் நீங்க இத்தலத்தில் உள்ள வராக தீர்த்தக்கரையில் பலி கடும் தவம் புரிந்ததாகவும், அவனது தவத்தை மெச்சிய பெருமாள்வராக மூர்த்தியாக காட்சி தந்து மோட்சமளித்ததாகவும் புராணம் கூறுகிறது. பெருமாள்வராக மூர்த்தியாக காட்சி தந்ததால் இத்தலத்திற்கு "வராகபுரி" என்ற பெயரும் வழங்கலாயிற்று.

சம்பு தீவில் சரஸ்வதி ஆற்றங்கரையில் குனி என்னும் முனிவர் தவமியன்றி வந்தார். அவருக்கு பணிவிடை செய்வதற்கு கன்னிகை ஒருத்தி அங்கு வந்து சேர்ந்தாள் நாளடைவில் அம்முனிவர் வீடுபேறெய்தினார். கன்னிகை அம்முனிவரை பின்பற்றிக் கடும் தவமியற்றி வந்தாள். ஒருநாள் நாரத முனிவர் அவர்முன் தோன்றி திருமணம் செய்து கொள்ளாமல் வீடு பேறு பெற இயலாது எனக் கூறினார். திருமணம் செய்து கொள்ள பல முனிவர்கள் தவமியற்றி வந்த இடத்தை அடைந்தாள், அம்முனிவர்களில் யாரேனும் ஒருவர் தன்னை மணம் புரிந்து கொள்ள வேண்டினாள். அவளது துயர நிலையை கண்டு காலவ முனிவர் அவளை மணந்து கொண்டார். பெரிய பிராட்டியார் லட்சுமியின் அருளால் ஓராண்டில் அவர்களுக்கு 360 கன்னிகைகள் தோன்றினர். முதல் கன்னிகையின் பெயர் கோமளவல்லி, குழந்தைகளை ஈன்றபின் அவளும் மறைந்தாள். காலவ முனிவர்

ஆன்மாவில் உண்மை ஞானம், உண்மைத் தன்மையை அறிந்துகொள்வதற்கு ஒரு சாதனமாக இறைவழிபாடு, உருவ வழிபாடு அமைகிறது.

அக்கன்னிகைகளைக் காப்பாற்ற இயலாதவராக சம்பு தீவிற்கு வந்த முனிவர்களிடம் விசனப்படவே, அவர்கள் அவரை "திருவிடந்தை" சென்று பெருமாளை வழிபட கூறினர். தம் கன்னிகைகளுக்கு நல்ல வரன்கள் அமையவேண்டுமென அவரும் தம்பெண்களுடன் வந்து பெருமாளை வேண்டினார். பெருமாளும் அவர் வேண்டுகொளை ஏற்று, பிரம்மச்சாரியாக வந்து நாள் தோறும் ஒரு கன்னிகையைத் திருமணம் செய்து கொண்டு, 360ஆம் நாள் அனைவரையும் ஒருவராக்கி "அகிலவள்ளி" என்ற திருநாமம் சூட்டி தன் இடப்பக்கத்தில் எழுந்தருள செய்து சரம சுலோகத்தை உலகத்தாருக்கு உபதேசித்து அருளினார். தினமும் திருமணம் செய்து கொண்டதால் பெருமாளுக்கு "நித்யகல்யாண பெருமாள்" எனவும், இத்தலத்திற்கு "நித்யகல்யாணபுரி" எனவும் பெயர் வழங்கலாற்று.

### தீர்த்தம்

கல்யாண தீர்த்தத்தில் சித்திரை மாதத்தில் நீராடிப் பெருமாளை வணங்கினால் பாவங்கள் தீரும் என்பதும், வராக தீர்த்தத்தில் மாசி மாதத்தில் நீராடி பெருமாளை வணங்கினால் மோட்சம் கிடைக்கும் என்பதும், ரங்கநாதர் தீர்த்தத்தில் மார்கழி மாதத்தில் நீராடிப் பெருமாளை சேவித்தால் நினைத்தது நடக்கும் என்பதும் சான்றோர் அருளிய வாக்கு.

### தோஷநிவர்த்தி :

உற்சவர் நித்தியகல்யாண பெருமாள், கோமளவல்லி தாயார் இருவருக்கும் தாடையில் இயற்கையிலேயே அமைந்த திருஷ்டி பொட்டு, தரிசனம் செய்யும் அனைவரது திருஷ்டி தோஷத்தையும் நீக்குகிறது. வராகப்பெருமாளின் திருவடியை சிரசில் தாங்கி நிற்கின்ற ஆதிசேஷன் தம்பதியை தம்பதி சமேதராய் சேவிப்பவர்களுக்கு "ராகு கேது தோஷங்கள்" நீங்குகின்றன.

பள்ளி கொண்ட பெருமாளாய் ஸ்ரீதேவி, பூதேவியுடன் சேவை சாதிக்கின்ற ரங்கநாதரை தரிசிப்போர்க்கு "சுக்ரதோஷம்" நிவர்த்தியாகிறது. நித்யமும், திருமணம் செய்து கொண்ட மூலவர் ஆதிவராகப் பெருமாளை சேவிப்பவர்களுக்கு திருமணம் நடைபெறுவதில் உள்ள தோஷங்கள் அனைத்தும் நிவர்த்தியாகின்றன. ❖

## வெற்றிப்பரிசு வெள்ளெருக்கு



வாணன், ஓணன் என்ற இரு அசுரர்கள் கோட்டையமைத்து மக்களைத் துன்புறுத்தி வந்தனர். தொண்டைமான் அவர்களை அடக்க படைநடத்திச் சென்றான். வழியில் இருந்த முல்லைக்கொடிகள் தொண்டைமானுடைய யானையின் காலை சுற்றிப் படர்ந்து அதை மேலே செல்லவிடாமல் தடுத்தது.

அரசன் யானையிலிருந்தபடியே அக்கொடிகளை வெட்டினான். அப்போது இரத்தத் துளிகள் சிதறி விழுந்தன. அவன் கீழே இறங்கிப் புதரை விலக்கிப் பார்க்க அதனுள்ளே சிவலிங்கம் ஒன்று இருக்கக் கண்டான். சிவனை வெட்டி விட்டோமே என்று மனம் வருந்தி தன் கையை வெட்டிக்கொள்ள முயன்றான். அப்போது சிவபெருமான் வெளிப்பட்டு அவனுக்குக் காட்சி கொடுத்து அருள் புரிந்தார். அவனுக்குத் துணையாக தனது நந்தியை அனுப்பி வெற்றி பெறச் செய்தார். மன்னன் வெற்றிப் பரிசாக குரும்பர்களின் கோட்டையிலிருந்த பெரிய அரிதான வெள்ளெருக்கன் தூண்களை பெயர்த்து வந்து கோயிலுக்கு காணிக்கையாக்கி மகா மண்டபத்தில் நிறுவினான்.

சுந்தரர் தமது தேவாரத்தில் இந்த வரலாற்றை சிறப்புடன் விளக்கியுள்ளார்.

அந்த வெற்றிப்பரிசான நெடிய தூண்கள் வரலாற்றுக்குச் சாட்சியாக இப்போதும் அக் கோயிலில் காட்சியளிக்கின்றது.

நந்தி உடன் சென்றதை எந்நாளும் நினைவூட்டும் வகையில் கிழக்கு நோக்கி சிவனுக்கு முதுகு காட்டி படுத்துள்ளதைக் காணலாம்.

மன்னன் வெட்டிய வடு சிவலிங்கத்தின் திருமேனியில் உள்ளது. அதனால் இவருக்கு தினஅபிஷேகம் செய்யாமல் சந்தனக்காப்புடன் காட்சி தருகிறார். ஐப்பசி சதயத்தன்று மட்டும் சந்தனம் களையப்பட்டு திருமேனி காட்சி கிடைக்கும். அன்றைக்கு வெந்நீர் அபிஷேகம் உண்டு.

இத்தகைய சிறப்புடைய தலம் சென்னை அம்பத்தூர் அருகிலுள்ள வடதிருமுல்லைவாயில் அருள்மிகு கொடியிடைநாயகி உடனுறை மாசிலாமணீஸ்வரர் திருக்கோயில் ஆகும். இங்கு தரிசனம் செய்தால் எடுத்த காரியங்கள் தடைநீங்கி சுபமாக முடியும். ❖

# அகஸ்தியர் ஆராதித்த லலிதா சகஸ்ரநாம பூஜை



ஒரு முறை ஸ்ரீ ஹயக்கிரீவர் அகத்தியருக்கு லலிதா சகஸ்ர நாமத்தை உபதேசம் செய்கையில், லலிதாம்பாளினை எங்கு தரிசிக்கலாம்? என்று அகத்தியர் கேட்க அவர் அருணனும் சூரியனும் பூஜை செய்த ஸ்தலம் பூலோகத்தில் மீயச்சூர் என உள்ளது. அவ்வூரில் சகஸ்ர நாம ஸ்தோத்திரம் வாசிப்பதனால் பெற வேண்டிய பலன்களையும் அங்கு சென்றாலே நிச்சயம் அடையலாம் என்றும் கூறினார்.

இதைக் கேட்ட அகத்தியரும் உடனே திருமீயச்சூர் வந்து அடைந்து, அப்பொழுது சூரியனால் ஈஸ்வரன் பூஜிக்கப்படும் காட்சியைக் கண்டு மகிழந்தார். மேலும்சூரியன் ஈஸ்வரனை 'ஆம்லா பலாதி பூர்ண க்ரண பூஜை' எனும் விசேஷ பூஜை செய்யும் முறையைக் கண்டு, தானும் அவ்வாறு பூஜை செய்து, பரமேஸ்வரனை வழிபட்டுப் பரமானந்தம் கொண்டார். அகஸ்தியர் சுவாமியை தரிசித்த பின்பு, உடன் இருந்த அன்னை ஸ்ரீ லலிதாம்பாளினைத் தரிசனம் செய்து லலிதா சகஸ்ரநாம அர்ச்சனையின் பூர்ண பலனைப் பெற்றார்.

சூரியன் செய்கின்ற பூஜையானது ஒவ்வொரு வருடமும் சித்திரை மாதம் 21 முதல் 27ந் தேதி முடிய நடைபெறுகிறது. அப்பொழுது சூரிய கிரணங்கள் உதயம் ஆகும் போது அவை சுவாமி கருவறையில் உள்ள லிங்கத்தின் மீது விழும். இன்றைக்கும் இந்த பூஜை மிகவும் சிறப்புடன் நடைபெறுகின்றது.

அம்பாளுக்கு 1 மண்டலம் (48 நாள்) லலிதா சகஸ்ர நாம அர்ச்சனை செய்து வந்தால், நினைத்த காரியம் கைகூடும். நவக்கிரக தோஷம் இருந்தால் நிவர்த்தியாகும். லலிதா நவரத்ன மாலை படித்து அம்பாளை வணங்கினால், நவகோடி அர்ச்சனை போன்றவைகள் செய்தால் அடையும் அளவிட முடியா பல பயன்களும் சிறப்பும் அடைவது உறுதி. ஏழுஜென்மம் செய்த பாவமும் பகையும் நம்மை விட்டு விலகும். இத்தலம் திருவாரூர் மாவட்டத்தில் பேரளம் அருகே அமைந்துள்ளது. ❖

# ஈச்சனாரி எந்தை



சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்னர் மேலைச் சிதம்பரம் என அழைக்கப்படும் பேரூர் பட்டீஸ்வரர் திருக்கோயிலில் எழுந்தருள்விப்பதற்காக சுமார் 6 அடி உயரமும், மூன்றடி அகலமும் கொண்ட திருவுரு மதுரையிலிருந்து மாட்டு வண்டியில் வரும்போது வழியில் அச்சு முறிந்தது. அதில் வந்த விநாயகர் அவ்விடத்திலேயே எழுந்தருளினார். இவருக்கு ஈச்சனாரி விநாயகர் என்ற பெயர் ஏற்பட்டது.

தினமும் 6 கால பூஜை கொண்டருளும் விநாயகருக்கு 27 நட்சத்திரங்களுக்கு நாளொரு வண்ணமாக விதவிதமான அலங்காரங்கள் செய்யப்படுகின்றன. இக்கோயிலில் சங்கடஹர சதுர்த்தி, மாத சதுர்த்தி, கிருத்திகை, பௌர்ணமி, அமாவாசை, தமிழ்வருட பிறப்பு, விநாயகர் சதுர்த்தி போன்ற பெருவிழாக்கள் கொண்டாடப் படுகின்றன. கோவையிலிருந்து பொள்ளாச்சி செல்லும் நெடுஞ்சாலையில் 9வது கிலோ மீட்டரில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது.



# செல்வம் நல்கும் தீப ஒளித் திருநாள்

பூசை. ச. ஆட்சிலிங்கம்

ஐப்பசி மாதம் அரும்தவம் உடைய மாதமாகும். சிவசக்தியரின் அருள் உலகிற்கு அதிகமாக வரும் காலம் இதுவே ஐப்பசி மாதப் பிறப்பை விஷுபுண்ணிய காலம் என்று போற்றுகின்றனர். ஐப்பசி மாத சதுர்தசியன்று அம்பிகை செய்த தவத்திற்கு மகிழ்ந்த சிவபெருமான் அவளுக்குக் காட்சியளித்ததுடன் தன்னுடைய உடலில் இடப் பாகத்தைக் தருவதாகக் கூறினார். அந்த வெற்றியைக் கொண்டாடும் வகையில் தேவர்கள் தீபங்களை ஏற்றிக் கொண்டாடினர்.

அர்த்த நாரி வடிவம் என்பது ஜோதிவடிவமாகும். 'சூழ் ஒளி விளக்கே ஜோதியே சுடரே என்று அழைத்த மாணிக்கவாசகர் 'சுரிகுழல்' மடந்தை பாதியே பரனே என்று அர்த்தநாரிச கோலத்தை விளிப்பது இங்கு எண்ணத்தக்கதாகும். தீப ஜுவாலையில் செந்நிறம் சிவமாகவும் நீல நிறம் சக்தியாகவும் விளங்குகிறது. ஆதலின் அர்த்தநாரீசுவரரை விளக்குகளில் நிலைப்படுத்தி வணங்குகிறோம். உலகம் முழுவதும் சிவசக்தி வடிவமாக விளங்குகிறது என்பதால் எல்லா இடங்களிலும் தீபங்களை வரிசையாக ஏற்றி வழிபட்டனர். அதுவே ஆதியில் ஏற்பட்ட தீபாவளியாகும்.

கௌரி தவத்தில் வெற்றி பெற்று தனது விரதத்தை நிறைவு செய்த நாள் ஐப்பசி அமாவாசையாகும். அந்த வெற்றி தினத்தில் அம்பிகையைப் போற்றி தேவர்கள் செய்த வழிபாடே கேதாரகௌரி விரதமாகப் போற்றப்பட்டுவருகிறது.

அதைத் தொடர்ந்து வந்த கார்த்திகை மாத கிருத்திகையன்று பெருமான் தான் தந்த வரத்தின் படி உமையவளைத் தன் இடப்பாகத்தில் சேர்த்துக் கொண்டு திருவண்ணாமலை மீது ஜோதி வடிவில் காட்சியளித்தார். பின்னர் தேவர்களும் முனிவர்களும் அக்கோலத்துடன் நடனமாடினார். அந்த நடனம் இப்போதும் கார்த்திகை தீபத்தன்று அண்ணாமலையார் ஆலயத்தில் மலைமீது தீபம் ஏற்றும் பொழுது கீழே ஆலயத்துள் நடத்தப் பட்டுவருகிறது. கார்த்திகை தீபம் பெருமளவில் கொண்டாடப்பட்டதாலும் உயர்ந்த சிவதத்துவங்களை விளக்குவதுடன் மூவர்க்கும் முதல்வனாகச் சிவபெருமான் விளங்குவதைச் சாதிப்பதாலும் பெருமை பெற்றது. அந்நாளில் தீபங்களை வரிசையாக வைக்கும் வழக்கம் வந்தது. இதனால் ஐப்பசி தீபாவளியில் தென்னகத்தில் தீபங்களை ஏற்றும் வழக்கம் குறைந்து விட்டது.

ஐப்பசி சதுர்த்தசியன்று சிவபெருமான் அம்பிகைக்கு அருள் புரிந்ததாள் அவள் மகிழ்ச்சி அடைந்தாள் அந்த மகிழ்ச்சியே உலக உயிர்களின் மகிழ்ச்சியாக மலர்ந்து அவருடைய அருள் பொங்கிப் பரவுவதால் அன்று புத்தாடை உடுத்தி இனிப்புகளை உண்டு சுற்றத்தினருடன் மகிழ்கிறோம்.

கேதாரத்தில் அம்பிகை தவம்முடித்து சிவனருள் பெற்ற அவளுடைய தவநிலை ஏற்பட்ட அயர்ச்சி தீர கங்கை வெந்நீர் ஊற்றாகப் பொங்கி வந்தாள். அதில் அம்பிகை நீராடினாள்.

அந்த வெந்நீர் ஊற்றே கௌரி குண்டம் என்று இப்போதும் கேதாரத்தில் உள்ளது. அதை நினைவூட்டவே எண்ணை தேய்த்துக் கொண்டு வெந்நீரில் நீராடும் பழக்கம் உண்டாயிற்று தீபாவளியன்று வெந்நீரில் கங்கை பொங்கி வருகிறாள். நாம் அன்று குளிக்கும் நீரை கங்கையாக எண்ணி தொட்டு வணங்கி நீராடவேண்டும்.

வெற்றி பெற்றவர்களுக்கு நல்லெண்ணை பூசி, சுகந்தப் பொடிகளைத் தேய்த்து நீராட்டுவது வழக்கம்! இதனை விஜயாபிஷேகம் என்பர். நல்லெண்ணையில் மகாலட்சுமி வெற்றித் திருமகள் என்னும் விஜயலட்சுமியாக வாசம் செய்கிறாள். வெந்நீரை கங்கையாகப் போற்றுவதைப் போலவே எண்ணையை மகாலட்சுமியாகவும், வாசனைப் பொடிகளை சரஸ்வதியாகவும் மனதில் எண்ணி பூசித்த பின்னர் நீராடுவது மேன்மையைத் தரும்.

தீபாவளியன்று நீராடுவதால் முப்பெரும் சக்திகளின் அருள் உண்டாகும்! இதையொட்டியே தீபாவளிக்கு அடுத்த நாளை லட்சுமி பூஜையாகக் கொண்டாடுகின்றனர். இதனைக் 'குபேர பூஜை' என்னும் அழைப்பர்.

இந்த ஐப்பசி சதுர்த்தசி சக்தி சிவசம்பந்தமான ஒளியுடன் கூடியது. ஆதி நாளில் இந்த நாளே தீபாவளியாக பாரத தேசம் முழுக்க கொண்டாடப்பட்டது. இது வழிபாட்டோடு கூடியதாகும்.

வைணவ, சைவ, பௌத்த, சமண சமயங்களின் பெருவளர்ச்சியால் சக்தி வழிபாடு பின்னிலை அடைந்தது. அதிலிருந்த வழிபாடான தீபாவளி இந்த சமயங்களுக்கு பரவியதுடன் அந்தந்த சமய வரலாறுகளுக்கேற்ப புதிய கதைகளையும் பழக்க வழக்கங்களையும் ஏற்றுக் கொண்டது. எனினும் அதன் சிறப்பு மிகவும் பிரகாசத்துடனேயே இருந்து வருகிறது.

வைணவ சமயத்தின் படி பூமிதேயிடமிருந்து தோன்றிய அசுரகுமாரன் நரகனை திருமால் வதைத்த நாளே தீபாவளியாகக் கொண்டாடப்படுகிறது. அவன் பெயரால் இந்த நாள் நரக சதுர்த்தசி என்று போற்றப்படுகிறது.



சில கதைகளின்படி இராமர் இராவணனை அழித்து வெற்றி கொண்ட நாள் தீபாவளி என்று கூறுகின்றனர். இந்நாளை ராம்லீலா என்ற ஐதீக விழாவாகக் கொண்டாடுகின்றனர்.

ஜைன சமயத்தின்படி தீபாவளித் திருநாள் மகாவீரசவாமியின் மோட்சதினமாகும். இருபத்து நான்காவது தீர்த்தங்கரரான பகவான் ஸ்ரீ மகாவீரவர்த்தமான சுவாமி ஐப்பசி சதுர்த்தசியில் பாவாரி எனுமிடத்தில் மோட்சம் புகுந்தார். அப்போது அவருக்கு மோட்ச கல்யாண வைபவங்களை நடத்திய இந்திரனும் மற்றைய தேவர்களும் பகவான் பூவுலகத்திலிருந்து மறைந்து விட்டார். அவ்வொளி இனி மோட்சத்தில் பிரகாசிக்கும் ஞான ஒளியின் மறைவினை ஈடு செய்யும் வகையில் நாடெங்கிலும் தீபங்களை ஏற்றி விழாகொண்டாடுங்கள் என்று கூறினார். மக்கள் வீடுகள் வீதிகள், மாடமாளிகைகள், கூடகோபுரங்கள் முதலிய எல்லா இடங்களிலும் விளக்குகளை ஏற்றி வைத்தனர். இந்த விளக்கீடே தீபாவளியாகத் தொடர்ந்து கொண்டாடப் பட்டு வருகின்றது என்று கூறுகின்றனர்.

தீபாவளியோடு தொடர்ந்து வரும் விரதம் மகா கந்தர் சஷ்டி விரதமாகும். இதுவும் தீயுடன் சம்பந்தப்பட்டது. சூரபத்மனுடைய அசுரர் சேனைகளின் தொல்லைக்கு ஆற்றாது அழுது அலற்றிய தேவர்களின் வேண்டுகோள் செவிபடுத்த சிவபெருமான் தன் நெற்றிக் கண்ணிலிருந்து ஆறு பொறிகளை உண்டாக்கினான். அவற்றை அக்னியிடம் கொடுத்தான். அதைத் தாங்கமுடியாத அக்னி வாயுவிடம் கொடுக்க அவனும் தரிக்கமுடியாது கங்கையிடம் அளித்தான். அவளும் அதன் வெப்பத்தைப் பொறுக்க முடியாது தனது ஆரம்ப இடமான சரவணப் பொய்கையில் கொண்டு விடுத்தாள். அந்தப் பொய்கையில் இருந்த

வேதபாராயணம், பஜனை, கடவுள் துதி முதலியவற்றை நாம் நிறைய செய்ய வேண்டும்.
பக்தி நமது வழக்கத்தில் முக்கியமாக இருக்க வேண்டும்.

ஆறுதாமரை மலர்களில் அந்த தீப்பொறிகள் தனது தன்மைமாறி விளக்குகள் போல் ஜொலித்தன. பின்னர் அவை ஆறும் குழந்தைகளாயின. அந்த ஆறு குழந்தைகளை பார்வதி ஒன்றாக வாரி அணைக்க அவை ஆறுமுகங்களும் பன்னிரண்டு திருக்கரங்களும் கொண்ட ஒரு திருமுருகன் ஆனது. இப்படிமுருகன் தோன்றியதும் ஐப்பசி சதுர்த்தசியினாலேயே என்று சித்தர் அருள்வாக்கு நூல்கள் கூறுகின்றன.

முருகன் தீப்பிழம்பாக தோன்றி தீபவடிவில் விளங்கியதால். அது தீபங்களை ஏற்றும் விழாவாக ஆதியில் தோன்றியிருக்கலாம் என்று நம்புகின்றனர். அதன் பின்னர் அவன் தொடர்ந்து வரும் சஷ்டியில் திருச்செந்தூரில் சென்று சூரனோடு போரிட்டு அவனை வென்றதாகப் புராணம் கூறுகிறது.

இப்படி ஐப்பசி சதுர்த்தசியை ஒட்டி பல்வேறு புராணக்கதைகள் இருப்பதால் அது புனித விழாவாகக் கொண்டாடப்படுகிறது. அந்நாளில் சிவபெருமான் சோதிவடிவாகத் தோன்றி அம்பிகைக்கு அருளியது. பின்னொருசமயம் முருகனை தீப்பொறியாக தோற்றிவித்தது முதலியவற்றை நிகழ்த்தியதால் சைவர்கள் அதைச் சிறப்புடன் கொண்டாடுகின்றனர். கண்ணபிரான் நரகாசுரனை அழித்தால் அதனை நரகசதுர்த்தியாகக் வைணவர்கள் கொண்டாடுகின்றனர். உலகிற்கு ஒளியூட்டும் திருநாளாக ஜைனர்கள் கொண்டாடுகின்றனர்.

தீபங்களும், இன்சுவைப் பண்டங்களும் மகாலட்சுமியின் வடிவம் என்பதால் தீபங்களை ஏற்றி இனிப்புப் பலகாரங்களைப்படைத்து அவள் வரவைக் கொண்டாடும் விழா என்றும் கூறுவர். இதனை லட்சுமி வழிபாடாக பெரிய அளவில் கொண்டாடுகின்றனர்.

பொங்கும் மங்களம் தீபத்திருநாளில் எல்லோரும் எல்லோமும் பெற்று இனிது வாழ கங்கையையும், மகாலட்சுமியையும் வரவேற்று போற்றி மகிழ்வோம். ❖

**பண்பாடு**

கோவிலிலும் வீட்டிலும் வழிபாட்டின் போது இடுப்பில் வேஷ்டிக்கு மேல் துண்டை கட்டிக் கொண்டு வழிபாடு செய்வது தமிழர் மரபு.



# மாப்பிளை வரார்!

நாகப்பட்டினத்தில் இருந்து நன்னிலம் செல்லும் பாதையில் திருப்புகலூர் நிறுத்தத்தில் இருந்து 1 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது திருக்கண்ண புரம். உத்பலாவதக விமானத்தில் நித்ய புஷ்கரணி கரையில் ஸ்ரீ கண்ணபுர நாயகி என்னும் தனிக்கோயில் நாச்சியாருடன் மூலவர் நீலமேகப்பெருமாள் என்னும் திருநாமத்துடன் சேவை சாதிக்கிறார்.

உற்சவர் சௌரிராஜ பெருமாளுக்கு ஸ்ரீதேவி, பூதேவி, ஆண்டாளுடன் பத்மினி என்ற தேவியும் உண்டு.

மன்னன் உபரி சிரவஸுவுக்கு ஒரு திருமகள். பெயர் பத்மினி. அவளுக்கு வலைநாச்சியார் என்றும் பெயர் உண்டு. அவளைத் திருக்கண்ணபுரத்து சௌரிராஜன் மணந்து கொண்டார் என்பதால் அவர் அந்த ஊர் மக்களுக்கு மாப்பிள்ளை ஆகிறார்.

கிழக்கு கடலில் ஆழ்ந்துள்ள கருட பர்வதத்திற்கு காட்சிதர ஸ்ரீ சௌரிராஜபெருமாள் மாசி மாதம் பௌர்ணமியன்று கருட வாகனத்தில் கடற்கரைக்குச் செல்லுவார். அப்பகுதியில் உள்ள எண்ணில்லா மீனவர்கள் எம்பெருமானை எதிர்கொண்டு அழைக்கின்றனர். பெருமாள் எழுந்தருளும் வழியில் வலைகளை நடைபாவாடையாக்கி பந்தலுமிட்டு அவர்கள் வீட்டிற்கு மாப்பிள்ளை வந்ததுபோல் "மாப்பிளை வரார்" என்று கூவி சந்தோஷப்படுகின்றனர். இறைவனுக்கு எந்தபேதமும், மொழியும் இல்லை என்பதற்குத் திருமலைராஜன் பட்டினத்திற்கு பெருமாள் சென்று காட்சிதருவது ஒரு உதாரணம். ❖

# கடிகாசலத்தில் கார்த்திகைத் திருநாள்

சோளிங்கபுரம் என்கிற இந்தத் திருக்கடிகைத் திருத்தலத்தில் கொண்டாடப்படும் கார்த்திகைப் பெருந்திருவிழா பெருமை வாய்ந்த ஒன்றாகும். பன்னிரண்டு மாதங்களில் இக்கார்த்திகை மாதத்திற்குப் பெருமை வந்ததற்குக் காரணம் இந்திரத்யுமன மகாராசா தனது மனைவியுடன் திருமலை - திருப்பதிக்குச் சென்று திருவேங்கடமுடையானை சேவித்து தங்களுக்கு பெருவீடு (மோட்சம்) அளிக்க வேண்டுமென்று வேண்ட அதற்கு அவர் சோளிங்கபுரம் என்கிற திருக்கடிகைக் குன்றின்மீது (பெரியமலை) வீற்றிருக்கும் அருள்மிகு யோகநரசிம்மசுவாமியிடம் வணங்கி உன்னுடைய பேற்றினைப் பெறுவாயாக என்று அருள் கூர்ந்தார். அதன்படி மேற்படி இந்திரத்யும்ன மகாராசன் தன்னுடைய சத்திரிய தர்மத்திற்கு விரோதமாக சஸ்திரதியாகம் (ஆயுதங்கள்) செய்து நரசிம்மனை வழிபட்டார். அச்சமயம் திருக்கடிகை தண்டகாருண்ய வனம்போல் காட்சியளித்தது. ரிஷிகள் பகவானை வழிபட்டு தவம் செய்துவருகின்ற சமயத்தில் நிகும்பன் என்னும் அரக்கனாலே துன்பப்பட்டார்கள். ராஜா வந்தவுடன் அவரிடம் தங்களுடைய துயரத்தினைப் போக்க வேண்டும் என்று வேண்ட அரசனும் தான் சஸ்திர தியாகம் செய்துவிட்டபடியால் அரக்கருடன் போர் செய்ய இயலாது என்று கூறினார். அவர்கள் மறுத்து சத்திரிய தர்மத்தை விட்டு வேறு தர்மத்தை எடுத்துக் கொள்வது பெரும் தவறு விளைவிக்கக் கூடியது. ஆகவே எங்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டியது அரசனுடைய தர்மமும் கடமையும் ஆகும் என்று தெரிவித்தார்கள்.

அன்று இரவு அரசனும், ரிஷிகளின் வேண்டுகோளைத் தட்டமுடியாமலும் மிகவும் மனம் கலங்கி நொந்து அக்காரக்கனியாகிய எம்பெருமான் நேரில் சேவை கொடுத்து அவனுடைய சங்கல்பத்தை விட்டு ரிஷிகளுடைய பிரார்த்தனையையும் நிறைவேற்றும்படி அருள்பாலித்தார்.

சிறியமலையில் தன்னைக் குறித்து தியானம் செய்து வரும் சிறிய திருவடிக்கு கார்த்திகை வெள்ளிக்கிழமை அன்று இந்திரத்யும்ன மகாராஜாவுக்குத் துணையாக போர் செய்து நிசும்பன் என்ற அரக்கனை மாய்த்து வரப்பணித்தார். தன்னுடைய சுதர்சன ஆழ்வாரை (சக்கரம்) கொடுத்து ஆசி கூறி அனுப்பி வைத்தார். சிறிய திருவடியும்



கடமையை செய்வதுடன் ஆண்டவனிடம் பக்தி செலுத்தினால் பகவானுக்கு நம்மிடம் கருணை உண்டாகும்.

அந்த அரக்கனைக் கொன்று மேற்படி அரசனுக்கு உதவியாக ரிஷிக்கூட்டங்களுக்கு நன்மையைச் செய்தநாள் ஞாயிற்றுக்கிழமை ஆகும்.

ஆகவே, ஞாயிற்றுக்கிழமை அன்று அருள்மிகு யோக ஆஞ்சநேயசுவாமி சங்கு சக்கரங்களைப் பெற்று வைணவ பரிபூர்த்தியை அடைந்ததாக சரித்திரம் கூறுகிறது.

அந்த சக்கரத்தை சிறியமலையில் இருக்கும் புஷ்கரணியில் திருமஞ்சனம் செய்து அதை சுத்திகரித்தார். ஆகவே, அன்றைய தினத்திலிருந்து அந்தக் குளத்திற்குச் சக்கரதீர்த்தம் என பெயர் வழங்கப்பட்டு வருகிறது. இந்தக் குளத்தின் படிகளில் படுத்து விரதம் இருந்தால் அவர்களுக்கு அருள்மிகு யோக ஆஞ்சநேயர் சொப்பனத்தில் காட்சி கொடுத்து விருப்பத்தை நிறைவேற்றுவதாக ஐதீகம். அதை இன்றும் காணலாம்.



இந்தச் சிறப்பை ஸ்ரீ யோகநரசிம்மர் ஸ்ரீ அனுமாருக்கு அனுக்கிரகம் செய்து இவ்வாறு பணித்தார்.

"நீர் துஷ்டநிக்ரஹம் செய்து சிஷ்ட பரிபாலனம் செய்ததால் இன்றைய தினத்திலிருந்து நம்மை நாடி வரும் பக்தர்களுக்கு அவர்களது மனக்குறையையும் துயரத்தையும் துடைத்து நாம் இருவருமாக சேர்ந்து கார்த்திகை மாதம் வெள்ளிக்கிழமை பெரியமலையிலும், ஞாயிற்றுக்கிழமை சிறியமலையிலும் வணங்க வரும் பக்தர்களுக்கு விரும்பிய பலத்தை பூரணமாகக் கொடுத்து அருள்பாலிக்க வேண்டியது" என அருள்புரிந்தார். அதன்படி பெரியமலையில் ஏமகோடி விமானத்தின் கீழ் ஸ்ரீ யோகநரசிம்மசுவாமி கிழக்கு முகமாக சிறிய திருவடியைப் பார்த்துக் கொண்டு வீற்றிருந்த கோலத்துடன் விளங்குகிறார். சிறியமலையில் சிறிய திருவடிக்கு ஸ்ரீ யோக ஆஞ்சநேயர் அனுமத் பர்வதம் என்னும் மலையில் மேற்கு முகமாக ஸ்ரீ யோக நரசிம்மரை வணங்கிக் கொண்டு சங்கு, சக்கரம், ஜபமாலை, ஜப எண்ணிக்கையுடன் யோகாசனத்துடன் வீற்றிருந்த திருக்கோலத்தில் காட்சி தருகிறார்.

இத்திருக்கோயிலில் இந்த ஆண்டு கார்த்திகைத் திருவிழா கீழ்கண்ட நாட்களில் வெள்ளி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் ஐந்து வாரங்கள சிறப்புற நடைபெறவுள்ளன.

இந்நாட்களில் தரிசனம் செய்து யோகத்தில் அமர்ந்து அருளும் நரசிம்மர் திருவருளும் அனுமன் திருவருளும் பெற வேண்டப்படுகிறது.

இச் சிறப்புமிகு 108 திவ்யதேசங்களில் ஒன்றான இத்திருக்கோயில் வேலூர் மாவட்டம் வாலாஜா வட்டத்தில் அமைந்துள்ளது.

| வாரம் | பெரியமலை - வெள்ளி | சிறியமலை - ஞாயிறு |
|---|---|---|
| முதல் வாரம் | 19.11.2004 | 21.11.2004 |
| இரண்டாம் வாரம் | 26.11.2004 | 28.11.2004 |
| மூன்றாம் வாரம் | 03.12.2004 | 05.12.2004 |
| நான்காம் வாரம் | 10.12.2004 | 12.12.2004 |
| ஐந்தாம் வாரம் | 17.12.2004 | 19.12.2004 |

❖

# இதய நோய் தீர்க்கும் வைத்தியநாத சுவாமி

எம். சுந்தர்ராஜ், எம்.ஏ.,



அறிவியல் உலகில் அடங்காத நோய்கள் அன்றாடம் மனிதனை வாட்டி வதைத்துக் கொண்டு இருக்கிறது. நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக புதுப்புது நோய்கள் தோன்றி வருகிறது. இதில் இதய நோயும் ஒன்று. இதயமே நோயின் பிறப்பிடமானால் வாழ்வது எப்படி? இந்த இதய நோயை இல்லாது ஓடச் செய்யும் ஆற்றல் படைத்த எல்லாம் வல்ல வைத்தியநாத சுவாமி கோயில் ஸ்ரீவில்லிபுத்தூர்-மடவார் வளாகத்தில் உள்ளது.

விருதுநகர் மாவட்டத்தில் உள்ள சிவன் கோயில்களில் மிகப் பெரிய மற்றும் பழமை வாய்ந்த கோயில் ஆகும் இது. வைத்தியநாத சுவாமியும், சிவகாமி அம்மையும் எழுந்தருளி இருக்கும் இந்தக் கோயில் செங்கோட்டை ரோட்டில் அமைந்துள்ளது. புகழ்பெற்ற ஆண்டாள் கோயிலில் இருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில் இந்தக் கோயில் அமைந்திருக்கிறது. இது சுமார் ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்தது ஆகும்.

**தலப்பெருமை**

பிரம்மா, இந்திரன், சந்திரன், சூரியன், துருவாசர், அகத்தியர் மற்றும் பல முனிவர்களும் தேவர்களும் இந்த கோவிலுக்கு வந்து வைத்தியநாதரை வழிபட்டு உயர்வு பெற்றதாக கோயில் வரலாறு கூறுகிறது. எனவே ஒருவர் எவ்வளவு பாவம் செய்திருந்தாலும், இங்கு வந்து வழிபட்டுச் சென்றால் அத்தனை பாவங்களும் தீர்ந்துவிடும் என்பது ஐதீகம்.

முன்னொரு காலத்தில் தென் பொதிகை மலைச் சாரலில் இருந்து அழகிய 2 பெண்கள் இந்தக் கோவிலுக்கு வந்து, வீணை மீட்டி அம்மை-அப்பனை செவி குளிரப் பாடித் தங்களின் வறுமையைப் போக்கி இன்பம் அருளும் படி மனம் உருக வேண்டினார்கள். இதனால் மனம் மகிழ்ந்த வைத்திய நாதர் இப்பகுதி அரசனின் கனவில் தோன்றி அந்தப் பெண்களுக்கு தேவையான ஆடை, ஆபரணங்களை வழங்கி அவர்களுக்கு வீடு கட்டித் தரும்படி கூறி மறைந்தார். அதன்படி உருவான மடவார் வளாகம் இன்றும் ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ளது.

இந்த கோயிலின் ராஜகோபுரம் 134 அடி உயரமும், 9 நிலைகளும், 9 கலசங்களும் கொண்டு எழிலுடன் காட்சி தருகிறது. கோயிலின் கர்ப்ப கிரகத்தில் வைத்தியநாதரும், பள்ளியறைச் சொக்கரும், மனோன்மணி அம்மையும் உள்ளனர். நினைத்த காரியம் கைகூட மனோன்மணி அம்மைக்கு அர்ச்சனை செய்யலாம்.

சுவாமி சன்னதிக்கும் 63 நாயன்மார்களுக்கும் நடுவில் அம்மன் சன்னதி உள்ளது. முதல் பிரகாரத்தில் சுவாமி சன்னதியின் கிழக்குப் பகுதியில் பெரிய நந்தி, ராமநாதசுவாமி, பர்வதவர்த்தினி ஆகியோர் உள்ளனர். அங்கு ஏமதீர்த்தமும் உள்ளது. மேற்குப் பகுதியில் செவிசாய்க்கும் விநாயகர், ஜுரதேவர், சரஸ்வதி, அணணாமலையார், கங்காளநாதர், வள்ளி-தெய்வானையுடன் சுப்பிரமணியர் ஆகிய சன்னதிகள் உள்ளன.

விடியும் முன் எழுந்து யோகாசனம் செய்து உடலைத் தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும். நாமாவளி சொல்லி உள்ளத்தை தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

**சனீசுவரருக்குச் சன்னதி**

சனிபகவானுக்கு என்று தனி சன்னதி இருப்பது இந்தக் கோயிலின் தனிச்சிறப்பு ஆகும். இந்தக் கோயிலின் தல விருட்சம் வன்னி மரம் ஆகும். வன்னி மரங்கள் அடர்ந்த காட்டில் தானாக (சுயம்புவாக) தோன்றிய லிங்கமே தற்போது மூலஸ்தானத்தில் வைத்து பூஜிக்கப்படுகிறது.

இக்கோயிலின்ல் உள்ள "ஏம தீர்த்தம்", மாத்யந்தன், தியான காட்டன் ஆகிய முனிவர்களால் சிவபெருமான் அருளியவாறு தோண்டப்பட்டது ஆகும். இந்தத் தீர்த்தமே சுவாமிகளுக்கும் அம்மனுக்கும் திருமஞ்சனம் செய்ய பயன்படுத்தப்படுகிறது. சன்னதிக்கு வடகிழக்கில் சிவகங்கை தீர்த்தமும் உள்ளது.

**இதய வியாதி குணமாகும்**

கோயிலில் 3 முகம், 3 கை, 3 கால்களுடன் கூடி ஜுரதேவர் எழுந்தருளி இருக்கிறார். தீராத காய்ச்சல், இதய நோய்கள் உள்ளவர்கள், வால்மிளகைப் பசும்பால் விட்டு அரைத்து, ஜுரதேவரின் நெற்றியில் பற்றுப் போட வேண்டும். அது உலர, உலர நோயும் குணமாகிவிடும் என்பது நம்பிக்கை. இது போன்ற ஜுரதேவர் சிலை சில தொன்மையான கோவில்களில் மட்டுமே உள்ளது.

வைகாசி மாதத்தில் பிரம்மோத்சவ விழாவின் போது இங்குத் தேரோட்டம் நடக்கும். ஒவ்வொரு ஆண்டும் வைகாசி மாதத்தில் பிரம்மோத்சவப் பெருவிழா கொண்டாடப் படுகிறது. வைகாசி திருவிழாவின் போது சுவாமி-அம்மனுக்கு திருக்கல்யாணமும், ரத உற்சவமும் நடக்கிறது. இது தவிர ஆடி மாதத்தில் 1008 திருவிளக்கு பூஜையும், ஆவணியில் விநாயகர் சதுர்த்தியும், புரட்டாசியில் நவராத்திரியும், ஐப்பசியில் கந்த சஷ்டியும், மார்கழியில் தனுர்மாத பூஜையும், மாசியில் மகாசிவராத்திரியும் சிறப்பாக நடந்துவருகின்றன. ❖

# கண்ணொளி வழங்கும் கச்சபேசுவரர்

கார்த்திகை மாதம் சூரியனுக்குரிய மாதமாகும். இம்மாதத்தில் சூரிய தீர்த்தங்களில் நீராடி சூரியனை வழிபட்டால் கண்பார்வைக் கோளாறுகள் நீங்கும். இதை விளக்கும் வரலாறு ஒன்றை காஞ்சீபுரத்தில் காண்கின்றோம். காஞ்சீபுரத்தில் உள்ள கச்சபேசுவரர் ஆலயம் சூரியன் வழிபட்ட தலமாகும். இங்கு முருக்க மரத்தின் கீழ் ஜோதி வடிவமாக தோன்றிய லிங்கத்தை ஆமை வடிவம் கொண்ட திருமால் அமிர்தத்தால் வழிபட்டுப் பேறு பெற்றார். இக்கோயிலில் புகழ்பெற்ற சூரிய தீர்த்தம் உள்ளது. இதில் கார்த்திகை மாதத்து ஞாயிற்றுக் கிழமைகளில் நீராடி பெருமானை வணங்கினால் நல்ல பார்வை கிடைக்கும்.



ஒரு காலத்தில் ஒரு மன்னனின் மகன் இங்கு தங்கிக் கல்வி பயின்று வந்தான். பகைவர்கள் அவனுக்கு நஞ்சு கலந்த சோற்றை அளித்துக் கொல்ல முயன்றனர். அதிர்ஷ்டவசமாக அவன் உயிர் தப்பியபோதும் கண் பார்வை போய்விட்டது. அவன் வருந்தித் திகைத்த போது கச்சபேசுவரர் ஆலயத்தைப் பற்றியும் அங்குள்ள சூரிய தீர்த்தத்தின் மகிமையையும் கேள்விப் பட்டான். இங்கு தங்கி முறைப்படி நீராடிப் பெருமானை வணங்கினான். அவனது இழந்த பார்வை மீண்டும் கிடைத்தது. தனது நன்றியைத் தெரிவிக்கும் விதமாக மயூர சதகம் என்ற நூலை இயற்றினான். இது சூரியனின் பெருமைகளைப் பேசுவதாகும். இதனைச் சூரிய சதகம் என்றும் அழைப்பர்.

இக்கோயிலில் ஆண்டுதோறும் கார்த்திகை மாத ஞாயிற்றுக் கிழமைகளில் விழா கொண்டாடப்படுகிறது. ஏராளமான மக்கள் இந்தத் தீர்த்தத்தில் நீராடி வழிபடுகின்றனர். இந்தத் தீர்த்தக் கரையில் விநாயகர், ஐயனார், சூரியன், பைரவர், துர்க்கை ஆகிய ஐவருக்கும் தனித் தனி ஆலயங்கள் அமைந்துள்ளன. இதனால் இந்த இடம் பஞ்சசந்தி என்று அழைக்கப்படுகின்றது.

மக்கள் கார்த்திகை ஞாயிறு அன்று மண்டை விளக்குப் பிரார்த்தனையைச் செலுத்துகின்றனர். புதிய மண் சட்டியில் அரிசி மாவுடன் தேங்காய், பழம், ஆகியவற்றை வைத்து நடுவில் நெய்விளக்கேற்றித் தலையில் வைத்துக்கொண்டு ஆலயத்தை வலம் வருகின்றனர். இதனால் மண்டையிடி, மூளைக் காய்ச்சல் போன்ற நோய்கள் வராது என்று நம்புகின்றனர். ❖


Nalli®
பேரழகி
எம்ப்ராய்டரி
பட்டுப் புடவைகள்
PLATINUM JUBILEE
Nalli
75 years
Since 1928
நல்லி சின்னசாமி செட்டி
பனகல் பார்க், தி.நகர், சென்னை—17. தொ.பே. : 24344115.
FAME/NALLI/2804



**Satisfy all your needs in life with IOB's complete gamut of loans and facilities.**



## Retail Gem
A gem of a loan for growing retailers.

## Subha Gruha
The most hassle-free housing loans at most affordable interest rates and FREE accident insurance.

## E-See Banking
Our Internet Banking Service

## Sahayika
A fast and hassle-free loan for your urgent social financial commitments.

## Personal Loan Scheme
An easy loan to convert all your desires into realities.

## Home Loans for NRIs
A loan scheme that helps you own your dream home in your homeland.

## Pushpaka
The 'Easy-to-pick-up' Vehicle Finance Scheme.

*For more details, contact your nearest IOB branch.*

इण्डियन ओवरसीज़ बैंक

**Indian Overseas Bank**

Good people to grow with

**Central Office : 763, Anna Salai, Chennai-600 002.**

**www.iob.com**




சிறப்பாசிரியர் மற்றும் திருமிகு **ஜி. இராமகிருஷ்ணன்,** இ.ஆ.ப., ஆணையர்,
வெளியிடுவோர் : தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையஆட்சித்துறை, சென்னை - 600 034.தொலைபேசி : 28334811/12/13
ஆசிரியர் : கவிஞர் டாக்டர். த. அமிர்தலிங்கம், எம்.ஏ., பி.எச்.டி.,
அச்சிடுவோர் : இராயப்பேட்டை எழுதுபொருள் அச்சு மற்றும் உபபொருள்கள் உற்பத்தியாளர் தொழிற் கூட்டுறவு
சங்கம் லிமிடெட். சென்னை-14. தொலைபேசி எண் : 28485670

With best compliments from :



With best compliments from

# SARATHA'S - TRICHY



This is the time to Visit "SARATHAS" at Trichy and Chennai for the latest designs and Combination in Silk Kancheepuram and Dharmavaram, Banaras Silk Sarees. Cotton, Polyester, Handloom Saree, Suiting, Shirting, Fabrics and each in fabulous ranges.

**Trichy**
Gram "Super Silk"
45, N.S.B. Road, Trichy - 620 002.
**Phone : 2702077**

**Chennai**
827, Dhun Building,
Anna Salai, Chennai - 600 002.
Phone : 28521177